REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



# கிழக்கின் விகிதாசாரம் மாறுமா?



கிழக்கில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில், அரசாங்கம் தனது படைபலம் உயர்ந்ததாக இருக்கின்றது என்று வெளிப்படுத்தி நிற்கிறது. அதிவேகமாக கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தப் போவதாக கங்கணம் கட்டி ஊடகங்களுக்கு பெரிதாகக் கூறி வருகிறது.

கிழக்கை அரசாங்கம் கைப்பற்றியுள்ள போதிலும் விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடிவடிக்கைகளை முழுமையாக நிறுத்தி விட்டதாக கூறமுடியாது. கிழக்கை அரசாங்கம் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் குறைந்தது இன்னும் 30 ஆயிரம் படையினர் தேவைப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. பாரிய பொருளாதாரத் தேவையும் ஏற்படும். எனவே கிழக்கின் வெற்றி அரசுக்கு மிகப் பெரிய சுமையை ஏற்படுத்தப் போகிறது.

தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு மாகாணம் சிங்கள மொழிபேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணமாக மாறிப்போய் விடுமா என்று தமிழ் - முஸ்லிம் மக்கள் தற்போது சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஏனெனில் தற்போது தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்த திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பாக மூதூர் கிழக்கில்- திடீர், திடீர் என புத்தர் சிலைகள் முளைக்கின்றன. புதிய, புதிய கண்டு பிடிப்புக்கள் எல்லாம் அங்கு நடைபெறுகின்றன. இது புதிய குடியிருப்புக்களை உண்டாக்குவதற்கான முன் ஆயத்தங்களாக இருக்கக் கூடும் என்று தமிழ் மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள். அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்குரிய காணிகளில் சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறுகின்றனர் என்றும் சிலைகளைப் புதைத்துவிட்டு புனிதபூமி என்று அப்பகுதியை பறிமுதல் செய்ய பகிரங்கமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் கருத்தில் கொள்ளாது சிறுபான்மை இனத்தை சேர்ந்த அரசியல்வாதிகள் தனிப்பட்ட அரசியல் இலாபம் கருதி, பேரினவாதத்தின் செல்லப்பிள்ளைகளாய் இருப்பதற்கு ஆசைப்படுகின்றனர். கிழக்கின் மீட்பை மக்களுக்கு கிடைத்த வெற்றி யாக அவர்கள் பறைசாற்றுகின்றார்கள். கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய ஆதிக்கம் பறிபோகக் கூடியதொரு தோற்றப்பாடு இப்போதே நிதர்சனமாகிக் கொண்டிருக்கின்ற நிலையில் கவலை எதுவும் கொள்ளாது அரசின் பிரசாரப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். சமூகத்தின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையற்றவர்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யவும், கிழக்கு மாகாண சபைக்கு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு வரவும் அரசாங்கம் அவசரப்படுவ தன் பின்னணியானது வெளிநாடுகளிலிருந்தும் நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே.

முதலில் யுத்தம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்- முஸ்லிம் மக்களின் நிரந்தரக் குடியிருப்புக்கான நடவடிக்கை களை அரசு மேற்கொள்ள வேண்டும்.

**மூதூர் கிழக்கான்**

நிரந்தரக் குடியிருப்புக்கான் நடவடிக்கைகள் ஆமை வேகத்திலேயே காணப்படுகின்றன. அதுமட்டுமன்றி மூதூர் பகுதியில் சமுர்த்திக் கொடுப்பனவில் அப்பகுதி மக்களுக்கு குறைப்புச் செய்யப்படுகின்றது. அங்கு பாதிக்கப்பட்ட வீடுகளை கட்ட நஷ்ட ஈடு கொடுப்பதாக கொடுத்த வாக்குறுதிகள் இன்னும் பூரணமாக நிறைவேற்றப்படவில்லை.

மூதூரில் மீனவர்கள் மீன் பிடிக்க கடலில் 2 கிலோ மீற்றர் தூரம் மட்டுமே போகமுடியும், அதுவும் தோணியில் மட்டுமே போகலாம். இப்படிப் பல கட்டுப்பாடுகள்.

இதற்கிடையில் மூதூர் கிழக்கு, சம்பூர் பகுதிகளிலிருந்து வெளியேறிய தமிழர்கள் தொடர்ந்தும் உறவினர்களின் வீடுகளிலும், அகதிமுகாம்களிலும் தஞ்சம் என்ற நிலையில் கிழக்கில் ஆங்காங்கே வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களுக்கு ஒழுங்கான முறையில் அரச நிவாரணங்களைக் கூட வழங்குவதாக இல்லை. ஒரு புறம் அவர்கள் படையினரின் சோதனைக் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதேவேளை மூதூர் கிழக்கு மக்கள் வாழ்நாளில் முன்னர் ஒரு போதும் இல்லாத அளவுக்கு கஷ்டங்களை தினமும் அனுபவித்து வரு கின்றனர். குழந்தைகள், வயோதிபர்கள், கர்ப்பிணிப் பெண்கள் கண்ணீர் வடிக்கின்ற னர்.

கிழக்கில் பல இடங்களில் மனிதப் படுகொலைகள் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருக் கின் றன. வீடுகளில் கொள்ளை நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

இதனால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை இல்லை. கிழக்கு மாகாண சபைக்காக அரசாங் கம் தேர்தலை நடத்துமானால் அங்கு இரத்தக் களரி ஏற்படும் என்று விடுதலைப்புலிகள் எச்சரிக்கை விடுத்திருப்பதனை சாதாரண விடயமாக கருத முடியாது. கிழக்கின் நிலைமை தற் போது மிக ஆபத்தான தாகவே காணப்படுகின்றது.

---

# பாரதீய ஜனதாவுடன் கூட்டணியை நோக்கி நகரும் ஜெயலலிதா

பாரதீய ஜனதாவுடன் ஏற்கனவே இரு தடவைகள் கூட்டணி வைத்து முறித்துக் கொண்டவர் ஜெயலலிதா. கடைசி முறிவு காஞ்சி சங்கராச்சாரியாரை, முதல்வரான ஜெயலலிதா கைது செய்தபோது 2004இல் ஏற்பட்டது. அதன் பிறகு முதல் தடவையாக உறவு முகிழ்க்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இரு கட்சிகளுமே ஆட்சியை இழந்து அம்போ என்ற நிலையில் தான் பரஸ்பர உறவுக்கு மீண்டும் தயாராகி வருகின்றன.

நாடாளுமன்றத் தேர்தல், சட்டசபைத் தேர்தல் இரண்டிலும் மண்கவ்விய ஜெயலலிதா தி.மு.க.

**என்.வீரேந்திரஜித்**

அணியை உடைக்க முயன்றும் முடியவில்லை. பா.ம.க. கூட தி.மு.க.வை விமர்சிக்கிறதே தவிர அணியை விட்டு வெளி வரவில்லை.

காஞ்சி சங்கராச்சாரியாரை கைது செய்தபோது ஜெயலலிதாவை பி.ஜே.பி. மூர்க்கமாக எதிர்த்தது. தி.மு.க., காங்கிரஸ் போன்ற எதிர்க்கட்சிகள் கூட ஜெயலலிதாவை திட்டாத முறையில் பி.ஜே.பி. திட்டித் தீர்த்தது. ஆத்திரமடைந்த அம்மா தொடர்ந்து வந்த சட்டசபைத் தேர்தலில் பி.ஜே.பி.யை தனது அணியில் சேர்க்காமல் தண்டித்தார். இதனால் 1996இல் தனித்துநின்று ஓர் ஆசனம் வென்ற பி.ஜே.பி.யால் 2006 சட்டசபைத் தேர்தலில் தனித்து நின்று ஓர் ஆசனம் கூட பெற முடியவில்லை. தான் சிறையிட்ட வைகோவை கூட அரவணைத்து அவருக்கு 6 இடங்களில் வெற்றி கிட்டச் செய்த அம்மா பி.ஜே.பி. யின் கொட்டத்தை அடக்குகிறேன் பார் என தனித்துப் போட்டியிட விட்டார்.




அதன் பிறகு மூன்றாவது அணி அமைக்க பலமாக முயன்றார். சமாஜவாதிக் கட்சிக்கு ஆதரவாக உத்தரப்பிரதேசத்துக்கு சென்று வேறுபிரசாரம் செய்தார். ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸின் மூக்கை உடைப்பதற் காகவே அவ்வாறு செய்தார். ஆனால், உத்தரப்பிரதேசத் தேர்தலில் சமாஜவாதிக் கட்சி தோற்றதால் ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது அணிக்கு அவ்வளவாக வாய்ப்பு இல்லாது போனது. காங்கிரஸ் வேட்பாளர் பிரதீபாவுக்கு வாய்ப்பு அதிகரிக்கலாயிற்று. இதனால் கடைசி நேரத்தில் ஏனைய மூன் றாவது அணித் தலைவர்களின் அனுமதி இன்றி ஜெயலலிதா பி.ஜே.பி. வேட்பாளரை ஆதரித்தார். மூன்றாவது அணியின் தலைவர் பதவியை ஜெயலலிதா கோரியதாகவும் சந்திரபாபு நாயுடு, முலாயம் போன்ற ஏனைய தலைவர்கள் அதற்கு இணங்க வில்லை என்றும் கூறப்படுகின்றது.

கருணாநிதியை அகற்ற ஒரே வழி காங்கிரஸை பதவியிலிருந்து வீழ்த் துவது தான் என்ற உண்மையை அம்மா புரிந்து கொண்டதால், வேறு வழியின்றி பி.ஜே.பி.யின் கூட்ட ணியை நாட விரும்புகிறார். அணுச் சக்தி ஒப்பந்த விவகாரத்தால் இடது சாரிகள் மத்திய அரசை கவிழ்த்தால் தேர்தல் வரக்கூடும் என்று கருதப்படு வதால் பி.ஜே.பி. யுடனான புதிய கூட்டணிக்கு அத்திவாரம் ஒன்றை இப் போதே போடுவதற்கு ஜெயலலிதா தயார்செய்கிறார் என்றும் கூறப்படுகின்றது.



விரைவில் பி.ஜே.பி. மாநாடு ஒன்றில் கலந்து கொள்ள சென்னை வரவுள்ள அத்வானியை அம்மா சந்திக்கவுள்ளார். அதன்போது கூட்டணி பற்றி தீர்மானிக்கப் படவுள்ளது என்று ஊகம் தெரிவிக்கப் படுகிறது. ஜெயலலிதா குறித்து என்றுமே நம்பிக்கை இருந்ததில்லை, ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்த காலத்தில் ஒரு நாளும் சரியாகத் தூங்க முடியவில்லை என்று வாஜ்பாய் ஒருமுறை கூறியிருந்தார். வாஜ்பாய் அரசு ஜெயலலிதா வால் ஒரு சமயம் கவிழ்க்கப்பட்டது பி.ஜே.பி.க்கு ஒரு பாடம்.

**பக்கத்து வீடு**

எனினும் சமீபத்தில் பி.ஜே.பி.யின் மற்றொரு மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத் சென்னையில் அம்மாவை சந்தித்துச் சென்றுள்ளார். பி.ஜே.பி.யுடனான புது உறவுக்கு அடித்தளமாக சேது சமுத்திரத் திட்டத்தில் ஏற்கனவே உள்ள இராமர் அணையை அகற்றுவதற்கும் அம்மா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அணுசக்தி ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புக் காட்டுவதிலும் பி.ஜே.பி.க்கு அம்மா ஒத்து ஊதி வருகிறார். பி.ஜே.பி.யுடனான மனக் கசப்பை மறக்க அவர் தயார் என்பதையே இவை எல்லாம் சுட்டிநிற்கின்றன.

கடந்தகாலத்தில் அம்மாவால் நன்றாக எடுத்தெறியப்பட்ட பி.ஜே.பி.யும் பிழைக்க வேறுமார்க்கமின்றி மீண்டும் அம்மாவிடம் சரண்புகத் தயாராகி விட்டது. நாடாளுமன்றத் தேர்தல் வந்தால் ஏதோ ஒரு தேசியக் கட்சி யுடன் இணைய வேண்டியதும் அ.தி.மு.க. வுக்கு அவசியமே! பா.ம.க.வும் அ.தி.மு.க. அணியில் இணையலாம் என்று கருதப்படு வதால் அ.தி.மு.க. - ம.தி.மு.க. - பா.ம.க. - பி.ஜே.பி. என வலுவான ஓர் அணியை உருவாக்கமுடியும் என அம்மா கருதுகிறார். கூட்டணி உருவாகுவது நிச்சயமே. ஆனால், தேர்தல் வரத்தான் போகிறதா என்பதே கேள்வி.

CIMA

# ஆசையா? *m*

## உங்களின் தொழில்வாழ்வை சிறப்பாக அமைத்துக்கொள்ள

**சிஐஎம்ஏ** அதிக தொழில் தெரிவுகளை உங்களுக்கு வழங்குகின்றது. முக்கிய தொழில் திறமைகளுக்கு வலுவூட்டுவதுடன் இந்த சிஐஎம்ஏ தகுதியானது. நிதித்துறை முகாமைத்துவத்துக்குள்ளேயும் வெளியிலுமான தொழில் தெரிவுகளை மிகவும் பரந்த துறைகளுக்கு விரிவுபடுத்துகின்றது.

உயர் சாதனையாளர்கள் சிஐஎம்ஏயையே தெரிவு செய்கின்றார்கள். சிஐஎம்ஏயை தெரிவு செய்வதன் மூலம் ஓர் உத்வேகமிக்க, நிறை பயன் தரும் தொழிலை நோக்கிய முதல் அடியை எடுத்து வைக்கிறீர்கள். ஒரு தொழிலுக்கான தகுதி என்ற முறையில் நீங்கள் வெறும் எண்ணிக்கையைக் குறிக்கும் ஒருவராக இருக்கமாட்டீர்கள் என்பதை அது உறுதிப்படுத்துகின்றது. அத்தோடு உயர் தராதரங்களையும் உத்தரவாதப்படுத்துகிறது என்பது நிதர்சனம். உங்கள் தொழில் காலம் முழுவதிலும் புதிய கதவுகளை அது திறந்து விடுவதாக அமையும். சிஐஎம்ஏ உறுப்பினர்கள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளில் இருக்கிறார்கள். இது காலத்தின் உண்மை. இது

பெரும் சாதனைகளை நிலைநாட்ட வழியிட்டுச் செல்கிறது என்பது நிரூபணமாகியுள்ளது. சிஐஎம்ஏ தொடக்கம்தான்.

உங்களின் தொழில் வாழ்வு எவ்வாறு மேம்பாட்டுடன் அமைய வேண்டும் என்ற இறுதி முடிவை நீங்களே எடுக்கவேண்டும்.



CIMA Colombo, 356 Elvitigala Mawatha, Colombo 5

T. 2503880 | F. 2503881 | E. colombo@cimaglobal.com | www.cimaglobal.com

CIMA Kandy, 254 Peradeniya Road, Kandy

T. 081 2227882 | F. 081 2203843 | E. kandy@cimaglobal.com

# 'றோ' தலைவரின் விளக்கங்களும் தமிழர் தரப்பு நியாயங்களும்



இலங்கையில் இந்திய அமைதிப்படை நிலைகொண்ட காலத்தில் 'றோ' அமைப்பின் தலைவராகத் திகழ்ந்தவர் ஏ.கே.வர்மா.

அண்மையில் புதுடில்லியிலுள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் அவர் ஆற்றிய உரை , இந்தியத் தலையீடு குறித்த விமர்சனப் பார்வையிலான மதிப்பீடுகள் கலந்து உள்ளடக்கப்பட்டிருந்தது.

ஈழத்தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை பகிரங்கமாகவே ஏற்றுக்கொள்ளும் ஏ.கே.வர்மா, இந்திய வெளியுறவுக்கொள்கை வகுப்பாளர்களின் மேம்போக்கான இனப்பிரச்சினைப் புரிதல் குறித்த பலவீனங்களையும் சுட்டிக்காட்டுகிறார்.

இந்தியக் கொள்கை வகுப்புக் கட்டமைவின் கலந்துரையாடல்களில் இணைந்துகொண்டவர்கள் அதிகார மமதை கொண்டவர்களாகவும், மேலாதிக்கமிக்க கனவான் தன்மையுடையவர்களாகவும் பிரச்சினைக்குரிய விடயத்தில் நிபுணத்துவமும், அறிவு அல்லது புரிந்துணர்வு அற்றவர்களாகவும் இருந்துள்ளார்களென்பதை தெளிவாக முன்வைக்கிறார்.

'றோ'வின் தலைவருக்கு ஏற்பட்ட இனப்பிரச்சினை குறித்த புரிதல், கொள்கை வகுப்பாளர்களின் காட்சிப் புலன்களுக்குள் அகப்படாததை, கட்டமைவுகள் இல்லாத இந்திய வெளியுறவுப் பிரிவின் துரதிர்ஷ்டவசமான பலவீனமென்று கருதவேண்டுமென எதிர்பார்க்கமுடியாது.

இந்திய வெளியுறவுக்கொள்கை நுண்ணரசியலின் நுட்பங்கள், பிராந்திய நலன்சார்ந்து தூரநோக்கற்ற வகையில் தீர்மானிக்கப்படுகின்றனவென்பதை வர்மாவின் உரை வெளிப்படுத்துகிறது.

83 ஜூலை இன அழிப்புக் கலவரத்தால் பாதிப்புற்ற தமிழ்மக்கள், தமிழகத்தை நோக்கி அகதிகளாக இடம்பெயரத் தொடங்கியவுடன் இனப்பிரச்சினையின் தீவிரத்தன்மையை இந்தியா உணரத் தலைப்பட்டதென்கிறார் வர்மா.

தலையீட்டுக்கான காரணிகளாக மனிதாபிமானப் பார்வையினை முன்வைத்தாலும் அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் இராஜதந்திர ஊடுருவல்களை முறியடிக்க, தமிழ்க்குழுக்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளித்து, இலங்கை மீது தொடர்ந்தும் நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்த முடிவுசெய்யப்பட்டதென்பதை பகிரங்கமாகவே அவர் ஒப்புக்கொள்கிறார்.

'இலங்கைத் தமிழர்கள் தாம் பெற்ற உதவிக்காக இந்தியாவிற்கு நன்றிக்கடன் செலுத்தவில்லை' என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

ஆயினும் இலங்கையில் அந்நியரின் ஊடுருவல்களைத் தடுப்பதற்கு ஈழப்போராட்டத்தை பயன்படுத்திய இந்தியாவே, தமிழ்மக்களுக்கு நன்றிக்கடன் படவேண்டிய நிலையிலுள்ளதை உணர்தல்வேண்டும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிடும் வர்மா, இவ்வொப்பந்தம் தமிழர்களுக்கு இரண்டுபெரும் சலுகைகளை வழங்கியதாகவும் தனியொரு மாகாண சபையுடன் வடக்கு மற்றும் கிழக்கில் அதிகாரப் பகிர்வோடு கூடிய தனி நிர்வாக அலகும், 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் இச்சபைக்கு தேர்தலை நடத்த இருந்ததாகவும் குறிப்பிட்டு, பிரபாகரன் அதற்கு இணங்கவில்லையென்று கவலை கொண்டுள்ளார்.

ஒற்றையாட்சி அமைப்புக்குள் மட்டுப்படுத்தப்பட்ட நிர்வாகப் பரவலாக்கத்தைத் தவிர, அதிகாரப் பரவலாக்கத்தை பிரயோகிக்க முடியாதென்பதை உளவுத் தலைவர் புரிந்துகொள்ளவில்லை.

மாகாணசபைக்கு காணியுரிமை பெறுவதற்கு, வரதராஜப்பெருமாள் அரசுடன் நடத்திய சொற்போர்களுக்குச் சாட்சியாக இருந்தவரே இந்த வர்மா.

சிங்களம் தனது ஒற்றையாட்சி முறையை விட்டுக்கொடுக்காது என்பதை பிரபாகரன் எப்போதே புரிந்துகொண்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு இணைப்பு இலங்கை அரசாங்கத்திற்கு மெய்யாகவே ஏற்புடையதாக இருக்கும் எதிர்பார்ப்பும் உண்மையானதல்ல என்பதை உணரும் வர்மா, அரசின் பேரினவாதக் கோட்பாட்டை தெளிவாகப் புரிந்தாலும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு ஆயுதங்கள் அனைத்தையும் கையளிக்க மறுத்து, மாகாண சபைத் தேர்தலில் பங்கேற்பதை புலிகள் தவிர்த்தது அமைதிப்படையை அழிப்புப் படையாக மாற்றியதாக நியாயப்படுத்துகிறார்.

ஆனாலும் இந்திய அமைதிப் படையால் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் குறித்து இவர் வாய் திறக்கவேயில்லை.

இந்திய அமைதிகாக்கும் படை தமிழ்ப் பகுதிகளில் இராணுவமயத்தை அழிக்கும் பணியை ஒழுங்கு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட வேளையில், விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாத நிலையில் இந்திய அதிகாரிகள் அமைதிப்படையை பலவந்தத்தில் ஈடுபடுவதற்கு அனுமதித்ததாக விளக்கமொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தியப்படை உள்நுழைய முன்பாகவே முழுமையான திட்டவரைபொன்று நிச்சயம் அவர்களிடம் இருந்திருக்கும். 'றோ'விற்கு அதில் உடன்பாடில்லை என்பதெல்லாம் ஏற்கக்கூடிய காரணிகளல்ல.

வெளிநாட்டு புலனாய்வுத் தகவல்களைத் திரட்டி, அறிக்கை தயாரிப்பதோடு, கொள்கை வகுக்கும் குழுவிலும் 'றோ'விற்கு பங்குண்டு.

ஸ்ரீலங்காவின் களநிலைமை குறித்து 'றோ' வழங்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே கொள்கை வகுப்பின் அத்திவாரம் அமைக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் பணியாற்றும் 'றோ' அதிகாரிகள் திரட்டும் உளவுச்செய்திகள், டெல்லித் தலைமைக்கு அனுப்பப்பட்டு ஆய்விற்குட்படுத்தப் படுகின்றன.

அதேவேளை, இந்தியா சார்பான தமிழ்இயக்கங்கள் ஊடாகவும் தாயக நிலவரம் பற்றிய களச்செய்திகள் பெறப்படுகின்றன.

இந்நிலையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் நடைமுறைக்குள்ளாவதை உறுதிப்படுத்த இராணுவ மயமாக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் ஆயுதக் களைவினை மேற்கொள்ள வேண்டிய விடயமும் இந்திய

சி.இதயச்சந்திரன்

நிகழ்ச்சி நிரலில் நிச்சயம் இடம்பிடித்திருக்கும்.

இது தற்செயலான தவிர்க்கமுடியாத விடயம்போல் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஸ்ரீலங்காவை நம்பும் அளவிற்கு விடுதலைப் புலிகள், அரசியல் விழிப்புணர்வு அற்றவர்கள் அல்லவென்பதும் இந்தியாவிற்குத் தெரியும்.

புலிகள் மீது தொடுக்கப்பட்ட போர், தவிர்க்கமுடியாத நிலையில் மேற்கொள்ளப்பட்டதாக கூறுவதைவிட, தனது நலன் நிறைவேற்றப்பட்டவுடன் அதற்குத் தடையாக இருப்பவற்றை அழிக்க முன்னெடுக்கப்பட்டதாகவே கருதவேண்டும்.

எந்தவிதமான அரசியல் தீர்வையும் பௌத்த சிங்கள மேலாதிக்கமானது தமிழர்களுக்கு வழங்காதெனக் கூறும் வர்மா, மாகாண சபைத் தீர்வினைக் கூடச் சிங்களம் அனுமதிக்குமாஎன்பதிலும் சந்தேகம் கொண்டுள்ளார்.

அவ்வாறான நிலையில் இந்தியாவினால் கொண்டுவரப்பட்ட மாகாண நிர்வாக அதிகாரங்கள் நடைமுறைச் சாத்தியப்பாடற்றவையென்பதையும் அவர் ஏற்றுக்கொள்கிறார்.

பிரபாகரன் இதை ஏற்றுக்கொள்ள மாட்டாரெனக் கூறுவதெல்லாம் ஆக்கிரமிப்புப் படையாக அமைதிப்படை மாற்றப்பட்டதற்காகக் கூறும் நொண்டிச் சாட்டுகளே.

புலிகள் உடன்பட்டிருந்தால், நடக்கமுடியாத விடயங்களெல்லாம் நடத்திருக்கலாமென யாருக்குத் தமது நியாயப்பாடுகளை சொல்லவிரும்புகிறார்வர்மா.

ஆயினும், தமிழீழப் போராட்டம் தமிழகத்தில் திராவிடத் தேசிய வாதத்தை தூண்டக்கூடிய வகையில் அமையவில்லையெனக் கூறும் அவர், தமிழீழம் பிரிந்தால் தமிழ்நாட்டில் பிரிவினைக்கோரிக்கை உருவாகலாமென முன்வைக்கப்படும் இந்திய அச்சத்தை நிராகரிக்கிறார்.

தமிழ்நாட்டை உள்ளடக்கிய அகண்ட தமிழீழம் தமிழர்களின் கனவாக இருப்பதாக சிங்கள இனவாதிகள் தொடுக்கும் பரப்புரையை விழுங்கி தாளம் போடும் சில இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கு வர்மாவின் விளக்கம் போதுமானது.

திராவிட முன்னேற்றக்கழகம் அமைத்த அறிஞர் அண்ணா, தமிழ்ப்பிரிவினை வாதத்தை உள்ளடக்கிய தமிழ்த் தேசியவாதத்தை 1962 இல் நிராகரித்த வரலாற்றை தனது வாதத்திற்கு வலுச்சேர்க்க வர்மா முன் வைக்கிறார்.

இறுதியாகத் தமிழர் பிரச்சினை குறித்து சிங்களத்தின் ஒற்றைப் பரிமாண மனோநிலையை தெளிவாகவே கூறுகிறார்.

அதாவது, 'தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 1985 ஆம் ஆண்டு திம்புவில் தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட ஒற்றையாட்சிக்குள் மாவட்ட அபிவிருத்தி சபைகளை விட வேறு எதையும் வழங்கவில்லையென்றும் சிங்களத் தலைமை தமிழர்கள் பால் கொண்ட தமது மனோபாவத்தில் ஒரே மாதிரியாகவே உள்ளார்களென்றும் கூறுவதில் இருந்து இந்தியாவின் தெளிவுநிலை புரிகிறது.

பிரபாகரனின் உறுதியான சிங்களம் பற்றிய நிலைப்பாட்டிற்கு எதிரான கருத்தாடல்களை வர்மா முன் வைக்கவில்லையென்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

வடக்கு -கிழக்கு இணைக்கப்படாமல், இப்பிரச்சினை இன்னும் சில ஆண்டுகள் நீடிக்குமென்பதே வர்மா கூறும் முடிவுரைச் செய்தி.

இந்திய அமைதிப்படை காலத்தில், கொள்கை வகுத்த மேலாதிக்கக் கனவான்கள், இன்னமும் பிரச்சினை குறித்த நிபுணத்துவமும், அறிவூட்டலும், புரிந்துணர்வும் அற்றநிலையில் இருக்கிறார்களாவென்று தெரியவில்லை.

இரகசியப் பாதையில் ஸ்ரீலங்காவிற்கு வழங்கப்படும் ஆயுதங்களும், உளவுத் தகவல் பரிமாற்றங்களும், கடல்ரோந்து களும் கொள்கை வகுப்பாளர்களின் நிலைப்பாட்டில் மாறுதல் ஏற்பட வில்லையென்றே சுட்டிநிற்கிறது.

எத்தனையோ தடவைகள் இந்தியா குறித்த தமது பிராந்திய அரசியல் நிலைப் பாட்டை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தி னாலும் சாதகமான சமிக்ஞை இந்தியாவிடமிருந்து வெளிவரவில்லை.

(35 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளுக்கு காலம் கனிகிறது!

'மௌனம் கலக நாஸ்தி' என்பார்கள். ஆனால், புலிகளின் அமைதியான மௌனம் கலக ஜாஸ்தி என்ற அர்த்தத்தையே பலருக்கும் இப்போது தந்திருக்கின்றது.

கிழக்கில் படையினர் தாக்குதல் நடத்தப் புலிகள் பின்வாங்குகின்றார்கள். குடுமி மலையை படைகள் கைப்பற்ற புலிகள் அங்கிருந்து நழுவிவிட்டனர். மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறையில் ஆயுதப்படைகள் எதிர்ப்பின்றியே வீறுநடைபோட்டு முன்னேறுகின்றன. கடலில் - அதுவும் இலங்கையின் எல்லையிலிருந்து ஆயிரத்து இருநூறு கிலோ மீற்றர்களுக்கு அப்பால் ஆழ்கடலில் - சர்வதேசக் கடற்பரப்பில் - புலிகளின் மூன்று கப்பல்களை வரிசையாகத் தகர்த்தோம் என்று அரசுத் தரப்பு வெற்றிக் கர்ச்சனையாக மிதப்போடு மார்தட்டி அறிவிக்கின்றது. அத்தாக்குதல் பற்றிய விவரணப் படங்களை யும் அரசுத்தரப்பு வெளியிட்டு பிரசாரப்படுத்து கின்றது. இந்தத் தாக்குதலோடு கடற்படைத் தளபதியின் பதவிக்காலமும் மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்படுகின்றது. ஆனால், புலிகள் தரப்பிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. கடற்புலிகள் ஓய்ந்துகிடக்கின்றார் களோ என்ற சந்தேக நிலைமை.

'கிழக்கு மீட்பு விழா', 'புலிகளின் கப்பல்கள் தகர்ப்பு வெற்றித் திருவிழா' என்றெல்லாம் வீரப்பெறுபேறுகளை பிரகடனப்படுத்தும் பல்வேறு கொண்டாட்டங்களைத் தென்னிலங்கை நடத்துகின்றது.

அதேசமயம், யாழ்குடாநாடு உட்பட பரவலாகப் பல் இடங்களில் முன்னர் விடுதலைப் புலிகள் நடத்திவந்த கிளைமோர்த் தாக்குதல்கள் உட்பட ஏனைய அதிரடிகள் கூட

**- நவின் -**

அடியோடு அடங்கிப்போய் விட்டன. கொழும்பில் புலிகளின் அசமாத்தமே இல்லை என்ற நிலைமை. தமிழர் தாயகப் பிரதேசங்களில் பெயருக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது இடம்பெறும் சில நொட்டுதல் களோடு சரி.

போதாக்குறைக்கு முகமாலை, நாகர் கோயில், கிளாலி முன்னரங்கப் பகுதிகளில் படையினரின் பிர தேசத்துக்குள் ஊடுருவமுயன்ற விடுதலைப் புலிகள் இருவர் பலி, மூவர் சுட்டுக்கொலை, நால்வர் மரணம் எனப் படைத்தரப்பு ஒவ்வொரு நாளும் புலிகளின் உயிரிழப்பு என்றொரு கணக்குக் குறித்து வரிசையாக அறிவிப்பு நடத்துகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தால் போல ''கிழக்கில் இருந்து புலிகளை விரட்டியடித்துப் புலிப் பயங்கரவாதத்தை வன்னிக்குள் மட்டுப் படுத்திவிட்டோம். அங்கிருந்தும் அவர்களை ஓட விரட்டி நூறு வீதம் பயங்கர வாதத்தை அழித்தொழித்த பின்னரே அமைதி முயற்சி சாத்தியமாகும்'' - என சூளுரைக்குமாப் போல பிரகடனம் செய்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அரச பாதுகாப்புத்துறையில் ஜனாதி பதிக்கு அடுத்து அதிக செல்வாக்கும் அதிகாரமும் கொண்டவருமான கோட்டபாய ராஜபக்ஷ. அதுவும் மூத்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பக்கத்தில் வைத்துக்கொண்டுதான் இந்தப் பகிரங்க அறிவிப்பை அவர் விடுக்கிறார்.

ஆனால், இவையெல்லாம் நடந்தேற புலிகளோ வன்னிக்குள் முடங்கி, எதுவும் செய்யாமல் - எந்தப் பிரதிபலிப்பையும் காட்டாமல் - அமைதி காக்கின்றார்கள்.

இவ்வருட முற்பகுதியில் - மார்ச் மாதம் பிற்பகுதியில் - ஆரவாரமாக வான்புலிகள் மூலம் விமானத் தாக்குதல்கள் சிலவற்றை நடத்தி முடித்த கையோடு புலிகளின் வீரப் பிரதாபம் அடங்கிப்போய்விட்டதோ என்று பலரும் மலைத்துப்போய் நிற்கின்றார்கள். புலிகளின் முதுகு முறிக்கப்பட்டுவிட்டது, இனி அவர்கள் நிமிரவே முடியாது என மகிழ்ந்து கொண்டாடுகிறது சிங்களம். அதனை உறுதிப்படுத்துமாற்போல புலிகளின் மௌனம் கலையாமல் நீடிக்கிறது.

இந்த அசாதாரண அமைதியின் பின்னால் புதைந்திருக்கக்கூடிய - பொதிந்திருக்கக் கூடிய - ஆழத்தின் மர்மத்தைப் புரியாது தமிழர்கள் மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தவர்கள் மட்டுமல்ல, தென்னிலங்கைச் சிங்களமும் தவியாய்த் தவிக்கின்றது என்பதுதான் உண்மை நிலைமை.

ஆனால், புலிகள் வாய்ச்சொல் வீரர்கள் அல்லர். வாய்ப்பந்தல் போடும் மூன்றாம் தர, அரசியலுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமேயில்லை.

எதிர்பாராததை, எதிர்பாராதவேளையில், எதிர்பாராத முறையில் செய்து முடிப்பதும், செய்யப்போவதைச் சொல்லாமல் இரகசியம் காப்பதும் புலிகளின் பண்பு.

பார்க்கும்போது பதுங்குவது போலத் தோன்றும் புலிகள், பாயும் போதுதான் அந்தப் பதுங்கலின் தாற்பரியம் புரியவரும்.

புலிகளின் இப்போதைய மௌனத்தை - அசாதாரண நிசப்தத்தை - புயலுக்கு முந்திய அமைதியாகக் கொள்ளவேண்டும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான் வன்னிக்கு விஜயம்செய்த வத்திக்கானின் விசேட பிரதிநிதியான வண.மல்கம் ரஞ்சித்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த 13ஆம் திகதி கிளிநொச்சியில் சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

(31 ஆம் பக்கம் பார்க்க)


## மை வெளிச்சம்

நோய், குடும்பப் பிரச்சினை, வெளிநாட்டு பிரயாணம், விவாக விவகாரம் தீர்த்து வைக்கப் படும். பிறந்த திகதி, மாதம், வருடம் கொண்டு வரவும். நேரம் 9- 5 வரை.

**ஈஸ்வரி**

Dr. P. Thiyagaraja(J.P.Hons)
21-1/1, ஜம்பட்டா வீதி, கொழும்பு- 13.
தொலைபேசி: 2440606
Fax:0094- 1-2440606
www.eswari.com

வெளிநாட்டில் உள்ளவர்கள் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளவும். மேலதிக கட்டணமின்றி நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

## STUDY IN MALYASIA, SINGAPORE, AUSTRALIA, LONDON & CANADA

Minimum Qualification G.C.E(O/L)

For Septemper 2007 Intake

100% VISA Guaranteed

For Malaysia & Singapore:
- IELTS, TOEFL & Bank balance are not necessary.
- 100% Transeferable Degree Programme (UK, USA, CANADA & AUSTRALIA)
- Free (Malaysia One Month Accommodation, Food & Transport)
- 5 நாட்களுக்குள் பயணம்.
- சிங்கப்பூரில் நீங்கள் செலவழித்த பணத்தை நான்கு மாதங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

Guaranteed
தங்குமிட வசதி
பகுதி நேர வேலைவாய்ப்பு

**Guidance by a Professional with 7 years Experience**

**Available Courses**
- Business Administration
- Computing & IT
- Law
- Hotel Management
- Engineering
- Medicine
- Shipping Courses

All Courses are available in any field.
FOR MORE INFORMATION PLEASE CONTACT
Sahana - 0773 946474
Anu - 0773 946466
We assure the best return

**OPEN INSTITUTE OF COLOMBO**

OIC City Campus,
No: 40-3\1A, Galle Road, 3rd Floor
(adjoining HSBC Bank)
Wellawatte,
Colombo-06.
Tel: 011 5752747, Fax: 011 5755235.
Web: www.oiccitycampus.com
E-mail: info@oiccitycampus.com

## தேவை

ஐரோப்பிய உயர்கல்வி நிறுவனத்திற்கு பின்வரும் துறையில் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை

- IELTS Lecturers
- ஆங்கில ஆசிரியர்கள்.
- கணினி Lecturers
- கணினி Instructors
- Air Ticketing Lecturer
- Visa Counsellors (ஆலோசகர்கள்)
- கணினி துறையில் ஆங்கிலத்தில் பூரண தேர்ச்சி பெற்ற பெண்கள் தேவை

ELIZABETH
No: 89, Hospital Road, Kalubowila.
Tel: 0114867744 Mobile: 0725282195
e-mail: elizabethh@sltnet.lk

## STUDY ABROAD

ENGLAND/AMERICA/AUSTRALIA
INDIA/JAPAN/ITALY/NEWZELAND
MALAYSIA/CANADA/CYPRUS/
SWITZERLAND.

DEGREE-DIPLOMA-CERTIFICATE COURSES

- Enrolment Qualifications (G.C.E.O/L)
- Reasonable course Fees
- Cheap Accommadation
- Loan Facilities Available
- IELTS Classes, Computer Classes

ELIZABETH
No: 89, Hospital Road, Kalubowila.
Tel: 0114867744 Mobile: 0725282195
e-mail: elizabethh@sltnet.lk

## மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

இளம் வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக் குறைவு, சக்தி குறைவு, ஞாபக மறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்

- ஆரம்ப மன நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும் பெண்களுக்கும், வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல்,பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம்**

**SEXUAL DISORDERS** (ஆண்மைச் சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை வீணாக்கியது.
- கனவிலும்நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடல்பலவீனம். நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்து விடுவது.
- உறவின்போது விந்து விரைந்து வெளியேறுதல்
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**டாக்டர் ஆறுமுகம்** அவர்களை சந்திக்கும் இடங்கள்

வவுனியாவில்...
2007 ஒக்.06, 07, 08 வரை
Vanni Inn,
2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா,
Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

கொழும்பில்...
2007 செப்டெம்பர் 20 முதல் 28 வரை
New Ahmed Tourist Inn,
BangBang Building
2-2/2, Bankshall Street,
Colombo - 11.
Tel No. 5368426, 5368427
Hot Line: 0777 569205

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்திய முறை செய்யப்படும்**

வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால் மூலம் (தயவு செய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய முறையில் ஓடியோ கசட் பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும் ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

Dr. P. Arumugam,
51/5, Koolavady Road
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 2224019,
Hot Line: 0777 569205.

தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.

சுடர் ஒளி
செப்.23 - செப்.29. 2007
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பாக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

# சர்வதேச சமூகம் தெளிவுபெற வேண்டும்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே தனது நோக்கம் என்று மஹிந்தர் அரசு வெளிநாடுகளுக்கு கூறி வந்தாலும், இராணுவத் தீர்வுதான் முடிந்த முடிவு என்பது தற்பொழுது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ சமீபத்தில் திருகோணமலையில் நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில் மஹிந்தர் அரசின் உள்நோக்கத்தைத் தெளிவாக வெளிப்படுத்தி விட்டார்.

''விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை நூறுசதவீதம் தோற்கடிக்கும் வரை, அமைதித் தீர்வுக்குச் சாத்தியம் இல்லை; ஆகவே, இராணுவ வலிமையைக் கொண்டு பயங்கரவாதத்தை முழுமையாகத் தோற்கடிக்கவேண்டும்'' என்று அவர் கூறியிருக்கிறார்.

ஆகவே, அடுத்த இராணுவ நடவடிக்கை வன்னிமீது என்பதை கோட்டாபய ராஜபக்ஷ சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதே, தமிழ்மக்கள் இழந்து போன உரிமைகளை மீளப்பெறுவதற்குத்தான். ஆயுதம்தான் தமிழ்மக்களுக்கு பலமாக இருந்து வருகிறது. பேச்சுவார்த்தைக்கு ரணில் அரசு இணங்கி, 2002 இல் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதற்கும் இந்த ஆயுத பலம்தான் காரணம். தற்பொழுது போராட்டத்தை அழித்துவிட்டுத்தான் தீர்வுத்திட்டம் என்றால் இனப்பிரச்சினைக்கு தீர்வே இல்லை என்பதுதான் அர்த்தம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை தயாரிப்பதாகக் கூறி சர்வகட்சிக்குழு அமைக்கப்பட்டபோதே அது வெறும் ஏமாற்றுவித்தை என்பதை தமிழர் தரப்பு நன்கு அறிந்திருந்தது. அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்தது. எனினும், மஹிந்தரின் பேச்சில் நம்பிக்கை கொண்டு சர்வதேச சமூகம் சர்வகட்சிக் குழுவின் தீர்வுத் திட்டத்துக்காகக் காத்திருந்தது. தற்பொழுது கோட்டாபயவின் அறிவிப்பு, அரசின் முகமூடியை கிழித்துவிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் பலம்பெற்றுள்ள சமயமே, தமிழர் பிரச்சினைக்கு மாவட்ட சபைகள் தான் தீர்வு என்று சுதந்திரக்கட்சியின் தீர்வு யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகளை - தமிழ்மக்களை அழித்துவிட்டால் மாவட்ட சபைகள் கூட தமிழ்மக்களுக்கு வழங்கப்படமாட்டாது. ஜாதிக ஹெல உறுமயவின் தீர்வுயோசனையான கிராமமட்டத்தில்தான் அதிகாரப்பகிர்வு இருக்கும். தான் விரும்பிய தீர்வு ஒன்றை தமிழ்மக்களிடம் திணிப்பதுதான் மஹிந்தர் அரசின் திட்டம் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையின் அடிப்படையில்தான் தீர்வுகாணப்படவேண்டும்; சமஷ்டிமுறைக்கு இடமேயில்லை என்று மஹிந்தர் ஏற்கனவே தெளிவாகக் கூறிவிட்டார்.

ஆகவே, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மஹிந்தர் அரசு மனதில் வைத்துள்ள காய்நகர்த்தல் பாதை என்ன என்பது, திருகோணமலையில் மஹிந்தர் முன்னிலையிலேயே கோட்டாபய ஆற்றிய உரை வெட்டவெளிச்சமாக்கிவிட்டது.

இப்படியான ஒரு நிலைமை ஏற்படும் என்பது ஏற்கனவே ஊகிக்கப்பட்டதுதான். ஏனெனில், இந்த அரசு இனவாதம் பேசியே ஆட்சிக்கு வந்தது. இனவாதத்தை கக்கியே தற்பொழுது ஆட்சியில் நீடித்து வருகிறது.

ஆகவே, சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சினை குறித்து தனது சிந்தனைகளைத் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும். அரசியல் தீர்வுப் பொதி வருகிறது. அதன் அடிப்படையில் சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாகப் போகின்றன என்ற மாயையில் இருந்து சர்வதேச சமூகம் விடுபடவேண்டும்.

# அன்வர் இஸ்மாயில் மறைவு!

# அதாவுல்லாவின் வாக்கு வங்கியில் சரிவை ஏற்படுத்துமா?



அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், நீர்ப்பாசனத்துறை அமைச்சருமான சட்டத்தரணி எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் திடீர் மறைவு கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

39 வயதே நிரம்பிய அமைச்சர் அன்வர் இஸ்மாயில் தனது சுவாசப்பை பாதிக்கப்பட்ட நிலையில் கொழும்பிலுள்ள பிரபல முன்னணி தனியார் மருத்துவமனையில் இம்மாத முற்பகுதியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு - அது பயனளிக்காத நிலையில் கடந்த வியாழக்கிழமை (2007.09.13) இரவு காலமானார்.

## கொள்கைப் பற்று

மறுநாள் காலை அவரின் ஜனாஸா அவரது சொந்த ஊரான சம்மாந்துறைக்கு விமானம் மூலம் எடுத்து வரப்பட்டு வெள்ளிக்கிழமை ஜும் ஆத் தொழுகையைத் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஷில் ராஜபக்ஷ, அமைச்சர்கள் சமல் ராஜபக்ஷ, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, பி.தயாரத்ன, ரவூப் ஹக்கீம், அதாவுல்லா, றிஷாத் பதியுதீன், அமீர் அலி, பஷீர் சேகுதாவுத், நஜீம் ஏ மஜீத், மயோன் முஸ்தபா, ஹஸன் அலி, பைஸல் காஸிம், நிஜாமுதீன் உள்ளிட்ட அரச உயர் மட்டத்தினரின் பங்குபற்றுதலுடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் அவரது ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

மர்ஹூம் அன்வர் இஸ்மாயிலைப் பொறுத்தவரை முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற அவாவுடன் அரசியலுக்குள் நுழைந்து- கொள்கைப்பற்றுடன் செயற்பட்ட ஓர் இளம் தலைமைத்துவமாக அடையாளம் காணப்பட்டிருந்தார்.

சட்டத்துறை பயின்று கொண்டிருந்த மாணவப் பருவத்திலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களின் பாசறையில் அரசியலைக் கற்றுத் தேர்ந்து- அக்கட்சியின் இளைஞர் காங்கிரஸில் முக்கிய பாத்திரம் ஏற்று- சமூகப் பணியைத் தொடங்கிய அன்வர் இஸ்மாயில் அமைச்சர் அஷ்ரப்பின் நாடாளுன்ற விவகார இணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## தேசிய அரசியல் பிரவேசம்

எம்.எச். எம். அஷ்ரப்பின் மறைவைத் தொடர்ந்து அமைச்சுப் பதவியேற்ற அவரது துணைவி பேரியல் இஸ்மாயில் அஷ்ரப்பின் இணைப்பாளராகப் பணியாற்றிய அன்வர் இஸ்மாயில்

**அஸ்லம் எஸ்.மௌலானா**

அக்காலப் பகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட அரசியல் பூகம்பம் காரணமாக நேரடி அரசியலுக்குள் நுழைந்தார்.

அப்போது சந்திரிக்கா குமாரதுங்க அரசில் ரவூப் ஹக்கீம், பேரியல் அஷ்ரப் ஆகிய இருவரும் அமைச்சர்களாகப் பதவி வகித்ததுடன் இருவரும் முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவர்களாகப் பதவி வகித்து வந்தனர். இதன்போது ஏற்பட்ட தலைமைத்துவப் பிரச்சினை மற்றும் ரவூப் ஹக்கீம் அமைச்சுப் பதவியிலிருந்து விலக்கப்பட்ட நிகழ்வுகளின் போது அமைச்சர் பேரியல் அஷ்ரபிடம் வகித்து வந்த இணைப்பாளர் பதவியைத் தூக்கியெறிந்து விட்டு ரவூப் ஹக்கீமின் ஏக தலைமைத்துவத்தை உறுதி செய்யும் போராட்டத்தில் அன்வர் இஸ்மாயில் முன்னிலை வகித்தார்.

இதன் காரணமாக 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வாய்ப்பை அவர் பெற்றுக்கொண்டார்.

அத்தேர்தலில் சம்மாந்துறைத் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி ஆளும் கட்சியான பொ.ஐ. முன்னணி சார்பில் போட்டியிட்ட பழம் பெரும் அரசியல்வாதியான முன்னாள் பிரதி அமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம் மொஹிதீனையும், சுயேச்சைக் குழுவில் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்ட பரம்பரை அரசியல் புள்ளியான- ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிச் செயலாளர் ஏ.எம். நௌஷாத்தையும் தோற்கடித்து விட்டு அன்வர் இஸ்மாயில் வெற்றியீட்டினார்.

## நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பு

இதன்மூலம் தேசிய அரசியலில் பிரவேசித்த அன்வர் இஸ்மாயில் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும், அபிலாஷைகளையும் அடைந்து கொள்வது தொடர்பிலும், கிழக்கு மாகாண முஸ்லிம்களின் இருப்பு, பாதுகாப்பு போன்றவற்றை உறுதிப்படுத்திக் கொள்வது குறித்த விடயத்திலும் தீவிரமாக சிந்தித்து- இதய சுத்தியுடன் முயற்சிகள் பலவற்றை முன்னெடுத்து வந்தார்.

அவர் முதன் முதலாக நாடாளுமன்றம் சென்ற காலப்பகுதி, கிழக்குமாகாண முஸ்லிம்கள் இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க ஆட்சிக் காலமாகும். அன்வர் இஸ்மாயில் அங்கம் வகித்த முஸ்லிம் காங்கிரஸின் பங்களிப்போடு ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கிழக்கு முஸ்லிம்களுக்கு பல்வேறு நெருக்கடிகளைத் தோற்றுவித்திருந்தது.

அதனால் அரச தரப்பில் இருந்து கொண்டே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடுமையாக விமர்சித்து- கண்டனம் செய்து வந்தார். அரசு- புலிகள் சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம் தனித்தரபுக்கோரிக்கையையும் அவர் உறுதியுடன் வலியுறுத்தி வந்தார்.

தனித்தரப்பு, கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அமைச்சர் அதாவுல்லா தலைமையில் நாடாளுமன்றம் பகிஷ்கரிப்பிலும் அன்வர் இஸ்மாயில் ஈடுபட்டு வந்தார்.

## புலிகளுடன் பேச்சு

அக்காலப் பகுதியில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கி வந்த பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளாக இருந்த கருணா அம்மான், கரிகாலன் ஆகியோரை அவர் கொக்கட்டிச்சோலை சென்று- நேரடியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இவ்வாறு முஸ்லிம்களின் நலன்களில் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வந்த மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் தான் பிரதிநிதித்துவப்படுத்திய சம்மாந்துறைத் தொகுதி மக்களின் கல்வி, கலாசார, சமூக, பொருளாதார அபிவிருத்திக்கும் பாரிய பங்களிப்பைச் செய்து வந்தார்.

கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி, அமைச்சர் அதாவுல்லாவுடன் சேர்ந்து தேசிய முஸ்லிம் காங்கிரஸ் எனும் பெயரில் புதிய கட்சியொன்றைத் தோற்று வித்து- அதன் தவி சாளர் பதவியைப் பொறுப்பேற்ற அன்வர் இஸ்மாயில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் இடம் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார்.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிக்காவின் புதிய அமைச்சரவையில் கிழக்கு உள் கட்டமைப்பு, அபிவிருத்திப் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட அன்வர் இஸ்மாயில் 2005 ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷ அரசில் நீர்ப்பாசனத் துறைப் பிரதி அமைச்சராக நியமனம் பெற்று கடந்த ஜனவரிமாதம் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சரவை அந்தஸ்து அற்ற நீர்ப்பாசனத்துறை அமைச்சராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

## அபிவிருத்திப் புரட்சி

அவர் பிரதி அமைச்சராகவும், அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சராகவும் பதவி வகித்த மூன்று வருட குறுகிய காலத்திற்குள் சம்மாந்துறை தொகுதியை அபரிதமான அபிவிருத்திக்குள் இட்டுச் சென்றார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் அமைச்சர்களுள், தேசிய காங்கிரஸ் தலைவரான அமைச்சர் அதாவுல்லாவுக்கு அடுத்த நிலையில் அபிவிருத்திப் புரட்சியை மேற்கொண்ட பெருமை மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் அவர்களையே சாரும் என்று கூறினால் அது மிகையாகாது.

பொதுவாக முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள், கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு, தனது தொகுதி மக்களின் நலன்கள் போன்றவற்றை உறுதி செய்வதில் அன்வர் இஸ்மாயிலிடம் தெளிவான சிந்தனையும், தேடல்களும், அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளும் நிறைந்தே காணப்பட்டன.

எவ்வாறாயினும் துளிர்விட்டுப் பிரகாசித்து வந்த அவ்விளம் தலைமைத்துவம் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென அணைந்து மறைந்து விட்டது. மறைந்த தலைவர் அஷ்ரப் பிறந்த ஊரிலேயே பிறந்து- அவரது பாசறையில் வளர்ந்து- அவர் போன்று துணிச்சல் மிக்கவராகத் திகழ்ந்து- சமூகத்தின் குரலாக ஓங்கி ஒலித்து-அவர் போன்ற குறுகிய காலத்திற்குள் தனது பணிகளை முடித்து விட்டு அன்வர் இஸ்மாயிலும் சென்று விட்டார்.

## அதாவுல்லா நம்பிக்கை

அவரது வெற்றிடம் யாரால் நிரப்பப்படும் என்ற கேள்வி அடுத்து எழுந்தது. கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு அன்வர் இஸ்மாயிலின் திடீர் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.அதிலும் விசேடமாக சம்மாந்துறைத் தொகுதி மக்களுக்கு அவரது மறைவு பேரிடியாக அமைந்து விட்டது.

கடந்த 2004 பொதுத் தேர்தலின் போது தேசிய முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய

(31 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகள் புத்துயிர் பெற நோர்வேயின் அக்கறை பயன் தருமா?

இலங்கையின் சமாதான முயற்சிகள் தடம்புரண்டு, எப்போது யுத்தம் வெடிக்கும் என எதிர்பார்க்கப்படும் நேரத்தில் -

சமாதானத்துக்குக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் உயர்ந்த அமைப்பான ஐ.நா. சபையின் 62ஆவது அமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி அமெரிக்க தலைநகர் நியூயோர்க்கில் நடைபெறவிருக்கின்றது.

ஆள்கடத்தல்கள், கொலைகள், காணாமற்போதல், கப்பம் கோரல் போன்றவை தீவிரமாகியுள்ள தென்னாசியாவிலேயே முதலிடம் பெற்றுள்ள - இலங்கை விவகாரம் அந்தக் கூட்டத் தொடரில் பிரதிபலிக்கும் என பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய அரசு பதவியேற்றபின் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்த ஐரோப்பிய ஒன்றியம், மனித உரிமை மீறல் விவகாரத்தை அக்கூட்டத் தொடரில் முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம், விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்வதில் முனைப்பாக நின்றது.

திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக கண்காணிப்புக் குழு பலம் இழந்தது. போதிய கண்காணிப்பாளர்களை நோர்வே, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் கண்டுபிடிக்க வேண்டிய இக்கட்டு நிலை நோர்வே அரசுக்கு ஏற்பட்டது.

நோர்வே அரசின் முயற்சிகளின் பயனாக மேற்படி இரு நாடுகளில் இருந்து கண்காணிப்பாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

எனினும், முன்புபோல முழுமையான பணிகளை கண்காணிப்புக் குழுவால் பூர்த்திசெய்யமுடியாத நிலை தொடர்கின்றது.

வடக்கு - கிழக்கில் சகல மாவட்டங்களிலும் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, அந்த அலுவலகங்களில் 3, 4 கண்காணிப்பாளர்கள் பணியாற்றிய நிலை மீண்டும் ஏற்படுத்தப்படவில்லை.

குறைந்த கண்காணிப்பாளர்களுடன் கண்காணிப்புக் குழு இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றது.

சமாதான முயற்சிகளில், கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளில் பாரிய தாக்கத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை கொண்டு வந்திருந்தது.



பணிமனைக்கு முன் கவன ஈர்ப்பு ஒன்றுகூடல் ஒன்றை நடத்தினர்.

இலங்கையில் தொடரும் படுகொலைகளை நிறுத்த நோர்வேயும் சர்வதேசமும் உதவவேண்டும் என்று கோரும் மகஜர்


இலங்கையில் அமைதியைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் உதவுவதற்கு நோர்வே இன்னமும் தயாராக உள்ளது எனக் கருத்து வெளியிட்ட எரிக் சொல்ஹெய்ம், இரு தரப்புகளுடனும் தொடர்பில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

நோர்வேயின் இலங்கைத் தூதராகப் பதவியேற்றுள்ள றோர் ஹட் ரெம், விரைவில் வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளுடன் பேசப் போவதாகக் கூறியுள்ளார். மொத்தத்தில், அனுசரணையாளர்களான நோர்வே இன்னமும் இலங்கை விவகாரத்தில் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

மோசமடைந்துள்ள இலங்கை விவகாரத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க நோர்வேயும் சர்வதேசமும் தயாராக நிற்கின்றன. ஆனால் கள நிலைமைதான் மோசமாகிக் கொண்டு போகின்றது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திருகோணமலை துறைமுகத்தில் கடந்த 17ஆம் திகதி வெளியிட்ட கருத்து, யுத்தத்துக்கு அரசு தயாரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

விடுதலைப் புலிகளின் மூன்று கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டதாகக் கூறி



இலங்கைக்கு எதிராக அந்த நாடு இப்போது குரல்கொடுக்க முனைந்து நிற்கின்றது.

இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தானபோது, அந்த உடன்படிக்கையை கண்காணிக்க அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவில் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளும் இடம்பெற்றிருந்தன.

விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்தபின், அந்த நாடுகளின் உறுப்பினர் பணியின் நம்பகத் தன்மை குறித்து விடுதலைப்புலிகள் சந்தேகம் வெளியிட்டு, அந்த நாடுகளின் பிரதிநிதிகளின் பிரசன்னத்தை வாபஸ் பெறுமாறு கோரினர்.

அதன்பின் அந்த நாடுகளின் பிரதிநிதிகள் தமது நாடுகளுக்கு


**AREA SALES SUPERVISOR**

**PENTEC / STYLEX**

**Brand** எழுது கருவிகளை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகிக்கும் நிறுவனத்திற்கு

**AREA SALES SUPERVISOR**

**வேண்டப்படுகின்றனர்.**

**பிரதேசம்:** திருகோணமலை, வவுனியா

**இயலுமை:** விற்பனைத்துறையில் குறைந்தது 02 வருடங்கள் அனுபவம் விரும்பப்படும். அத்துடன் இலாபத்துடன் விற்பனை செய்யக்கூடிய ஆற்றல் ஆர்வம் உள்ளோர் தங்கள் சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

**Universal Marketing Services (Pvt) Ltd,**
**Fax: 2448211**
**E mail: penpal@eureka.lk**


அதே ஐரோப்பிய ஒன்றியம் இன்று இலங்கைக்கு எதிராக - இங்கு நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து குரல் கொடுக்கும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மனித உரிமை விடயத்தில் குரல் கொடுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் ஐ.நாவின் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளில் ஆக்கபூர்வமான பங்களிப்பினை மேற்கொள்வதில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை, மனித உரிமைகள் பேரவை அமர்வில் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கை அரசுக்கு எதிராக கொண்டுவரப்படலாமென எதிர்பார்க்கப்படும் தீர்மானத்தை பேரவைக்கு சமர்ப்பிக்காமல் தடுக்கவும்

**யாழவன்**

அப்படியே சமர்ப்பித்தாலும் அதனை தோற்கடிக்கும் வகையில் ஏனைய உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியிலும் இலங்கை தீவிரமாகச் செயற்படுகின்றது என்றும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

இதற்காக இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று ஜெனிவாவில் முகாமிட்டுள்ளது.

இந்தக் குழு கடந்த வாரம் நோர்வேக்கும் சென்றிருந்தது. அப்போது அங்குள்ள ஈழத்தமிழர்கள் வெளியுறவு அமைச்சுப்

ஒன்றை நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஹான்சன் போவ்ரிடம் அந்த மக்கள் சமர்ப்பித்தனர்.

"இலங்கையின் அரசியல் விடயங்களில் நோர்வேயால் தலையிட முடியாது. அந்நாட்டின் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அதிகாரம் நோர்வேக்கு இல்லை. ஆனால் எமது நாடு இரண்டு தரப்புகளையும் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள வைப்பதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றது".

இப்படி போவர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மத்தியில் பேசுகையில் கூறியுள்ளார்.

அதற்குப் புறம்பாக நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் கருத்து வெளியிட்டுள்ளார்.

வெற்றித் திருவிழா ஒன்றை திருகோணமலை துறைமுகத்தில் அரசு நடத்தியுள்ளது. (30 ஆம் பக்கம் பார்க்க)


**ஐரோப்பிய நாடுகளுக்கான விசா**

Visitors/ Sponsors/ Business/ Student/ Work Permits/ Permanent Residence/ Holiday Makers மற்றும் உங்களுக்குக் கிடைக்கும் Sponsor களை எம்பசிக்கு சமர்ப்பிப்பதற்கு முன்பு எமது பல வருட அனுபவமுள்ள சட்டத்தரணிகளால் சரிவர அமைத்துக் கொடுக்கப்படும். நிராகரிக்கப்பட்ட விசாக்களை உடனே மீளப் பெறும் வகையில் விண்ணப்பப்படிவங்கள் நிரப்பிக் கொடுக்கப்படும்.

**IELTS** ஆங்கில கணினி வகுப்புக்கள் நடைபெறுகின்றன

**STUDY ABROAD**

U.K/ USA/ CANADA/ AUSTRALIA
JAPAN/ SWISS/ ITALY/ GREECE/ NETHERLAND/
NEW ZEALAND/ CYPRUS
DEGREE- HND-DIPLOMA CERTIFICATE COURSES

**HOTEL MANAGEMENT (HND) IN UK**

6 மாதம் இலங்கையில் 6 மாதம் UK யில் பயின்றபின் தொடர்ந்து UKயில் பணியாற்றலாம்.
இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

**ELIZABETH**
**INSTITUTE OF HIGHER STUDIES**
No. 89 A1/1, Hospital Road, Kalubowila, Dehiwela.
Tel: 0114867744, 0725282195
E-mail: elizabethh@sltnet.lk

# தீர்வுத் திட்டத்துக்கே வேட்டு வைக்கும் கோட்டபாய

"நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு சர்வகட்சி மாநாட்டின் மூலம் தீர்வு காண்போம், அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்போம்."

இதுதான் இன்று அரசு தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் குழு தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரணவும் அடிக்கடி உச்சரிக்கும் தாரக மந்திரமாகிவிட்டது.





அமைச்சர் திஸ்ஸ வித்தாரண நல்லவர், வல்லவர் பரந்த நோக்குடையவர், துவேச மனப்பான்மை அற்றவர். எல்லா இன மக்களும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தனி நாடு மட்டுமே நமது நாட்டம் என்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் சமஷ்டி முறை அதிகார நிர்வாகத்துக்கு ஒப்புக் கொண்டதை பெரிதாக மதிப்பவர். அதிகாரம் என்பது தனி ஒரு இடத்தில் குவிந்து கிடக்கக் கூடாது. அது பரவலாக்கப்பட வேண்டும், பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பவர்.

இத்தகைய குணாம்சங்கள் கொண்ட ஒருவர் எப்படி துவேசம் நிறைந்த ஒரு கும்பலின் கூட்டத்துக்கு தலைமை வகிக்க முடியும். இந்த நல்ல எண்ணங்கள் தான் அமைச்சர் திஸ்ஸ வித்தாரணவின் பலவீனங்கள் என சிங்கள பேரினவாத சக்திகள் எடைபோட்டுவிட்டன.

இனப்பிரச்சினை தீர்வுக்காக உருவாக்கப்பட்ட சர்வகட்சி மாநாடு இதுவரை 19 தடவைகளுக்கு மேல் கூடிக் கலைந்து விட்டது. அதே போன்று பிரதிநிகள் குழுவும்.

ஆனால் இதுவரை நடந்தது என்ன? இதற்கான விடை பூச்சியம் என்பது தவிர வேறு எதுவுமே இல்லை.

"அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட நகல் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படுகின்றன. கூடிய விரைவில் 'பொதுவான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும். மூன்று மாதங்களில், இரண்டு மாதங்களில் இல்லையில்லை இன்னும் மூன்று வாரங்களில் தீர்வுத் திட்டம் பகிரங்கப்படுத்தப்படும்" என அமைச்சர் திஸ்ஸ வித்தாரண கிரிக்கெட் கொமாண்டர் போல் அடிக்கடி கூறிக் கொண்டு இருக்கிறார்.

அமைச்சரின் அறிவித்தல்கள் அடிக்கடி இடம் மாறும் சுனாமி எச்சரிக்கை போன்று மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிட்டு ஓய்ந்து விடுகின்றன. இவரது தீர்வுத்திட்ட காலக்கெடுக்கள் இன்று நம்பகத் தன்மையை இழந்து விட்டன. மக்கள் இதனை நம்பத் தயாராக இல்லை.

அமைச்சர் திஸ்ஸ வித்தாரணவின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அதாவது யானை, புலி, சிங்கம், நரி, கரடி, மான், முயல் போன்ற அனைத்து மிருகங்களையும் ஒரே கூண்டுக்குள் போட்டு பூட்டிவிட்டு இவற்றை ஒத்த கருத்துடன் ஒற்றுமையாகப் பழக்கி எடுக்க வேண்டும் என சர்வகட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் என்ற சவ்க்கை இவரின் கையில் கொடுத்துள்ளது போல் காணப்படுகின்றது.

கூண்டில் அடைக்கப்பட்டுள்ளவை என்னமோ மிருகங்கள் என்று வெளிப்பார்வைக்கு தெரிந்தாலும் அவை ஒன்றை ஒன்று கடித்து வேட்டையாடி உணவாக்கிக் கொள்ளும் குரோத மனம் படைத்தவை.

இப்படித்தான் இருக்கிறது இன்றைய சர்வகட்சி மாநாட்டின் நிலைமை.

அதிகாரம் என்பது சிங்களவர்களுக்கு மட்டும்தான், அவர்கள் மட்டுமே ஆளும் உரிமை கொண்டவர்கள் ஏனைய சமூகங்கள் அண்டிப் பிழைக்க வந்தவை. அவர்களுக்கு எதற்கு அதிகாரம்? என்று கேட்கும் பௌத்த துறவிகளின் ஜாதிக ஹெல உறுமய-

பேச்சு வார்த்தையே அவசியம் இல்லை, நாம் தருவதை மட்டும் பெற்றுக் கொள்ள வேண்டும், சமஷ்டி அதிகாரம் என்பதெல்லாம் கூடவே கூடாது என்று கூச்சலிடும் ஜே.வி.பி.-

சர்வகட்சி மாநாட்டில் இருந்து விலகிக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி-

பங்களிப்பே இல்லாத தமிழர் கூட்டணி-

பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையுங் காட்டி சமாளித்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி.-

உறுதியான நோக்கம் இல்லாத இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்-

ஆமாம் சாமி போடும் மலையக மக்கள் முன்னணி-

அதே போன்று தண்ணீரையும் எண்ணெயையும் ஒரே போத்தலில் ஊற்றி அடக்கப்பட்டது போன்ற முஸ்லிம் கட்சிகள்-

இப்படியாகப் பல துருவங்களை வைத்துக் கொண்டு திண்டாடும் திஸ்ஸ வித்தாரண எப்படி தீர்வுத் திட்டத்தை முன் தயாரித்து முன் வைக்கப் போகிறார்?

இதில் ஒரு வேடிக்கை என்ன என்றால் இனப் பிரச்சினை தீர்வில் அதிமுக்கிய பங்காளிகளாக இருக்கும் அரசாங்கமும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று வரை தமது ஆலோசனைகளை முன் வைக்கவில்லை.

உண்மை நிலை இப்படி இருக்க, சர்வகட்சி மாநாட்டின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண எப்படி பொதுவான தீர்வுத் திட்டத்தை தயாரிக்கப் போகின்றார். தண்ணீரும், அரிசியும் இல்லாமல் வெறும் நெருப்பை மட்டும் வைத்துக் கொண்டு சோறு சமைத்து பங்கிடப் போகின்றார் என மாயாஜாலம் காட்டுகின்றார் திஸ்ஸ வித்தாரண.

இதுதான் இன்றைய யதார்த்தம். ஆனால் ஜனாதிபதி என்ன கூறுகின்றார். எதையுமே அவர் உருப்படியாக கூறுவதில்லை.

காலையில் ஒன்று மாலையில் ஒன்று எனக் கூறுகின்றார். இனப்பிரச்சினை தீர்வுக்குத்தான் சர்வ கட்சி மாநாடு, சமாதானத்தைக் கொண்டு வருவதற்குத்தான் யுத்தம் என்கின்றார். இதில் எது சரி? எது பிழை? சர்வதேச சமூகம் மண்டையைப் பிய்த்துக் கொள்கிறது.

தென் பகுதியில் உள்ள அனைத்துக் கட்சிகளும், அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஏற்படுத்தப்படும் என்கிறார் ஜனாதிபதி. ஆனால் அரசின் தலைவர் என்ற வகையில் அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை முன் வைக்காதது ஏன்? அரசின் ஆலோசனைகளை எப்போது முன்வைக்கப் போகின்றார்கள்? ஒட்டகத்தின் முதுகில் சிறுவர்களை கட்டி வைத்து அவர்களின் அலறும் சத்தத்தில் ஒட்டகத்தை ஓடவைத்து வெற்றி பெறும் ஒட்டகப் பந்தயக்காரரைப் போன்று தான் ஜனாதிபதி காணப்படுகின்றார். யுத்தம் என்ற அரக்கனின் தோளில் சிறுபான்மை தமிழர்களை ஏற்றிவிட்டு வேடிக்கை பார்க்கின்றார்.

ஒரு பக்கம் பேச்சுவார்த்தை, சர்வகட்சி மாநாடு. மறு பக்கம் குண்டுவீச்சும், ஆட்டிலறித் தாக்குதலும், விமான தாக்குதலும் ,பீரங்கி தாக்குதல்களும், சர்வ சாதாரணமாக இடம்பெறுகின்றன.

**இரா.புத்திரசிகாமணி**

நூறு, ஆயிரம் என்று இப்போது லட்சக் கணக்கில் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

உரிமைகளை மட்டுமல்ல அனைத்து உடைமைகளையும் இழந்து மக்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

தனது நாட்டின் சொந்தப் பிரஜைகளுள் ஒரு பகுதியினரை அகதிகளாக்கி அவதிப்பட வைப்பதில் பெரும் சாதனை படைத்துவிட்டது இன்றைய அரசு. இதுதான் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஜனாதிபதியின் யுத்தமா? அதுவும் சரிதான். தன்னை ஜனாதிபதியாக்கிய தென்பகுதி மக்களை சமாதானப்படுத்துவதற்கான யுத்தம் என்றுதான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளாரோ?

இந்த லட்சணத்தில் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம உலகம் சுற்றும் வாலிபனாக ஊர் ஊராகப் போய் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தான் இன்றைய அரசின் நோக்கமும், லட்சியமும் என்று பறையடித்து வருகின்றார்.

அதே வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய வெளிவிவகார அமைச்சரின் பறையை பீரங்கி வேட்டுக்களால் சுக்குநூறாக்கி விட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மைக் காலங்களில் இரண்டு பெரு விழாக்களை கொண்டாடிவிட்டார்.

முதலாவதாக கிழக்கு மகாணத்தை புலிகளின் பிடியில் இருந்து முற்று முழுமையாகக் கைப்பற்றிவிட்டோம் என 'கிழக்கின் எழுச்சி' என்று கொழும்பில் வெற்றி விழா கொண்டாடினார்.

இரண்டாவதாக புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிவந்த மூன்று கப்பல்களை அழித்து ஒழித்ததாகக் கூறப்படும் கடற்படையினரைப் பாராட்டி கௌரவிக்கும் விழாவை திருகோணமலையில் கொண்டாடினார்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதையும், அகதிகளாக்கப்படுவதையும் அங்கீகரிக்க முடியாது.

இதுவரை காலமும் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று கூறிக்கொண்டு யுத்த முனைப்புடன் செயற்பட்ட கோட்டபாய இப்பொழுது தீர்வுத் திட்டத்துக்கே வேட்டு வைத்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற விழாவில் கோட்டபாய ஆற்றிய உரை அங்கு வாழும் தமிழ் மக்களை மட்டுமல்ல சர்வதேச சமூகத்தையும் கவலையில் ஆழ்த்திவிட்டது.

"ஆயிரம் மாநாடுகளை நடத்தட்டும், எத்தனை தீர்வுத்திட்டங்களையும் முன்வைக்கட்டும். அவற்றால் எந்தப் பயனும் இல்லை. புலிகள் என்று கூறிக் கொண்டு நடமாடும் கடைசி மனிதரையும் அழித்துப் புலிப் பயங்கரவாதத்தை, கிழக்கைப் போன்று வடக்கிலும் முடிவுக்கு கொண்டு வரவேண்டும். கிழக்கை வெற்றி கொள்ள முடியுமானால் ஏன் வடக்கையும் கைப்பற்ற முடியாது. எமது படைப்பலம் அனைத்தையும் பிரயோகித்து வடக்கையும் கைப்பற்ற வேண்டும். அப்போது பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும், என்கிறார் பாதுகாப்பு செயலர் கோட்டபாய.

இவர் மூடுமந்திரமாகக் கூறவில்லை. அதி உத்தம ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை சகாக்கள், முப்படை தளபதிகள் ஆகியோர் முன்னிலையில்தான் இப்படி வீரமுழக்கமிட்டார். இதனை உலகின் பல பாகங்களிலும் இருந்து பல ஆயிரம் கோடி மக்கள் தொலைக்காட்சி மூலம் நேரடியாக அவதானிக்க முடிந்தது.


இது திஸ்ஸ வித்தாரண தலைமையிலான சர்வகட்சி மாநாட்டின் தீர்வுத் திட்டத்துக்கு வைக்கப்பட்ட வேட்டாக அல்லவா அமைந்து விட்டது.

# மீண்டும் ஒருமுறை தூசி தட்டப்படும் வலி வடக்கு மீள்குடியமர்வு ஆவணங்கள்: எனினும் அது வெறும் கண்துடைப்புத்தான்

## மறந்துபோன மக்களுக்கு ஞாபகமூட்டும் முயற்சி இது

வலி வடக்கில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக மீள்பதிவுகள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பிரதேச செயலகங்களில் கடந்த வாரம் முதல் இடம்பெற்று வருகின்றன.

- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் மற்றும் சிலரும் மீள் குடியமர்வது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கொன்றைத் தொடர்ந்து, அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்க வேண்டும் என்ற தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தது.



பங்கீட்டு அட்டை வகை:
இலக்கம்:

கிராம சேவகர் பிரிவு இல:

வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் மீள் குடியமர விரும்பும் குடியிருப்பாளர் விபரத்திரட்டு - 2007

01. பிரதான குடியிருப்பாளரின் முழுப்பெயர் :- ..................
02. பிறந்த திகதி :- ..................
03. தே.அ.அ.இல :- ..................
04. முகவரி (தற்காலிகம்) :- ..................
05. கிராம சேவகர் பிரிவு (தற்காலிகம்) :- ..................
06. குடியியல் நிலைமை :- (திருமணமானவர்/திருமணமாகாதவர்/கைவிடப்பட்டவர்/தனியாள/விதவை/தபுதாரன்)
07. இடம்பெயர்ந்த திகதி :- ..................
08. குடும்ப உறுப்பினர் விபரம்

| இல | முழுப்பெயர் | உறவு முறை | தே.அ.அ.இல | பிறந்ததிகதி | தொழில் |
|---|---|---|---|---|---|
| 01 | | | | | |
| 02 | | | | | |
| 03 | | | | | |
| 04 | | | | | |
| 05 | | | | | |
| 06 | | | | | |
| 07 | | | | | |
| 08 | | | | | |
| 09 | | | | | |
| 10 | | | | | |

09. நிரந்தர முகவரி :- ..................
10. நிரந்தர கி.சே.பிரிவும் இலக்கமும் :- ..................
11. காணி உறுதி இல :- ..................
12. உறுதி எழுதிய நொத்தாரிசின் பெயர் :- ..................
விலாசம் :- ..................
13. காணி பதிவுத் திகதி :- ..................
14. வாக்காளர் இடாப்பு இல :- ..................
15. வேறு ஏதேனும் ஆவணங்கள் இருப்பின் அதன் விபரம் (அரச காணியாயின் அதன் இலக்கம் / பெமிற் இலக்கம்) :- ..................

மேற்கூறப்பட்ட விபரம் சரியானது என உறுதிப்படுத்தி கையொப்பம் இடுகின்றேன்.

..................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

..................
கிராம அலுவலரின் கையொப்பம்

இதனைத் தொடர்ந்து மக்களை குடியமர்த்தும் நடவடிக்கையெனத் தெரிவித்து பல செயற்பாடுகளை அரசு மேற்கொண்டுவருவதாகக் காட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்த மக்களை மீளக் குடியமர்த்தும்ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இழுபறிப்பட்டுக் கொண்டே போகின்றன.

கடந்த ஆண்டில் வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர விருப்பம் தெரிவித்த மக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அந்த நடவடிக்கையின் போது காணி உறுதிகளின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும் எனத் தெரிவித்து, காணிகளின் உறுதிப் பிரதிகளும் பெற்று அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் தாம் தமது சொந்த இடங்களில் குடியேறப் போகின்றோம் என மகிழ்ச்சியுடன் காத்திருந்தார்கள். எனினும், அந்தக் காத்திருப்பு கனவா கிப்போன நிலையில் அதை அப்படியே மறந்து அவர்கள் தமது நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள்.

இதன் பின்னர் மீண்டும் மக்களுக்கு அதனை ஞாபகப்படுத்தும் - கண் துடைக்கும் - ஒரு நடவடிக்கை பூச்சாண்டி வேலை இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. மீண்டும் காணி உறுதிப்பத்திரங்களைக் கொண்டு வந்து பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த பதிவு நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளுமாறும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சொந்த வீட்டை - நிலத்தை - இழந்து, தமது அடையாளத்தை இழந்து அகதி நிலையில் வாழும் இந்த மக்களில் அநேகமானவர்கள் தமது காணி உறுதிகளைத் தொலைத்தவர்களாகவே உள்ளார்கள்.

உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் நலன்புரி முகாம்களிலும் இந்த மக்களின் வாழ்க்கை கடந்த 17 வருடங்களுக்கு மேலாக நகர்கிறது என்பதை இங்கு நாம் மீண்டும் ஞாபகப்படுத்துகின்றோம்.

மனத்தில் வேதனையை சுமந்து கொண்டு காலத்திற்கு காலம் வீடுகள் மாறி - முகாம்கள் தேடி அவர்கள் அலையும் வேளைகளில் இந்த உறுதிகள் தவறவிடப்பட்டும், சேதமடைந்தும் போயுள்ளன. சில உறுதிகள் கறையான்களுக்கு இரையாகிப் போனதும் உண்டு. காரணம் அவர்கள் தமது அன்றாட சீவியத்தைக் கொண்டு நடத்துவதற்கே தத்தளிக்கும் நிலையில், உறுதிகளில் அவர்கள் கவனம் செல்வது சாத்தியமில்லை.

சுமார் 17 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து அவலப்படும் இம்மக்களை இத்தகைய செயற்பாடுகள் நெருக்கடி களுக்குள் கொண்டு செல்கின்றன என்பதை அதனை செயற்படுத்துபவர் கள் உணர்ந்து கொள்ளவேண்டும் - புரிந்துகொள்ள வேண்டும்.

வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோரில் இன்று பலர் இறந்து போயுள்ளார்கள். மற்றும் பலர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். வேறு சிலர் திருமணமாகி புதிய குடும்பங்கள் ஆகியுள்ளனர். இப்படிப் பல்வேறு மாற்றங்கள் இந்தப் 17 வருட காலப் பகுதிக்குள் நிகழ்ந்துள்ளன.



புதிய தலைமுறையொன்று இப்போது வளர்ந்து வந்துள்ளது. ஆயிரக்கணக்கான பிறப்புகள் இடம்பெற்றுள்ளன. இதில் ஒரு பகுதியினர் தமது சொந்த இடத்தை அடையாளம் காட்ட முடியாத வர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

வலி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 45 கிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் 25 இற்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முழுமையாக குடியேற அனுமதிக்கப்படாத பகுதிகளாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக பலாலி, தையிட்டி, மயிலிட்டி, வசாவிளான், குரும்பசிட்டி, வறுத்தலைவிளான், கட்டுவன், பளை, வீமன்காமம், காங்கேசன்துறை, மாவிட்டபுரம், தந்தை செல்வாபுரம், நகுலேஸ்வரம், கொல்லங்கலட்டி ஆகிய இடங்கள் முக்கியமானவை.

இளவாலை, அளவெட்டி, வித்தகபுரம், பன்னாலை ஆகிய இடங்களிலும் குறிப்பிட்ட பகுதிகள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களாக உள்ளன.

இந்தப் பகுதிகளில் இருந்து சுமார் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்வியலுக்கு வேண்டிய வசதிகள் இல்லாமல் அல்லற்பட்டு அந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத்திதுக்கென மாதாந்தம் சுமார் 36 கோடி ரூபாவுக்கு மேல் செலவு செய்யப்படுவதையும், அந்த மக்களின் அடிப்படை உரிமையையும் கருத்தில் கொண்டு சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்த அரசும் அதிகாரி களும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

மீளக்குடியமர்த்துதல் என்ற ஒரு சொல்லை வைத்துக் கொண்டு அந்த மக்களை தொடர்ந்து அலைய வைத்து மேலும் மேலும் அவர்களுக்கு வெறுப்பேற்றும் நடவடிக்கையே தற்போது இடம்பெற்று வருவதாக அந்த மக்களே விசனப்பட்டுக் கொள்கிறார்கள்.

இந்த மீள் குடியமர்வு சாத்திய மாகுமா என்பதைக் கூட யோசிக்காமல் மக்களுக்கு தொடர்ந்து பூச்சாண்டி காட்டி அவர்களது காதில் பூச்சுற்றும் நடவடிக்கையே இது.

சொந்த இடங்களுக்கு செல்லவிருப்பமா என்று கேட்டு முன்னர் ஒரு பதிவு மேற்கொண்டனர். உரிமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களை பரிசோதித்தார்கள். நேர்முகப் பரீட்சை நடத்தினார்கள். இப்போது மீண்டும் காணி உறுதிப்பிரதிகளைக் கொண்டு வா என்கிறார்கள்.

வலி வடக்குப் பகுதி மக்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த இடங்களுக்கு தம்மை செல்ல அனுமதிக்கவேண்டும் எனக் கூறி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டதும், பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர்களின் வேண்டுதலின் பெயரில் அது கைவிடப்பட்ட மையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இதே போன்று பிரதேச செயலகங்கள் மாவட்ட செயலகம் ஆகியவற்றின் முன்பாகவும் தொடர் மறியல் போராட்டங்களை நடத்தியிருந்தார்கள்.

இவற்றையெல்லாம் மறந்து அவர்களிடம் மீளக் குடியமர விரும்பமா? காணி உறுதிகள் உண்டா? என்று கேட்பதும் ஆவணங்களைப் பெறுவதும் அந்த மக்களைத் துன்புறுத்துவதாகவும் அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவுமே கொள்ளப்படும்.

கடந்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் சார்பில் பல மகஜர்கள் பிரதேச செயலாளர்கள், அரச அதிபர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை அமைப்புகள், நீதிமன்றங்கள் என பல தரப்புகளிடமும் கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் இடம்பெயர்ந்த மக்களிடத்தில் பலத்த சந்தேகங்களையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளன. தாம் கொடுத்த மகஜர்கள் உரிய அதிகாரிகளினால் கருத்தில் கொள்ளப்படவில்லையா? அவற்றை அவர்கள் பார்வை யிடவில்லை? உரிய பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்படவில்லையா? என்ற வினாக்களும் அவர்களிடத்தில் எழுந்துள்ளன.

கடந்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்களினாலும் அவர்களுடன் தொடர்புடைய அமைப்புக்களினாலும் அனுப்பப்பட்ட பல நூற்றுக்கணக்கான மகஜர்களுக்கு எந்த வகையான பதில்களும் உரியவர்களினால் அளிக்கப்படவில்லை. ஆகக் குறைந்தது உங்களுடை மகஜர் கிடைக்கப்பெற்றது என்று கூட ஜனாதிபதியினாலோ அல்லது அமைச்சர்களாலோ அரச அதிபரினாலோ எழுத்து மூலம் வழங்கப்படவில்லை.

இன்று இடம்பெறும் நடவடிக்கைகள் அனைத்தும் கடந்த காலத்தில் மீளக்குடியமர்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள், உண்ணாவிரதம் என்பன உரியவர்களினால் கண்டு கொள்ளப்படவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றன.

ஆயினும் இன்று இடம்பெறும் பதிவுகள், உறுதிப் பிரதிகள் மீண்டும் குப்பைத் தொட்டிகளுக்குள் செல்லாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இதனை ஏன் குறிப்பிட வேண்டி உள்ளது என்றால், கடந்த காலத்தில் பெறப்பட்ட உறுதிப்பிரதிகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாது மக்கள் விசனமடைந்துள்ளார்கள்.

நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவை நன்றே நடக்கட்டும். இப்போது இடம்பெறும் பதிவுகள் வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்துள்ள இம்மக்களை தமது சொந்த மண்ணில் மீண்டும் குடியமர்த்த உறுதுணையாக அமைய வேண்டும்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டது போன்று மக்களை ஏமாற்றும் - பூச்சாண்டி காட்டும் நடவடிக்கைகளாக இவை அமையாது பார்த்துக்கொள்ள வேண்டியது, அது சம்பந்தப்பட்டோரின் பொறுப்பும் கடமையுமாகும்.

**வில்லவன்**

# சுறா மீன்கள்



அழகுப் பொருட்கள் தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் எனது கணவர் விசுவநாதனுக்கு மேலாளர் பணி.

நிறுவனத்தின் கிளை அலுவலகங் களுக்கு பணி தொடர்பாக அடிக்கடி சென்று வருவார். விடுமுறை முடிந்து அலுவலகம் திரும்பியதும் வெளியூர்க் கிளை ஒன்றில்அவருக்கு வேலை ஒதுக்கப்பட்டிருந்தது.

''நானும் வருவேன்..'' என்றபடி எனது துணிமணி களையும் சூட்கேஸில் எடுத்து வைத்தேன்.

''ரொம்பக் கஷ்டம் ப்ரீத்தி. வேலை முடிய எவ்வளவு நாளாகும் என் சொல்லமுடியாது. அதுவுமில்லாமல் பிள்ளைகள் படிப்பும் பாழாகும்....'' பொறுமையாக எடுத்துச் சொன்னார் அவர்.

''உங்களுக்கு கூட்டிக்கொண்டு போக இஷ்டமில்லை என்று சொல்லுங்க. வீண் சாக்கு எதுக்கு...?''

மனமே இல்லாமல், கணவரை வழியனுப்பி வைத்தேன்.

3 நாட்களுக்குப் பிறகு வந்த தொலைபேசி அழைப்பைக் கேட்டதும் அதிர்ந்துபோனேன். எனது கணவர் சென்று கொண்டிருந்த கார் ஒரு லொறியுடன் நேருக்குநேர் மோதியதில் அவர் அதே இடத்தில் இறந்துவிட்டிருந்தார்.

கணவர் பணியாற்றிய நிறுவனத்தின் ஜெனரல் மனேஜர் அனுதாபம் தெரிவித்ததுடன், அவருக்குச் சேரவேண்டிய பணத் துக்கான காசோலை யையும் தந்துவிட்டுச் சென்றார். நிறுவனத் தின் விடுதியில் நாங்கள் தங்கியிருந்ததால் அதைக் காலிசெய்ய ஒரு மாத அவகாசம் தந்திருந்தனர்.

சோகத்தில் இருந்து மீள முடியாமல் நான் தவித்துக்கொண்டிருந்த தருணத்தில் ஒரு நாள் அப்பா யதார்த்தத்தை எனக்குப் புரியவைக்க முயன்றார்.

''நடந்தது நடந்து போச்சு. இனிமேல் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி நீ யோசிக்கவேணும். எங்களுக்கு ரொம்ப வயதாகிவிட்டது. எவ்வளவுநாள் தான் நாங்க உனக்கு ஆதரவு தரமுடியும்? நீ டிகிரி முடிச்சிருக்கே. கம்ப்யூட்டர் பட்டப்படிப்பும் இருக்கு. அதனால ஒருவேலை தேடிக்கொண்டால் பணத்துக்காக யார் தயவையும் நீ எதிர்பார்க்கத் தேவையில்லை''.

''நான் படிச்சது பத்து வருடத்திற்கு முன்னாடி. இப்போ கம்ப்யூட்டர்துறை ரொம்ப அட்வான்சாகிவிட்டது. அதுவுமில்லாமல் டைப்பிங் டச்சும் விட்டுப்போயிருக்கும்...'' நம்பிக்கை இல்லாமல் சொன்னேன்.

''ஒன்று செய்யேன். உன் கணவர் வேலைசெய்த கம்பெனி மனேஜரைப் போய்ப் பாரேன். மனிதாபிமான அடிப்படையில் உனக்குக் கண்டிப்பாக வேலைபோட்டுத் தரக்கூடும்''

எனக்கு அந்த யோசனை சரியாகவே பட்டது.

மறுநாளே தொலைபேசி மூலம் அப்பாயின்ட்மென்ட் எடுத்துக் கொண்டு மனேஜர் சுந்தரைச் சந்தித்தேன்.

''சொல்லு ப்ரீத்தி. உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கடிகாரத்தைப் பார்த்தபடி பேசினார் சுந்தர்.

நான் வந்த விஷயத்தை சுருக்கமாகச் சொல்லிமுடித்தேன். அதைக் கேட்டதும் சுந்தரின் முகத்தில்குழப்பரேகைகள்.

''உன் நிலைமையை நினைத்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கு. ஆனால் உன்னுடைய கல்வித் தகுதிக்குப் பொருத்தமான வேலை எதுவும் இங்கே இல்லையே... ஐ ஆம் சாரி...''

''சார் ரைப்செட்டிங் ஷோட், காண்ட் பாஸ் பண்ணியிருக்கேன். 2 மாதம் பிராக் டீஸ்பண்ணினால் போதும். அதுவுமில்லாம இப்போ கம்ப்யூட்டர் வகுப்புக்கும் போகிறேன்'' மெல்லிய குரலில் சொன்னேன்.

சுந்தரின் முகத்தில் புன்னகை அரும்பியது.

''உன் தன்னம்பிக்கையைப் பாராட்டு கிறேன். இங்கே உனக்கு ஏதாவது ஓப்பனிங் இருக்குமா என்று செக் பண்றேன்''என்றவர் இன்டர்கொமில், ஆபிசர் பரத்தை வரச் சொன்னார்.

ஆபீஸ் பார்ட்டியில் ஏற்கனவே பரத்தைச் சந்தித்திருக்கிறேன். அதனால், எனது மனதில் நம்பிக்கை துளிர்விட்டது.

''பரத் இவங்களை உங்களுக்குத் தெரிஞ் சிருக்கும். நம்ப கம்பெனியில் இவங்களுக்கு ஏதாவது வேலை இருக்குமா என்று தெரிஞ்சுக்கத்தான் வரச் சொன்னேன்...''

எனது கல்வித் தகுதிகள் மற்றும் வேலை அனுபவம் ஆகியவற்றை விசாரித்தான் பரத்.

பிறகு மனத்துக்குள் சிறிது நேரம் கணக்குப் போட்டவனாய் ''சார் அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட் கீர்த்தனா, 6 மாதம் லீவுலபோறாங்க. நீங்க விரும்பினா ப்ரீத்தியை அந்த இடத்துக்குத் தற்காலிக மாக நியமிக்கலாம். அதுக்கப்புறம் அவங்களுக்கு வெளியிலேயும் வேலை கிடைக்க் வாய்ப்பிருக்கு'' என்றான் பரத்.

சுந்தரும், ''ஓகே...இவங்களை அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட்ல என்றவர் என்னை நோக்கி ''ஒல் த பெஸ்ட் என்று வாழ்த்துகள் சொன்னார்.

பதினைந்து நாட்கள் பயிற்சிக்குப் பிறகு வேலை நியமன உத்தரவை என்னிடம் தந்தபடி, ''இன்றுமுதல் நீங்களும் எங்கள் குடும்பத்தில் ஓர் உறுப்பினர்...'' என்றான் பரத். ''நேர்மையாகவும் கவனமாகவும் வேலை செய்தால் உங்களுக்கு சீக்கிரமே பதவியுயர்வு கிடைக்கவும் வாய்ப்புகள் உண்டு'' என்றான் தொடர்ந்து.

ஒருமாதம் ஓடிப்போனது. அன்று சம்பள தினம். எனக்கு சம்பள செக்கைக் கொடுப்பதற்காக என்னைத் தனது அறைக்கு வரவழைத்தான் பரத்.

செக்கை என்னிடம் கொடுத்தபடி, ''கீர்த்தனா பணிக்குத் திரும்பாமல் இருந்தால் நல்லா இருக்கும். உங்களுக்கு இங்கேயே வேலை நிரந்தரமாயிடும் இல்லே...'' என்றான் புன்னகையுடன்

'தேங்க்யூ சார்...'' என்றபடி கிளம்ப முற்பட்டேன்.

'' என்ன அவசரம்- கொஞ்ச நேரம் உட்காருங்களேன்...'' சிறிது இடைவெளி விட்டவன், ''மனேஜர் உங்களின் வேலை பற்றி கேட்டுக்கிட்டிருக்கார். நீங்க வேலையை ஒழுங்கா கவனமா செய்றீங்க என்று சொல்லியிருக்கேன்...''

''ரொம்ப நன்றி...'' என்றேன் சுருக்கமாக.

''சரி, முதல் சம்பளம் வாங்கிட்டீங்க. ட்ரீட் எதுவும் இல்லையா?'' பரத்தின் குரலில் குறும்பு மேலோங்கி யிருந் தது.

''என் குழந்தைகள் அப்பாவை இழந்து தவிச்சுக்கிட்டிருக்கிற நேரத்தில் என்னால் எப்படி...?'' சோகத்துடன் சொல்லிவிட்டு அவன் பதிலுக்குக் காத்திராமல் வெளியேறினேன்.

5 மாதங்களான நிலையில் ஒருநாள் என்னைத் தனது அறைக்கு வருமாறு இண்டர்காமில் அழைத்தான் பரத்.

''ஒரு வருத்தமான நியூஸ் ப்ரீத்தி. அடுத்தமாதம் கீர்த்தனா வேலைக்கு வருவதாக தகவல் வந்திருக்கு...''

இதைக்கேட்டதும் எனது முகம் வாடிப் போனது. ஆழ்ந்த பெருமூச்சு விட்டேன்.

''நீ கவலைப்படாதே...இதுக்கு ஏதாவது வழிகிடைக்கும். நான் இருக்கிறேன்தானே ...'' என்றான் பரத்.

எனது இடத்துக்குத் திரும்பிய எனக்கு அன்று வேலையே ஓடவில்லை. 11மணிக் குப் பியூன் கொண்டுவந்து வைத்த டீ ஆறிப் போயிருந்தது.

அந்த நிறுவனத்தின் மக்கள் தொடர்பு அதிகாரி மாளவிகா, இங்கு பணியில் சேர்ந்த 5 மாதத்தில் அவளுக்கு நெருங்கிய தோழியாகிவிட்டிருந்தேன்.

இண்டர்கொமில் மாளவிகாவைத் தொடர்புகொண்டு எனது பிரச்சினையைக் கூறினேன். அவளும் மதிய உணவு நேரத்தில் என்னைச் சந்திக்கும்படி கேட்டுக்கொண்டாள்.

மதிய உணவு இடைவேளையில் மாளவிகாவுடன் சேர்ந்து சாப்பிடும்போது எனது பிரச்சினையை எடுத்துச்சொன்னேன். பரத் அளவுக்கு மீறிப் பேசுவது மற்றும் நடந்துகொள்வதைக் குறிப்பிட்டு, ''இதே கம்பெனியின் முன்னாள் மனேஜரின் மனைவி, இப்போது விதவை, 2 குழந்தை களுக்கு அம்மா என்றும் பார்க்காமல் என்னுடன் இப்படித் தவறாக நடக்க அவனுக்கு எவ்வளவு தைரியம்?'' என்று கேட்டேன்.

''உன்னை மாதிரி ஒரு அழகான பெண், அதுவும் விதவையாக இருந்தால் ஆண்கள் தவறான கண்ணோட்டத்தில் அணுகுவது ஒன்றும் புதுவிஷயமில்லை. இந்த உலகம் பெரிய கடல் மாதிரி. இதில் சின்ன மீன்களை விழுங்கிறதுக்கென்றே ஏராளமான சுறா மீன்கள் நீந்திக்கிட்டிருக்கு. என்ன, நான் சொல்றது புரியுதா..?'' முகத்தை நேருக்குநேர் பார்த்தபடி கேட்டாள் மாளவிகா.

''கொஞ்சம் புரிஞ்ச மாதிரி இருக்கு....''

''இன்று ஆபீஸ் முடிஞ்சதும் என் வீட்டிற்கு வா. உனக்குத் தெளிவாகப், புரியவைக்கிறேன்...''

மூன்று படுக்கை அறைகள் கொண்ட ப்ளாட் அது. அதில் தனியாகவே வ்சித்துவந்தாள் மாளவிகா. கணவருடன் கருத்து வேறுபாடு காரணமாக பல ஆண்டுகளுக்கு முன்பே விவாகரத்து பெற்றுவிட்டிருந்தாள்.

காப்பிக் கோப்பையை என்னிடம் தந்து எனக்கு எதிர்ப்புறமிருந்த கதிரையில் உட்கார்ந்தாள்.

''இந்தக் கம்பெனி யில 12 வருஷத் துக்கு முன் ரிஷப்ஷனிஸ்ட் டாகச் சேர்ந்தேன். அப்போது சஞ்சய் குமார் மனேஜராக இருந்தார். அடுத்த வருடமே என்னைத் தனது அந்தரங்க காரியதரிசியாக் கினார். அவர் ஓய்வு பெற்றுப்போனதும், என்னுடைய இடத் தைத் தக்கவைத்துக் கொள்ள நான் மிகவும் போராட வேண்டியிருந்தது.

எத்தனையோ தடவை என்னை வேலையிலிருந்து தூக்க முயற்சிகள் நடந்தன. ஆனால், சக ஊழியர்கள் எனக்கு ரொம்பவே தைரியம் சொல்லி ஆதரவு கொடுத் தாங்க'' என்று சொல்லி நிறுத்திய மாளவிகா, அலுமாரியில் இருந்து ஒரு புகைப்பட அல் பத்தை எடுத்து என்னிடம் நீட்டினாள். ''இந்தப் படங்கள் என் முன்னேற்றத் துக்கான படிக்கட்டுகளைப் பதிவுசெய்துள்ளன. பிரிச்சுப் பார்...''

நான் ஆர்வத்துடன் ஆல்பத்தைப் புரட்டி னேன். அந்தப் படங்களில் நிறுவனத் தில் வெவ்வேறு மட்டங்களில் பணியாற்று

**உண்மைக்கதை**

பவர்களுடன் நெருக்கமான நிலையில் பலவித கோணங்களில் சிரித்துக் கொண்டி ருந்தாள் மாளவிகா. திடீரென்று ஒரு புகைப் படம் கண்களில் தட்டுப்பட, எனக்கு தூக்கி வாரிப்போட்டது.

படத்தில் மாளவிகாவை இறுக அணைத்த நிலையில் படுத்திருந்தவர், என் கணவர். மாளவிகாவின் கழுத்தில் இருந்த நெக்லஸ் வேறு கூடுதல் அதிர்ச்சியைத் தந்தது. பிறந்தநாள் பரிசாக அதை எனக்கு வாங்கித் தந்திருந்தார் அவர்.

அடுத்த சில நிமிடங்களில், ''சரி நான் கிளம்பறேன் வீட்டில் போய் சமைக்கணும். காபிக்கு தேங்க்ஸ்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

அதேசமயம் அழைப்புமணி ஒலித்தது. கதவுக்கு வெளியே நின்றிருந்தார் மனேஜர். அவருடைய கைகளில் ஒரு மலர்க்கொத் தும், பிட்ஸா பெட்டியும் இருந்தன. நான் வேண்டா வெறுப்பாக ''ஹலோ சார்...'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினேன்.

இப்போதெல்லாம் ராஜினாமா கடிதத்தை கைப்பையில் வைத்துக் கொண்டுதான் அலுவலகத்துக்கு வந்த போகிறேன். கூடவே, வேறு நிறுவன வேலைக்கும் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், ஒரு கேள்வி என்னை அரித்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்தக் கடலில் இருந்து தப்பித்துவிடலாம். ஆனால், வேறு கடலில் சுறாமீன்களே இல்லாமலா இருக்கும்?




# அறிவியல்



## கர்ப்பம் தரிக்கும் ஆண்

மீன் இனங்களில் சற்று வித்தியாசமானது கடற்குதிரை. இதன் தலை குதிரைபோன்று இருக்கும். இதில் சுமார் 50இனங்கள் உண்டு. சில ரகங்கள் இரண்டடி நீளம் வரை இருக்கும். இது, பெரும் பாலும் சற்று செங்குத்தான தளங்களில் நீந்தும்.

சீனாவில் கடற்குதிரை களை உலர்த்திப் பொடிசெய்து மருந்தாகப் பயன்படுத்துகிறார்கள். சிலநாடுகளில் இதில் 'தாயத்து' செய்து பயன்படுத்துகின்றனர்.

ஆண்கடற்குதிரையின் வாலின் அடிப்புறத் தொடக்கத்தில் ஒரு பை உண்டு. அதில் பெண் கடற்குதிரை முட்டை இடும். அவற்றை ஆண் கடற்குதிரை பத்திரமாக அடைகாக்கும். அந்தப் பையில் இருந்து குஞ்சுகள் பொரித்து வெளிவரும். உலகில் பெண் இனம் மட்டுமே அடைகாக்க, கடற்குதிரையில் ஆண்இனம் அடைகாக்கிறது.



## வெங்காயம்

நோய்த் தொற்றை தடுப்பதற்கும், இரத்த அழுத்தத்தை குறைப்பதற்கும் வெங்காயம் சிறந்தமருந்து என்பது பழைய செய்தி.

புற்றுநோயைத் தடுப்பதற்குக் கூட வெங்காயம் உதவுகிறது. வாரத்திற்கு இரண்டு வெங்காயம் சாப்பிடுபவர்களுக்கு புற்றுநோய் வரும் அபாயம் மிகவும் குறைவு என்றதொரு ஆராய்ச்சித் தகவலை வெளியிட்டிருக்கிறது 'அமெரிக்கன் ஜோர்னல் ஆக்ளினிகல் நியூட்டிஷன்' என்னும் ஏடு. இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், நீரிழிவு நோய்க்கான சிகிச்சையில் பயன்படுத்தப்படும் 'க்வெர்செலின்' என்னும் சக்திவாய்ந்த 'அன்ரி ஒக்ஸிடன்' கூட வெங்காயத்தில் அதிகம் உள்ளதாம்.





## ஹோர்டன் சமவெளி

ஹோர்டன் சமவெளி, நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள இயற்கை வனப்புமிகு உயிரியல் பல்லினத்தன்மை கொண்ட தேசியப்பூங்கா அல்லது பசுமை சமவெளி எனலாம். இதன் மொத்தப் பரப்பளவு 3160 ஹெக்டேயர்களாகும். பருவப்பெயர்ச்சி மழைகளால் இந்த வனப்புமிகு பகுதி எப்போதும் ஈரலிப்பாகவே இருந்து வருகின்றது.

வளவகங்கை, களனி கங்கை, பெலிகுல் ஓயா, உமா ஓயா ஆகிய ஆறுகளின் ஊற்றுகள் இங்கிருந்தே ஆரம்பமாகின்றன. இங்கிலாந்தைச் சேர்ந்த ஆங்கிலேயரான சேர் ரொபேட் ஹோர்ட்டன் என்பவர் தனது பெயரை இதற்கு 1936 ஆம் ஆண்டில் சூட்டினார். 1969 ஆம் ஆண்டு இந்த இடம் தேசிய இயற்கை வனமாகவும், 1988 ஆம் ஆண்டு தேசியப் பூங்காவாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. கடல்மட்டத்தில் இருந்து 2100-2300 அடிவரையான உயரத்தில் அமைந்துள்ள இந்த இயற்கை வனம் எமது நாட்டிலுள்ள ஒரே உயரமான சமவெளியாகும். இங்கு 57 வகையான தாவரங்கள் இன்றுவரையில் அடையாளங்காணப்பட்டுள்ளன. அவற்றில் 29 சதவீதத் தாவரங்கள் இலங்கைக்குரியனவாக இருப்பதுடன் புள்ளிமான், மரை, எருதுகள் போன்ற மிருகங்களே அதிகமாகவும் காணப்படுகின்றன. முள் ஓணான் (Ceratophora stoddorti), பெரிய வரை குரங்கு(Highland Bear monkey) போன்றனவும் இங்கு வாழ்ந்துவருகின்றன.

உலகமுடிவு அல்லது உலக விளிம்பு என்றழைக்கக்கூடிய (World's End) இடமும் இதனை அண்மித்ததாகவே அமைந்துள்ளது.


## உயர்ந்ததும் அகன்றதும்

உலகில மிக உயரமான நீர்வீழ்ச்சி வெனிசுலா நாட்டிலுள்ள 'ஏஞ்சல்' நீர்வீழ்ச்சிதான். இந்த நீர்வீழ்ச்சியை 1937 ஆம் ஆண்டு ஜேம்ஸ் ஏஞ்சல் என்பவர் கண்டுபிடித்தார். ஆகையால், அவருடைய பெயரையே இந்த நீர்வீழ்ச்சிக்கு வைத்துவிட்டனர்.

இந்த நீர்வீழ்ச்சிக்கு அடுத்ததாக உள்ளது தென்னாபிரிக்காவிலுள்ள 'டுகோலா' நீர்வீழ்ச்சியாகும். இது 947மீற்றர் உயரம் கொண்டது. நோர்வே நாட்டிலுள்ள 'யூட்டிகோர்ட்' நீர்வீழ்ச்சி, 'மொங்கிபாசான்' நீர்வீழ்ச்சி ஆகியன முறையே 800மீற்றர், 774மீற்றர் உயரங்களைக் கொண்டவை. அமெரிக்கா விலுள்ள 'யோசிமிடி' நீர்வீழ்ச்சி 739 மீற்றர் உயரத்தைக் கொண்டது.

உலகின் அகலமான நீர்வீழ்ச்சி தென்கிழக்கு ஆசியாவின் 'லாவோஸ்பீகாங்' நதியில் 'கோனே' என்ற நீர்வீழ்ச்சிதான். அதிகளவு நீர் கொண்ட நீர்வீழ்ச்சி நைர் நாட்டிலுள்ள 'லுவாலாபா' நதியிலுள்ள 'போயோமா' நீர்வீழ்ச்சி என்று சொல்லப்படுகிறது.





## பிரியாவிடை பெறும் புலன்கள்

மனிதன் இறக்கும்போது அவனது உடலிலிருந்து கடைசியாக விடைபெற்றுக் கொள்ளும் புலன், கேட்டல் ஆகும். முந்தியடித்துக் கொண்டு, பார்வையே முதலில் பிரியாவிடை பெற்றுக்கொள்கிறது.




## அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் மூன்றாவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

**இவ்வாரப் பரீட்சையையொட்டி, எப்பத்திரிகையிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர், முதல் முறையாக ஆரம்பித்து வெற்றிநடைபோடுகின்றது.**

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றைய தினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ் வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்குமுன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள்களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடிதஉறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

**கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில்** Steping Exam -03 **(படிமுறைப் பரீட்சை-03) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.**

| | |
|---|---|
| ஆசிரியர்<br>கல்விச்சுடர்,<br>'சுடர் ஒளி',<br>இல.85,<br>ஜயந்தமல்லிமராச்சிமாவத்த,<br>கொழும்பு-14. | **Editor**<br>Education Sudar,<br>Sudar Oli,<br>No.85,<br>Jayantha mallimarachi mawatha,<br>Colombo - 14. |

## "எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

**மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே! எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.**

இப்பகுதியில் வெளிவரும் வினாத்தாளுக்கான விடைகளுக்காக நீங்கள் அடுத்த வாரம் வரை காத்திருக்கத் தேவையில்லை. ஒவ்வொரு புதன்கிழமையும் எமது சுடர் ஒளி, உதயன் நாளிதழ்களிலும், அடுத்த வாராந்த வெளியீடுகளிலும் விடைகள் வெளிவரும்.

—கல்விச்சுடர் ஆசிரியர்

## பாராட்டப்படும் கல்விச்சுடர் மாணவச் செல்வங்கள்

படிமுறைப் பரீட்சை 01 இல் கூடிய புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.



| | | | |
|---|---|---|---|
| எம்.ஆஷிக் அஹமட்<br>193 (கம்பளை) | ஏ.எச்.அகீலா<br>139 (சம்மாந்துறை) | ஏ.பி.அனுஷா<br>148 (சம்மாந்துறை) | எஸ்.அகீலா<br>148 (சம்மாந்துறை) |

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 16 மாணவர்களின் பெயர்கள் இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| எம்.ஆஷிக்-197 (கம்பளை) | எம்.ஸஜீத் 194 (காத்தான்குடி) | எப்.ஹில்மா 190 (கம்பளை) | கே.ஷாமனி 190 (கம்பளை) |
| எம்.சர்ஜீன் - 187 (மாவனல்ல) | பி.சமீஹா -181 (நிந்தாவூர்) | பாத்திமா நிஷ்பா -181(நிந்தாவூர்) | எம்.நுஹ்மான் -177 (இபகமுவ) |
| ஜே.மனுவித்தியா - 174 (கொழும்பு - 3) | கே.ஹஷீனா- 171 (நிந்தாவூர்) | எப்.பௌசியா -165(கம்பளை) | ஏ.ஹஸ்பா -165 (நிந்தாவூர்) |
| எப்.நப்லா - 164 (நிந்தாவூர்) | எம்.றஸைட் - 164 (சம்மாந்துறை) | எம்.ஹஸீமா -161 (நிந்தாவூர்) | பி.அபிநயா - 152 (மட்டக்களப்பு) |

சுடர் வாக்கு:- " உன் சிந்தனையே உன்னை ஆளுகின்றது"

புள்ளி:-

# படிமுறைப் பரீட்சை-03 நேரம்:1மணி

மாணவர் பெயர் :: ........................................
முகவரி :: ........................................
கற்கும் பாடசாலை// :: ........................................
கல்வி நிலையம் ........................................
தொலைபேசி இலக்கம் :: ........................................

**01.** கீழே தரப்பட்டுள்ள பாடலை நன்கு வாசித்து விளங்கிய பின் வினாக்களுக்கு விடையளிக்க.

"அகிலத்திற்கே அகரமானவள்
பாசத்தின் சிகரமானவள்
பண்பின் உறைவிடமானவள்
பத்துத் திங்கள் தன்னுள் சுமந்தவள்
உதிரம் தந்து உறவானவள்
தரணியிலே தடம்பதிக்க காரணமானவள்
தெய்வத்தின் உருவானவள்
எந்தன் அன்புத் தாயவள்" -ஷாரு-

1) இக்கவிவரிகளை எழுதிய ஆசிரியர் யார்?
........................................
2) இக்கவிவரிகள் யாரைப்புகழ்ந்து எழுதப்பட்டுள்ளன?
........................................
3) 'அகிலம்' என்பதன் பொருள் யாது?
........................................
4) 'பத்துத்திங்கள்' என்பதன் கருத்தைத் தருக.
........................................
5) 'தாய்' என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள ஒரு சொல்லைத் தருக.
........................................

**02.** பின்வரும் பதங்களின் ஒத்தகருத்துப் பதங்களைத் தருக.


1) பாசம் - ..............................
2) மழலை - ..............................
3) ஏழ்மை - ..............................
4) கடல் - ..............................

**03.** பின்வரும் பதங்களின் எதிர்க்கருத்துப் பதங்களைத் தருக.

1) நீதி - ..............................
2) பகை - ..............................
3) இன்பம் - ..............................
4) மயக்கம் - ..............................

**04.** கீழே தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்க.


மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள்





1) மேலுள்ள படத்தில் காணப்படும் அரசாங்கத்தினால் மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் நான்கைத் தருக.
1. .............................. 2. ..............................
3. .............................. 4. ..............................
2) இங்கே காணப்படும் அரச நிறுவனங்கள் நான்கைத் தருக.
1. .............................. 2. ..............................
3. .............................. 4. ..............................
3) வீதியில் காணப்படும் வீதிக்கடவை யாது?
........................................
4) தொலைத்தொடர்பு சாதனம் ஒன்றைத் தருக.
........................................

# உணவில் அஜினோமோட்டோ சேர்த்து சமைத்து உண்பது நல்லதா?




HDLs (good cholesterol) carry LDLs (bad cholesterol) away from artery walls. LDLs stick to artery walls and can lead to plaque build-up (atherosclerosis).



இதயநோய்கள் வருவதற்கு 3மடங்கு வாய்ப்புகள் உண்டு. நீரிழிவு வியாதியும், உயர் இரத்த அழுத்தமும் இதயநோய் ஏற்பட அதிக வாய்ப்பை அளிக்கின்றன. குடும்ப அங்கத்தினர்களுக்கு நீரிழிவு, இதய நோய்கள் இருந்தால், பரம்பரையில் இதயநோய்கள் ஏற்படுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரின் உயரத்துக்கு ஏற்ப ஆண்-பெண் இருபாலருக்கும் வரையறுக்கப்பட்ட ஒரு நிறை உண்டு. இந்த நிறையை விட 20வீதத்துக்கு மேல் அதிக எடை கொண்டவர்களுக்கு இருதய அடைப்பு வருவதற்கான அபாயம் உண்டு. முறையான உணவுக் கட்டுப்பாடுகளாலும் நடைப் பயிற்சி, தேகப்பயிற்சி மூலமாகவும் உடலைப் பேணி இந்த அபாயத்திலிருந்து மீளமுடியும்.

**கே: ஆண். வயது 50. சமீபத்தில் நெஞ்சுவலி ஏற்பட்டு விசேட இருதய சிகிச்சை நிபுணரிடம் சென்றேன். அவர் பரிசோதனைகள் பல செய்து எனக்கு இருதய நோய் இல்லை. ஆனால், கொலஸ்திரோல் அளவு சற்று அதிகம். அதிலும் LDL என்கின்ற கெட்ட கொலஸ்திரோல் அதிகம். இதனால், இதய நோய் வரும் சாத்தியம் இருப்பதனால் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை குறைக்கச்சொன்னார். அவர் கூறிய கெட்ட கொலஸ்திரோல் என்பது எனக்கு புரியவில்லை. கொலஸ்திரோல் என்றாலே கெட்ட கொலஸ்திரோல் என்றுதான் அறிந்துள்ளேன். விளக்கம் தரவும்.**

பதில்: நம் உணவில் உள்ள Saturated Fat என்ற உணவு கொழுப்புச் சத்துத்தான் கொலஸ்திரோல் தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றது. முட்டை, பட்டர், நெய், இறால், ஆட்டிறைச்சி என்ற உணவு வகைகளில் இந்தக் கொழுப்புச்சத்து உள்ளது. இதிலிருந்து உருவாகும் கொலஸ்திரோல்களைத் தான் Lipoproteins எனப்படும் புரதச்சத்து எடுத்துச்சென்று இரத்த நாளங்களில் படியவைக்கின்றது. LDL என்பது Low Density Lipoproteins ஆகும். இதுதான் தீங்கு தரும் கொலஸ்திரோலை இரத்தத்தில் கடத்திச் செல்லும் ஊடகமாக விளங்குகின்றது. இதுகுறைவாக இருப்பது நமது இருதயத்திற்கு இரத்தக் குழாய்களுக்கு பாதுகாப்பு. இது அதிகமாக இருந்தால் இரத்தக்குழாய்களில் கொழுப்புப் படிவு அதிகமாயிருக்கும். இதனைக் குறைக்க மருந்துகள் உண்டு. உடற்பயிற்சியும் உதவும். HDL எனப்படும் High Density Lipoproteins எவ்வளவுக்கு அதிகமாக எம் இரத்தத்தில் உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு எமக்கு இருதயநோய்கள் வரமாட்டா. இதனை அதிகரிக்க உடற்பயிற்சி உதவும். இதனை அதிகரிக்க் மருந்துகள் இல்லை. புகைபிடிப்பவர்களுக்கு இந்த HDL கொலஸ்திரோல் அளவு குறைவாக இருக்கும். எனவேதான், இதயநோய் வைத்திய நிபுணர்கள் நல்ல கொலஸ்திரோலை (HDL) அதிகரித்து வைத்துக்கொள்ளும் படியும் - கெட்ட கொலஸ்திரோலை (LDL) குறைத்து வைத்திருக்கும்படியும் அறிவுரை சொல்கின்றார்கள்.

**கே: உணவில் அஜீ-நோ மோட்டோ (Aji - No - Moto) சேர்த்து சமைத்துச் சாப்பிடுவது நல்லதா?**

பதில்: அஜினமோட்டோ (Aji - No - Moto) என்பது உணவில் சேர்க்கும் ஒரு சுவைகூட்டும் இரசாயனப் பொருள். உண்மையில் இது Monosodium Glutamate என்கின்ற இரசாயனப் பெயர் கொண்டது. இது 1909 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு அஜினமோட்டோ என்ற ஜப்பானியக் கம்பெனியால் வியாபாரப்படுத்தப்பட்டுஇன்று இந்த இரசாயனப்பொருள் சேர்க்கப்படாத சீன உணவு இல்லை என்று சொல்லும் அளவிற்கு பிரபலமாகியுள்ளது. இதற்கென்று ஒரு சுவை இல்லை. இதனை எந்த உணவில் சேர்க்கின்றோமோ அந்த உணவின் சுவையை மிகையாக வெளிப்படுத்துகின்றது. இதனைச் சேர்ப்பதால் எந்தவிதக் கெடுதலும் வராதுஎன்று அமெரிக்க Food & Drug சங்கம் பரிந்துரைத்துள்ளது.

ஆனால், மனித உடம்பு என்பது ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியானது அல்ல. ஒருவரின் உணவு இன்னொருவரின் விஷம். One man food is another man poison என்ற பழமொழிக்கேற்ப ஒரு சிலருக்கு இந்தக் கெடுதல் இல்லாத வாசனைப்பொருள் பெருந் தீங்கை விளைவித்திருப்பதாக அறியப்படுகின்றது. இது தனியாகவே தீங்கை விளைவிக்கின்றதா அல்லது உணவுகளோடு கலந்து சமைக்கும்போது ஏற்படும் மாற்றம் தீங்கைத் தருகின்றதா என்பது தெரியவில்லை. ஒரு சிலருக்கு — இந்த MSG எனப்படும் Monosodium Glutamate ஒவ்வாத்தன்மை விளைவுகளைத் தருகின்றது. ஒருசிலருக்கு Neuritis நரம்பு எரிச்சலை தருகின்றது. எனவே மொத்தத்தில் தீங்கில்லாத பொருள் என்று அடித்துக்கூறமுடியாது. கர்ப்பிணித் தாய்மார்கள் இதுசேர்ந்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. குழந்தைகளின் சிற்றுண்டிகளான Chips, Crispy போன்றவைகளில் இவை சேர்க்கப்படுகின்றன. அவை குழந்தைகளின் பசியுணர்வைத் தூண்டி அளவுக்கதிகமாக இந்த நொறுக்குத் தீனிகளைச் சாப்பிட வைக்கின்றன. என்னைப்பொறுத்தவரையில் எமது உணவில் மிளகு, கறுவா போன்ற வாசனைத்திரவியங்கள் நிறைய இருக்கும் போது எதற்காக வீண் வம்பை விலைகொடுத்து வாங்கவேண்டும்.

**இலவச மருத்துவ ஆலோசனைகளை**
**'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்**
**டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்**
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
**இலவச மருத்துவ ஆலோசனை**
**'சுடர் ஒளி'**
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு-14.

**கே: கண்தானம் செய்ய விரும்புகின்றேன். எனது வயது 75. ஆனால், நான் இறந்த பின் கண்களைப் பிய்த்துக்கொண்டு போனால் எப்படி இருக்கும் என்று எண்ண, என்னவோ மாதிரி இருக்கின்றது. கண்களை எடுக்காமல் கண்தானம் செய்யலாமா? உயிரோடு இருக்கும் போது ஒரு கண்ணைத் தானம் செய்யமுடியுமா?**

பதில்: நீங்கள் கண்தானம் பற்றி சினிமாக்கள் - நாடகங்கள் சித்திரிப்பதை பார்த்துவிட்டு, பிழையான கருத்துகளை வைத்திருக்கின்றீர்கள் என எண்ணுகின்றோம். கண்தானத்தின்போது முழுக்கண்ணையும் அகற்றுவதில்லை. மனிதன் இறந்து ஓரிரு மணிநேரத்தில் கண்ணின் கருமணி என்கின்ற Cornea வில் உள்ள மேல்தோலை உரித்தெடுத்து சேகரித்து வைப்பதுதான் கண்தானம் செய்யும்போது நடைபெறும் விஷயம். நீங்கள் நினைப்பதுபோல் கண்ணைப் பிடுங்கிக்கொண்டு போகமாட்டார்கள். எனவே, பயப்பட வேண்டாம். உயிரோடு இருக்கும்போது எவரும் கண்ணைத் தானம் செய்ய விரும்பமாட்டார்கள். எந்த மருத்துவரும் இதனைச் செய்ய முன்வரவும் மாட்டார்கள். கண்தானம் செய்ய விரும்புபவர்கள் - கொழும்பில் உள்ள இலங்கை கண்தான சங்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுசெய்துகொள்ளலாம். இன்று இலங்கையர் கொடுத்த கண்தானங்களால் உலகின் பல பாகங்களிலும் பார்வை பெற்றுப் பலனடைபவர்கள் பலர்.

**கே: ஆண், வயது 38. திடீரென்று ஒருநாள் நெஞ்சுவலி ஏற்பட்டது. அலுவலகத்திலிருந்து பிரபல வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) அனுமதித்து பல பரிசோதனைகள் செய்யப்பட்டன. இறுதியில் எனக்கு ஏற்பட்ட நெஞ்சுவலி இருதயம் சம்பந்தமானதல்ல என்று சொன்ன இதய வைத்திய நிபுணர் நான் Type a Personality என்றும் குடும்பத்தில் தந்தைக்கு இருதய நோய் இருக்கும் சாத்தியம் இருப்பதாலும் எனது எடை இருக்கவேண்டிய நிறையைவிட, அதிகமாக இருப்பதாலும், எதிர்காலத்தில் இதய நோய்கள் வருவதற்குச் சந்தர்ப்பம் அதிகம் என்று பயமுறுத்தினார். இந்த வைத்தியர் கூறியது- நான் அப்பொழுது இருந்தநிலையில் குழப்பமாக இருந்தது. எனவே, இதுபற்றி விளக்கமுடியுமா?**

பதில்:பொதுவாகவே Type a Personality மனிதர்களுக்கு இதயநோய் வரும் சாத்தியக்கூறுகள் அதிகம் என்று நிருபிக்கப்பட்டுள்ளது. இந்தவகை மனிதர்கள் - சாதனை படைப்பவர்களாக, போட்டி மனப்பான்மை உள்ளவர்களாக, சின்னச் சின்ன விஷயங்களுக்கு பொறுமையை இழப்பவர்களாக இலகுவில் கோபப் படுபவர்களாக இருப்பார்கள். இவர்கள் தமது மனச்சுமைகளுக்கும் உணர்ச்சிப் போராட்டங்களுக்கும் இடம்கொடுத்து வந்தார்களேயானால் இதயநோய்கள் ஏற்படும். மற்றும் அநேகமாக இத்தகைய மனிதர்கள் தமது உணர்ச்சிகளை குறைக்க புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். புகை பிடிப்பவர்களுக்கு இதயநோய்கள் வருவதற்கு 3மடங்கு வாய்ப்புகள் உண்டு.

**கே: எனது குழந்தை வயது 4 மாதம். அடிக்கடி அழுகின்றது. காரணம் தெரிய வில்லை. டாக்டரிடம் கொண்டு சென்றால், அவர் சோதித்துவிட்டு, எதுவித நோயும் இல்லை என்று தூக்கம் தரும் மருந்துகளை மாத்திரம் தருகின்றார். இதனால், எதுவித பிரயோசனமும் ஏற்படவில்லை. எனது குழந்தை பகலில் பிறந்ததால்தான் இரவில் தொடர்ந்து அழுகின்றது என்று வீட்டில் உள்ள பெரியோர்கள் கூறுகின்றார்கள். இது உண்மையா? ஏன் எனது குழந்தை அழுது கொண்டே இருக்கின்றது?**

பதில்: பகலில் பிறக்கும் குழந்தைகள் இரவில் அழும், இரவில் பிறக்கும் குழந்தைகள் பகலில் அழும் என்பதற்கு எதுவித அறிவியல் ஆதாரங்களுமில்லை. ஒரு குழந்தை எந்த விதத்தில், எந்த நேரங்களில் அழுகின்றது என்பது அது ஒரு புதிய சூழலுக்கு தன்னைத் தயார் படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை அல்லது தன்னைச் சுற்றி இருப்பவர்களின் கவனம் எந்த அளவுக்கு அதற்கு தேவைப்படுகின்றது என்பதைப் பொறுத்தது. அநேகமாக பசி ஏற்படும் போதெல்லாம் குழந்தைகள் அழும். தாயைப் பொறுத்தவரையில் குழந்தைக்கு வயிறு நிரம்ப பாலூட்டியதாக திருப்திப்படலாம். ஆனால், வளரும் குழந்தைகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகும் என்பதை தாய் மனதில் கொள்ளவேண்டும்.

சிலசமயங்களில் பால்குடிக்கும் போது கொஞ்சம் காற்றும் குழந்தையின் வயிற்றுக்குள் சென்று குழந்தைக்கு அசௌகரியத்தை கொடுக்கும். அந்த அசௌகரியத்தை குழந்தைஅழுகை மூலமாக வெளிப்படுத்தும். பால் கொடுத்த பிறகு தோளில் சாய்த்து முதுகைத் தடவிக் கொடுத்தால் உள்ளே உள்ள வாயு ஏப்பமாக வெளியேறி விடும். சிலவேளைகளில் குழந்தை சிறுநீர், மலம் கழித்த பின்னர் தனது அசௌகரியத்தை காட்ட அழும். அதனை நீக்கி சுத்தப்படுத்திவிட்டால் அழுகை நின்றுவிடும்.

சிலகுழந்தைகள் பகலிலோ, மாலையிலோ தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடர்ந்து வீரிட்டு அழும். இதனை Colic என்று மருத்துவத்தில் கூறுவார்கள். அநேகமாக முதல்நான்கு மாதத்துக்குள் தான் இந்த அழுகை ஏற்படுகின்றது. எத்தனை மருந்து செய்தாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இந்த அழுகை. தானாகவே நின்றுவிடும். இதற்குரிய சரியான காரணமும் சரி மருந்து களும் சரி இதுவரை கண்டறியப்பட வில்லை.

ஒரு குழந்தையை நோய் வைத்திய நிபுணர் - குழந்தையை நன்கு பரிசோதித்து விட்டு, எதுவித நோயும் இல்லை என்று கணித்துவிட்டார் என்றால் குழந்தையின் அழுகை பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை என்று நான் நம்புகின்றேன்.



கீர்த்தி சுவர்லா

# மாதவனின் 'யாவரும் நல

'எவனோ ஒருவன்', 'லீலை', 'வாழ்த்துக்கள்' போன்ற படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் மாதவன் அடுத்து 'யாவரும் நலம்' என்ற படத்திலும் நடிக்கிறார். 'இரண்டு' படத்திற்கு பின்னர் புது முடிவென்றை எடுத்துள்ளார் மாதவன். வெறும் குடும்பப்பாங்கான படங்களில் இனிமேல் நடிப்பதில்லை. குடும்பப் பாங்கில்லாத படங்கள் தமிழில் மிகவும் குறைவு. இதனால் மாதவனே நல்ல கதை, நல்ல இயக்குநர்களை தேடிப்பிடித்து அவர்கள் படங்களில் நடித்து வருகிறார். மாதவன் ஒப்புக் கொண்டிருக்கும் புதிய படம் 'யாவரும் நலம்'. வள்ளலார் பாணியில் தலைப்பு வைத்திருக்கும் இப்படம் தமிழில், ஹிந்தியில் ஒரே நேரத்தில் தயாரிக்கப்படுகிறது. இதனால், ஹிந்தி ரசிகர்களை கவரும் வகையில்இஷா தியோலை நாயகியாக ஒப்பந்தம் செய்துள்ளனர். இப்படத்திற்கு அனேமாக சங்கர் எசன் லாய் இசையமைக்கலாம் என்று நம்பப்படுகிறது. படத்தை விக்ரம் இயக்குகிறார்.

# 35 வயது நாயகனுக்கு 13 வயது நாயகி

இயக்குநர் அமீர் நடிக்கும் படத்திற்கு கதாநாயகிக்குத் தட்டுப்பாடு. இதனால் அமீர் சம்பந்தப்பட்ட காட்சிகளை மட்டும் படமாக்க வேண்டிய நிலையில் இருக்கிறார் பட இயக்குநர் சிவா. இது தொடர்பாக இயக்குநர் சிவா இவ்வாறு கூறினார்:- ''இப்படத்தில் அமீர் முரட்டு மனிதராக வருகிறார். இவர் காதலிப்பது 13 வயதுச் சிறுமியை. 13 வயதில் கதாநாயகி கிடைப்பது குதிரைக் கொம்பாகவே இருக்கிறது. தமிழ், தெலுங்கில் மட்டுமல்ல ஹிந்தியிலும் நாயகியைத் தேடிக்கொண்டிருக்கிறோம்'' - என்றார் சிவா. ரஷ்ய எழுத்தாளர் நபகோவ் நடுத்தவர வயது மனிதனுக்கும், அவரில் கால் பகுதி வயதிலிருக்கும் சிறுமிக்கும் காதல் உருவாவதை கதையாக எழுதியிருக்கிறார். இந்தக் கதை 'லோலிட்டா' என்ற பெயரில் கறுப்பு வெள்ளை படமாக எடுக்கப்பட்டது. பின்னர் சமீபத்தில் இப்படம் மீண்டும் வண்ணத்தில் எடுக்கப்பட்டது. 'லோலிட்டா' படத்தை வைத்து ராம்கோபால் வர்மா அமிதாப்பச்சனை வைத்து 'நிஷப்த்' திரைப் படத்தை இயக்கினார். அதைப் போன்ற கதைதானே இதுவும் என்று சிவாவிடம் கேட்டால், இல்லை என்று மறுக்கிறார். இப்படத்தின் கதை, திரைக்கதையை அமீரே எழுதியிருக்கின்றாராம்.



# புதிய முகங்கள் நடிக்கும் 'யாருக்கு யாரோ'

எவர் வேண்டுமென்றாலும் படம் எடுக்கும் இந்தக் காலத்தில் யுனிவெஸல் தவமணி சினி ஆட்ஸ் நிறுவனமும் தமிழ்த்திரையுலகிற்குள் நுழைந்துள்ளது. இந் நிறுவனம் தயாரிக்கும் படத்திற்கு 'யாருக்கு யாரோ' என பெயரிடப்பட்டுள்ளது. நாயகன் - நாயகியில் ஆரம்பித்து தொழில்நுட்பக் கலைஞர்கள்வரை அத்தனைபேரும் புதிய முகங்கள். தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை புதுமுகங்கள் என்று எதையும் அலட்சியப் படுத்த முடியாது. ஏனென்றால் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்று யாரும் கணிக்க முடியாது. சாம் ஆண்டர்சன் என்ற இளைஞர் நாயகனாகவும், ஜோதி, வர்ணிகா என்ற இரு மும்பை மொடல்கள் நாயகிகளாகவும் அறிமுகமாகின்றனர். குறைந்த விலையில் கார்களை தயாரித்து விற்பனை செய்வதற்கு முயற்சித்து வரும் நாயகனை நாயகிகள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு காதலிக்க நாயகன் என்ன முடிவெடுக்கிறார் என்பது தான் கதை. கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை, இயக்கம் என அத்தனைக்கும் சொந்தக்காரன் ஜோ ஸ்டேன்லி. (டி.ராஜேந்தருக்கு வேண்டப்படுபவர்.)



கண்ணாமூச்சி ஏனடா
பிருத்விராஜ் - சந்தியா



# சவூதி அரேபிய தேசிய தினம்
## 23.09.2007

# அரேபிய தீபகற்பத்தின் ஆற்றல் மிக்க மன்னர்!



மன்னர் அப்துல் அஸீஸின் வாழ்க்கை போராட்டம், வீரம், ஜிஹாத் மற்றும் ஒரே கடவுள் தான் உண்டு என்ற சித்தாந்தம் ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கான செயற்பாடுகள் நிறைந்தது.

இறைநம்பிக்கையை வளர்த்தல், ஜிஹாத் மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றின் முன்னோடியாக அவர் திகழ்ந்தார்.

இவ்வாறாக அவர் முஸ்லிம்களின் மனங்களில் உயர்ந்த இடத்தில் உள்ளார். அனைத்து எழுத்தாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் அவரது திறமையை-ஆளுமையை ஒரேவிதமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இவரை மக்கள் 'பாலைவனத்தின் சிறுத்தை' என்றும் 'பாலைவனக் கழுகு' என்றும் அழைக்கின்றனர்.

அறிவு, தீர்மானம், திறமை மற்றும் நீதி போன்றவற்றில் அவர் சிறந்து விளங்கினார் என்றும், அந்த விடயங்களில் அவர் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைக் கொண்டுள்ளார் என்றும் அமின் அல் ரிஹானி கூறியுள்ளார்.

அப்துல் அஸீஸ் பாலைவனத் திறமைசாலி மாத்திரமல்ல, அவர் மிகவும் புத்திசாலித்தனமான தந்திரமுள்ள மன்னர்களில் ஒருவர் என்றும் கிரிமிட் ரோஸ்வெல்ட் என்பவர் கூறியுள்ளார்.

அவரது அசாதாரண

(16ஆம் பக்கம் பார்க்க)

சவூதி அரேபிய தேசிய தினம் சிறப்பிதழின் சில பதிப்புக்களில் உள்பக்கத்தில் (17, 18, 19, 20) தவறுதலாக சவூதி அரேபிய சுதந்திர தினம் என அச்சாகி விட்டது. சவூதி அரேபிய தேசிய தினம் என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.
(ஆ-ர்)


OUR WARMEST WISHES TO THE CUSTODIAN
OF TWO HOLY MOSQUES
KING ABDULLAH BIN ABDUL AZIZ AL SAUD
HIS ROYAL HIGHNESS CROWN PRINCE
SULTAN BIN ABDUL AZIZ AL SAUD CHARGE DE AFFAIRES
HIS EXCELLENCY MR. RIYAD S.A.AL KHENENE
FIRST SECRETARY AND HEAD OF CONSULAR DIV.
MR. HANI IBRAHIM AL IBRAHIM FIRST SECRETARY
MR. SULTAN ABDUL RAHMAN AL DAKEL
AND ALL DISPLOMATIC AND OFFICAL
STAFF OF THE ROYAL EMBASSY OF
SAUDI ARABIA IN COLOMBO AND ALSO
THE ENTIRE SAUDI ARABIAN NATION





ORBIT
International Co.
#1053, Maradana Road, Colombo-08
Tel: 2671682, Fax: 2671685
E-mail: rismy@dialogsl.net/rismy555@yahoo.com

| C.C.U. LINE (PVT) LTD. Colombo. | HIL COUNTRY INTERNATIONAL SCHOOL- KANDY. | AL-FERSAN FREIGHT SERVICES JEDDAH. |

M.S.M.RISMY (Abu Fahad) HOT LINE: 0777 391691

# சவூதி அரேபிய தேசிய தினம்
## 23.09.2007

## அரேபிய தீபகற்பத்தின்....


(15ஆம் பக்கத் தொடர்ச்சி)
திறமைகள் பல வெற்றிகளைப் பெற வழிவகுத்தன. அவர் இரக்கமனம் கொண்டவராக இருந்தபோதிலும் உறுதியான உள்ளங்கொண்டவராக இருந்தார்.

அவர் தன்னம்பிக்கையும் அடக்கமும் மரியாதையும் உடையவர்.அவர் அதீத இறைநம்பிக்கை கொண்டவராகவும் விளங்கினார். தனது எல்லா நடவடிக்கைக்கும் இறைவனை நம்பியிருந்தார். இறைவனிடமே உதவியை நாடுவார். இதன் காரணமாக அவர் மிகவும் வெற்றியாளராகத் திகழ்ந்தார்.

அவர் குர் ஆனை மனப்பாடம் செய்ததோடு, மார்க்க சட்டதிட்டங்களையும் முகமது நபி அவர்களின் பொன்மொழிகளையும் மனப்பாடம் செய்திருந்தார்.

அவர் மிகவும் சிறந்த பரிசுத்த வீரராக இருந்தார். அன்பும், நன்றியுணர்வும் அவரது பண்புகளில் அடங்கும். தனது எதிரிகளை அன்பாக உபசரிப்பார்.

ஹிஜ்ரி ஷவ்வால் மாதம் பிறை 05 இல் அவரால் ரியாத் மீளக்கைப்பற்றப்பட்டமை யானது அவரது வீரத்திற்குச் சிறந்த ஆதாரம். அவர் அநீதிக்கும் மூடத்தனத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தார். இறை நம்பிக்கையைப் பலப்படுத்தினார்.



சவூதி மன்னர் இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் உரையாடுகிறார்.

ரியாத் நகரம் இவரால் கைப்பற்றப்பட்டமையானது சவூதியை ஒன்றிணைக்கும் இவரது நீண்ட முயற்சிக்குப் பின்னரல் ஏற்பட்ட இராணுவ வெற்றிகளுக்கு திருப்புமுனையாக அமைந்தது.

நாடு முழுவதும் தனது அதிகாரத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய நிலையில் அவர் இருந்தார். அல் குர்ஆன் மற்றும் நபிகளாரின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு குலரீதியான சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அனைவரையும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைத்தார்.

பொரளாதாரம், சமூகம், மார்க்கம் போன்றவற்றில் இவரது ஆட்சியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. எதிரிகளையும், நண்பர்களையும் ஒரே மாதிரியாகக் கருதும் தன்மையும் உருவானது.

பிரிவினைகளை இல்லாதொழித்து நாட்டை ஒன்றிணைத்த அவரது சாதனை இவர் செய்த ஏனைய சாதனைகளை விஞ்சிநிற்கின்றது. அவர் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் ஒற்றுமை போன்றவற்றிற்கு முதலிடம் கொடுத்தார்.

இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதை ஸ்திரப்படுத்தினார். இவரது ஆட்சியில் ஷரீஆ சட்டத்தின் கீழ் ஒவ்வொரு மனிதனின் உயிரும் சொத்துகளும் பாதுகாக்கப்பட்டன.

நிர்மாணம் மற்றும் அபிவிருத்தியின் அடிப்படையான கல்வியின் மீதும் அவர் கவனம் செலுத்தினார். மக்களுக்கு நீதி வழங்குவதற்காக தனது வீட்டுக் கதவைத் திறந்து வைக்குமாறே அவர் தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை அவர் விவசாயத்தில் அதிக கவனம் செலுத்தினார். விவசாயக் கிராமங்களையும் உருவாக்கினார்.

அவர் முஸ்லிம் நாடுகளுடன் தனது உறவை வளர்த்துக்கொண்டார். அந்நாடுகளுக்கு உதவிகளை வழங்கினார்.

இவரது ஆட்சியில் சவூதி பாதுகாப்பான, சுதந்திரமான நாடாக மாறத் தொடங்கியது. எகிப்தில் இருந்து பிரிட்டன் படையினரை விரட்டி யடிப்பதற்கும் டுனிசியாவின் விடுதலைக்கும் அவர் உதவினார்.







# சவூதி அரேபிய சுதந்திரதின சிறப்பிதழ்


## 23.09.2007















# சவூதி அரேபிய சுதந்திரதின சிறப்பிதழ்
## 23.09.2007

# அரபு இராச்சியங்களின் முத்து அகிலம் வாழ் முஸ்லிம்களின் சொத்து

மனித வரலாறு, சமயங்கள் மற்றும் நாகரிகங்கள் ரீதியிலான மிகவும் முக்கியத்துவம் பொருந்திய பிரதேசமாகத் திகழ்கின்ற அரபு தீபகற்பத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கிய ஒரு நாடு சவூதி அரேபியாவாகும்.

பல இறைதூதர்களின் பிறப்பிடமாகவும் பல இறைவேதக் கட்டளைகள் இறங்கிய பிரதேசமாகவும் மனித நாகரிகங்கள் பலவற்றின் உறைவிடமாகவும் இந்த அரபு தீபகற்பம் விளங்குவதை வரலாற்றைப் படித்துப் பார்க்கின்றபோது மிக இலகுவில் புரிந்து கொள்ள முடிகின்றது.

உலகில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அரபு தீப கற்பம் அமைந்துள்ளது. முழு உலகுக்கும் மையமாக அமையும் விதத்தில் புவியின் வட அரைப்பகுதியில் அது அமைந்திருப்பது அதன் கேந்திர முக்கியத்துவத்தை விளக்குவதாக உள்ளது.


சவூதி அரேபியா ஆசியாக் கண்டத்தில் தென் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. அதன் எல்லைகளாக வடக்கே- ஜோர்தானும் ஈராக்கும், குவைத்தும், கிழக்கே - பாரசீக வளைகுடாவும் ஐக்கிய அரபு இராச்சியமும் கட்டாரும் பஹ்ரைனும், தெற்கே ஓமானும் ஜெமனும் மேற்கே செங்கடலும் அமைந்துள்ளன.

அரபு தீபகற்பத்தின் ஐந்தில் நான்கு பகுதியை உள்ளடக்கியுள்ள சவூதி அரேபியா 2,250, 000 சதுர கிலோமீற்றர் அல்லது 870, 000 சதுர மைல் பரப்பளவு கொண்டது.

பாரிய நிலப்பரப்பைக் கொண்டுள்ளதால் இந்நாட்டில் இடத்திற்கிடம் காலநிலை வேறுபட்டுக் காணப்படுகின்றது. கோடை காலத்தில் பாலை வனத்தில் மதிய வேளையில் வெப்பநிலை 40 பாகை செல்ஸியஸை விடவும் அதிகம் காணப்படும். மாரி காலங்களில் இரவு வேளைகளில் வெப்பநிலை உறைபனி நிலையையும் விட தாழ்ந்ததாக இருக்கும்.

செங்கடலை அண்மித்த பகுதிகளில் மலைகள் காணப்படுவதுடன் மத்திய பகுதியில் மலையும், பாலைவனமும் உண்டு. நஜ்த் பிரதேசத்துக்குத் தெற்கே அமைந்துள்ள 'அர்ருப் உல் காலி 'என்ற பிரதேசத்தில் மழை பெய்வதே இல்லை. முழுவதும் பாலைவனமாகவே காணப்படுகின்றது.

பொதுவாக, இந்நாட்டில் பாலைவனக் கால நிலையே நிலவுகின்றது. நதிகள் அற்ற நாடாகக் காணப்படும் சவூதி அரேபியாவில் சில மலைத் தொடர்களும் மலைகளும் காணப்படுகின்றன. துவைத் மலைத்தொடர், அஸ்ஸரவாத், அஜா, ஸல்மா மலைகள் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூற முடியும்.














# சவூதி அரேபிய சுதந்திரதின சிறப்பிதழ்
## 23.09.2007

# சர்வதேச மட்டத்தில் தலைநிமிர்ந்து நிற்கும் சவூதி அரேபியா

சர்வதேச மட்டத்தில் தலைநிமிர்ந்து நிற்கும் வகையில் பொருளாதாரம், கல்வி அபிவிருத்தி, தகவல் தொழில் நுட்பம், கட்டட நிர்மாணம், விவசாயம், வர்த்தகம் மற்றும் கைத்தொழில் என்பவற்றில் மேம்பாடடைந்து பெரும் வளர்ச்சியடைந்தமைக்கு சவூதி அரேபியா சான்று பகர்கின்றது. பிரமிக்கத்தக்க இவ்வளர்ச்சிக்கு முன்நின்று செயற்பட்டவர்கள் அந்நாட்டில் உன்னதத் தலைவர்களே. பொது நன்மைக்காக அடிப்படை தேவையான அறிவு வளர்ச்சி மற்றும் தன்னம்பிக்கை என்பவற்றைக் கட்டி எழுப்பிய சிற்பிகளும் இவர்களே.

சிதைந்து கிடந்த சவூதி அரேபியாவை மன்னர் அப்துல் அஸீஸ் ஒன்றிணைந்து ஒரு பலம் மிக்க இராச்சியமாக கட்டி எழுப்பியதைத் தொடர்ந்து அரிய பல சாதனைகள் தொடர்ந்தன.

அறிவாற்றல் மிக்க தலைமைத்துவம், சிறந்த தீர்மானம், நாட்டுப்பற்று, அசாதாரண முயற்சி என்பவற்றால் நாட்டைக் கட்டி எழுப்பும் பணிகள் ஒன்றிணைந்து செயல்படுத்தப்பட்டன.

மறைந்த மாமன்னர் அப்துல் அஸீஸின் உயரிய சிந்தனைகளும் பரிணாம வளர்ச்சியும் அவரது மகன் அப்துல்லா பின் அப்துல் அஸீஸின் எதிர்கால வளர்ச்சியில் பரிணமித்தது. மன்னர் அப்துல் அஸீஸின் ஆட்சிக் காலத்தில் இருந்தே பலதரப்பட்ட அரசியல் நுணுக்கங்களை அறிந்து கொண்டார்.

பைசல் பின் அப்துல் அஸீஸ் ஆட்சிக்கு வந்த பின் இவர் நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களை ஆய்வு செய்யும் அதிஉயர் அதிகார சபையில் உறுப்பினராகப் பொறுப்புடன் செயற்பட்டார்.

மன்னர் பைசலின் காலத்தில் இந்த அதி உயர் குழுவில் ஐந்து பேர் உறுப்பினர்களாக இருந்தனர். மௌசாத் பின் அப்துல் ரஹுமான், மறைந்த மன்னர் ஹாலித், பாத் அப்துல் , மன்னர் அப்துல்லா சுல்தான் பின் அப்துல் அஸீஸ் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

இதன் மூலம் இவர் உள்ளூர் மற்றும் வெளிவிவகாரங்களில் பெரிதும் அனுபவ முதிர்ச்சியைப் பெற்றுக் கொண்டார். நாட்டில் ஒரு நிலையான அந்தஸ்தில் இவர் இருந்தபோதிலும் நாட்டின் பல தரப்பட்ட அபிவிருத்திகளுக்கும் முக்கிய பங்காளியாக இருந்து செயற்பட்டார். மன்னர் அப்துல்லா பல்வேறு வழிகளிலும் நாட்டின் பரிணாம வளர்ச்சிக்கு கனிப்புடன் செயல்பட்டவர் என்பதில் ஐயமில்லை.




WE SALUTE THE GOVERNMENT OF THE KINGDOM OF SAUDI ARABIA AND THE ENTIRE SAUDI ARABIAN NATION






AL ZACKIRA TRAVELS & TOURS

HAJJ & UMRAH OPERATOR

AL HAJ. S.H.S.JAMALDEEN (JP)

OVERSEAS MANPOWER RECRUITING & AIR LINE TICKETING AGENT

#20/1, 1st Floor, Station Road, Matale.
Tel: 0094 66 5675134 Fax: 0094 66 2244383 Mobile: 0777 810659
E-mail: al zakira@slt.lk



# சவூதி அரேபிய சுதந்திரதின சிறப்பிதழ்

## 23.09.2007


සිංහල, දෙමළ, අරාබි හා ඉංග්‍රීසි
භාෂා පරිවර්තන කටයුතු


ඔබගේ සියලුම පුද්ගලික හා ව්‍යාපාරික කටයුතුවලට
අදාළ අරාබි භාෂා සේවාවන් සඳහා

அரபு மொழி சம்பந்தமான
சகல வித தீர்வுகளுக்கும்...

தனிப்பட்ட, வியாபாரம் சம்பந்தப்பட்ட சகலவித
ஆவணங்களையும் சிங்களம், தமிழ் மற்றும்
ஆங்கில மொழியிலிருந்து அரபு மொழியில் தயாரிப்பதற்கு
தொடர்புகொள்ளுங்கள்


**Total Solution in Arabic Language**
Personal & Business Letters,
Business Presentation and Agrements etc.

**M.M.Jainudeen**
#198, Arunodaya Mawatha, Obesekarapura,
Rajakiriya.
Tel: +94 11 2865917, +94 11 3231600
E-mail: biztijar@eol.lk, zainsuad@yahoo.com




**BURAQUE TRAVELS**
HAJJ & UMRAH OPERATORS
#62, DEMATAGODA ROAD,
COLOMBO-09
Tel: 2678811/ 0777 909377
Fax: 2671054
E-mail: buraque@dialogsl.net



**NEW RIZAN TRAVELS**
OVERSEAS MANPOWER RECRUITING AGENT



No. 103/1, 1st Floor,
Mihindu Mawatha,
Colombo-12.
Tel: 2332882, 2472061
2384592, 060 2133006
Fax: 2384591
E-mail: rizantrv@dialogsl.net






WE SALUTE THE GOVERNMENT
OF THE KINGDOM OF
SAUDI ARABIA AND THE
ENTIRE SAUDI ARABIAN NATION




**M.P.S.TRAVELS**
HAJJ & UMRAH OPERATORS
#14, Main Street, Matharankuli
Tel: 032 2268004/ 032 2268084
Branch:
Al.Haj S.A.Amanulla
# 161 1/5 M.J.M.Lafir
Mawatha,
Colombo-12.



# சவூதி அரேபிய தேசிய தினம்
# 23.09.2007

## சவூதி அரேபியாவின் நிர்வாக பிரிவுகளும் முக்கிய நகரங்களும்

2007ஆம் ஆண்டின் தகவல்களின் படி, சவூதி அரேபியாவின் சனத்தொகை 24 மில்லியனாகும். சில முக்கிய நகரங்களின் சனத்தொகை ஒன்று தொடக்கம் மூன்று மில்லியன் மக்களைக் கொண்டுள்ளதுடன், சில மிகச் சிறிய கிராமங்களின் சனத்தொகை சில நூறு மக்களாகவும் காணப்படுகின்றது. அத்துடன் சவூதி அரேபியாவில் எல்லாக் குடிமக்களும் முஸ்லிம்களே! தொழிலுக்காகச் சென்றவர்கள் மட்டுமே வேற்று மதங்களைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். பல முஸ்லிம் நாடுகளில் இருந்து முற்காலத்தில் குடியேறிய அரபு முஸ்லிம்களும் பல கோத்திரங்களைச் சேர்ந்த அரபு மக்களும் இந்த நாட்டில் வசிக்கின்றனர்.

இந்த நாட்டு அரசாங்கத்தின் சட்ட யாப்பாக அல்குர்ஆன் (அல்லாஹ்விடமிருந்து இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட அரபு மொழியில் அமைந்துள்ள வேதநூல்) மற்றும் அல்ஸுன்னா (இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிமுறை) ஆகிவற்றை கொண்டுள்ளது. அவை கூறும் சட்ட திட்டங்களே நாட்டின் சட்டங்களாகும். உலக மத விவகாரங்களில் அவை இரண்டினதும் சட்டங்களே அமுல்படுத்தப்படுகின்றன.

சவூதி அரேபியாவின் கொடி செவ்வக வடிவமான பச்சை நிறமானது. கொடியின் மேல் பகுதியில் ''லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்'' என்ற வாசகம் அரபு மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் பொருள்: 'அல்லாஹ்வைத் தவிர வணங்கி வழிபடத் தகுதியானவன் யாருமில்லை. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார்.' என்பதாகும்.

இது வெள்ளை நிறத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். இதன் கீழ்ப்பகுதியில் வெள்ளை நிறத்தில் உருவிய வாள் ஒன்று காணப்படும். கொடியில் காணப்படும் அரபு வாசகம் இந்த நாட்டின் கொள்கையைப் பிரகடனப்படுத்துவதாகவும், வாள்- உண்மை, நீதி, நேர்மை போன்வற்றைச் சுட்டுவதாகவும் உள்ளன. இந்தக்கொடி ஒருபோதும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்படுவதில்லை.

இரண்டு வாள்கள் குறுக்காகப் பொறிக்கப்பட்டு அவற்றின் மேல் ஓர் பேரீச்சம்பழ மரம் இருப்பது இந்த நாட்டின் இலச்சினையாக அமைந்துள்ளது. நீதி, நேர்மையின் காரணமாகக் கிட்டும் சுபீட்ச வாழ்வை இது பிரதிபலிப்பதாக உள்ளது.

### தேசிய தினம்

ஏனைய நாடுகளைப் போன்று சவூதி அரேபியாவும் அதற்காக ஒரு நாளை தேசிய தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. தற்போதுள்ள நவீன தேசத்தை நினைவு கூரும் வகையில் இந்தத் தினம் அமைந்துள்ளது. இந்த நவீன தேசம் சவூதி அரேபிய இராச்சியம் என 1902ஆம் ஆண்டு மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களால் 31 வருட போராட்டத்தின் பின் உருவாக்கப்பட்டது. இது செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி நிகழ்ந்தது. இந்தத் தினத்தை தேசிய தினமாகப் பிரகடனப்படுத்தி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சவூதி அரேபியாவில் உத்தியோக பூர்வ கலண்டராக ஹிஜ்ரி கலண்டர் முறை பாவனையில் உள்ளது. இந்த நாட்காட்டி முறையானது, இறைதூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மக்காவை விட்டு மதீனா நகருக்கு புலம் பெயர்ந்த நாளை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒரு ஹிஜ்ரி வருடம் 12 சந்திர மாதங்களையும் 354 அல்லது 355 நாட்களையும் கொண்டது. ஹிஜ்ரி வருடத்தின் முதல் மாதம் முஹர்ரம். கடைசி மாதம் துல் ஹஜ் (12) ஆகும். ஏனைய நாடுகளில் பாவனையில் உள்ள கிறகேரியன் கலண்டர் முறையும் சில வேளைகளில் தேவையேற்படும் போது பாவிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு வருடத்தில் இரண்டு பொது விடுமுறைகள் உள்ளன. அதில் ஒன்று, நோன்புப் பெருநாள் விடுமுறை. இது ரமழான் மாதம் பிறை 25 தொடக்கம் ஷவ்வால் மாதம் 5ஆம்நாள்வரை. அடுத்தது, ஹஜ்ஜுப்பெருநாள் விடுமுறை. இது துல் ஹஜ் 5முதல் துல் ஹஜ் 15 வரை ஆகும். மற்றும் தேசிய தினமான செப்டெம்பர் 23ஆம் திகதியும் விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் அரச அலுவலகங்களுக்கு வார இறுதி விடுமுறை தினங்களாகும். தனியார் நிறுவனங்கள், வங்கிகளுக்கு வெள்ளிக் கிழமை மட்டுமே வார இறுதி விடுமுறை.

### சவூதி அரேபியாவின் நேரம்

கிறின்விச் நேரத்தைவிட மூன்று மணித்தியாலம் சவூதியின் நேரம் அதிகமாகும். இலங்கையின் நேரத்தை விட இரண்டரை மணித்தியாலம் குறைவாகும்.

அரச அலுவலகங்கள் காலை 7.30 முதல் பி.ப2.30 வரை. சனிக்கிழமை முதல் புதன்கிழமை வரை திறந்திருக்கும். வங்கிகள் சனிக்கிழமை முதல் புதன்கிழமை வரை காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையும் மற்றும் பி.ப 5.00 மணி முதல் பி.ப. 7.00 மணி வரையும் திறந்திருக்கும். வியாழக்கிழைமைகளில்

(22ஆம் பக்கம் பார்க்க)






# சவூதி அரேபிய தேசிய தினம்

## 23.09.2007

# சவூதி அரேபியாவின்....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியாழக்கிழமைகளில் காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரையும் திறந்திருக்கும்.

சவூதி அரேபியாவின் தொழுகை நேரங்களில் போது அனைத்து வியாபார நடவடிக்கைகளும் நிறுத்தப்படும். ரமழான் மாத காலப்பகுதியில் வேலை நேரங்கள் குறைக்கப்படும். அதாவது காலை 10.00மணி முதல் பி.ப. 2.00 மணி வரைக்கும் மற்றும் பி.ப. 9.30 தொடக்கம் பி.ப.11.30 வரைக்கும் என்றவகையில் சுருக்கப்பட்டிருக்கும்.

சவூதி அரேபியாவில் புழக்கத்திலுள்ள நாணயம் றியால் ஆகும். ஒரு றியால் 100 ஹலாக்களைக் கொண்டது. இதனை வேறு நாட்டு நாணயங்களாகவும் மாற்றிப் பெற முடியும். ஒரு அமெரிக்க டொலருக்கு 3.75 றியால் என்ற அடிப்படையில் மிக நீண்ட காலமாக நாணய மாற்று வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அங்கு வெளிநாட்டவர்கள் உழைக்கின்ற பணத்தை தங்களது சொந்த நாடுகளுக்கு வங்கி மூலமும் மற்றும் பண முகவர்கள் மூலமும் அனுப்புவதற்காக ஒழுங்குகள் உள்ளன.

தாள்களாக 1,5,10,20, 100,200, 500 உம் நாணயங்களாக 1றியால், 50 ஹலாலா, 25 ஹலாலா, 10 ஹலாலா, 5 ஹலாலா ஆகியன புழக்கத்தில் உள்ளன.

### முக்கிய நகரங்கள்

சவூதி அரேபியாவின் தலைநகரம் ரியாத் ஆகும். மக்கா, மதீனா ஆகியவை புனித பிரதேசங்கள் ஆகும். தாயிப் (கோடைக்காலத் தலைநகரமும், மலைப்பாங்கான பகுதியும்), அல்- கொபர் (வர்த்தக மையம்), ஜித்தா, தமாம், ஜுபைல், யம்ப்யூ (துறைமுக நகரங்கள்) முக்கிய நகரங்கள் ஆகும்.

### மொழியும் மதமும்


சவூதி மக்கள் பேசும் மொழியாகவும் அரச கரும மொழியாகவும் அரபு மொழி காணப்படுகின்றது. இந்த நாட்டின் மதம் இஸ்லாம் ஆகும். இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் அரபு மொழி பேசும் மக்களே இந்த நாட்டின் குடிமக்கள்.


பத்திரிகைகளும் நான்கு வானொலி அலைவரிசைகளும், நான்கு தொலைக்காட்சி அலைவரிசைகளும் சவூதியில் சேவையில் உள்ளன. அரபு, ஆங்கில மொழிகளிலான பல நாளிதழ்கள் இங்கு வெளியிடப்படுகின்றன. மற்றும் மாதாந்த, வாராந்த, வருடாந்த பருவ வெளியீடுகளும் வெளியிடப்படுகின்றன. இவற்றின் மூலம் கலை, கலாசார பொருளாதார மற்றும் விளையாட்டுச் செய்திகள் தகவல்கள் என்பவற்றைத் தெரிந்து கொள்ளலாம். இஸ்லாமிய மதம் தொடர்பான விடங்களை ஒளி, ஒலி பரப்புச் செய்ய தனியாக தொலைக்காட்சி, வானொலி சேவைகளும் உள்ளன.

### நிர்வாக மாகாணங்கள்

சவூதி அரேபியா பல வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்த வலயங்கள் அல்லது மாகாணங்கள் ஒவ்வொன்றும் ஆளுநர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. ஆளுநர்களை அமீர் என அழைப்பர். வலயத்தை அல்லது மாகாணத்தை நிர்வகிக்கும் நிர்வாகியான ஆளுநர் அல்லது அமீர் பிரதான நிர்வாகியாகவும் பொறுப்புதாரியாகவும் இருப்பார். அதன் அனைத்து அலுவல்களையும் மேற்பார்வை செய்பவராக அவர் இருப்பார்.

இங்கு 13 நிர்வாக மாகாணங்கள் காணப்படு கின்றன.



லம்'


ம் மாத
ளர் புது
மேல்
ல் மாத
த்து
லார்
தில்
யோலை
லாய்



மீனாட்சி

# ஜீவனின் நம்பிக்கை

மாளவிகா தனது படத்தில் இருந்தால் படம் நிச்சயமாக வெற்றிபெறும் என நடிகர் ஜீவன் நம்புகிறாராம். இதனால் தனது 'மச்சக்காரன்' படத்தின் அறிமுகப் பாடலில் மாளவிகாவின் ஆட்டம் இடம்பெற்றே ஆகவேண்டும் என்று கூறி; அதன்படி மாளவிகாவையும் ஆட வைத்துள்ளாராம். சின்னச் சின்ன வேடங்களில் நடித்துவந்த மாளவிகாவுக்கு அந்த வாய்ப்புகளும் இல்லாமல்போக ஹிந்திக்கு போனார். அப்போதுதான் அவருக்கு தமிழில் வாய்ப்புகள் தேடிவர ஆரம்பித்தன. அதற்குக் காரணம் அவர் ஹிந்தியில் காட்டிய தித்திக்கும் கிளாமர். இதை வைத்து மீண்டும் தமிழுக்கு வந்த மாளவிகாவுக்கு, வாள மீன் பாட்டு பெரிய பாராட்டைக் கொடுத்தது. புதுப்பொலிவுடன் பல புதுப் படங்களில் நடிக்க ஆரம்பித்தார் மாளவிகா. 'திருட்டுப் பயலே' படத்தில் மாளவிகா போட்ட வேடம், அவருக்கு பெரும் வரவேற்பை வாரிக்கொடுத்தது. சமீபத்தில் திரைக்கு வந்து பெரும் வெற்றியைக் தேடிக்கொடுத்த 'நான் அவனில்லை' படமும் மாளவிகாவுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. இந்த இரண்டு படங்களிலும் நாயகன் ஜீவன். இந்த வெற்றியை வைத்து ஜீவனின் நினைப்பெல்லாம், தனது படத்தில் கண்டிப்பாக மாளவிகா இடம்பெறவேண்டும், அவர் இருந்தால் படம் பெரும் வெற்றியை தனக்குத் தேடித்தரும் என்பது அவரது எண்ணம். இதையடுத்து, தான் நடித்துவரும் 'மச்சக்காரன்' படத்தில் ஒரு பாட்டுக்கு ஆடியே ஆக வேண்டும் என்று ஜீவன் கேட்டதற்கு அவரும் சம்மதித்துள்ளாராம். ஏற்கனவே மச்சக்காரனில் நாயகியாக நடித்து வரும் காம்னா கவர்ச்சியில் கரைபுரண்டோடியுள்ளாராம். இந்த நிலையில் மாளவிகா என்ற கூடுதல் கவர்ச்சியைத் திறந்து விட்டிருப்பதால், ரசிகர்களின் இதய அணை உடையப் போவது நிச்சயம்.



அசின்

# பாடகியானார் மம்தா

'சிவப்பதிகாரம்' நாயகி மம்தா தெலுங்கில் நடிப்பதற்காகச் சென்றார். மம்தாவின் குரல் அங்குள்ள இசையமைப்பாளர்களை மயக்கிவிட்டது. போட்டி போட்டுக்கொண்டு பட வாய்ப்புக்களைக் கொடுத்தனர். மேக்கப் போடத் தேவையில்லை, வெளியில் காயவும் தேவையில்லை, முக்கியமாக கதாநாயகனை கட்டிப் பிடிக்கவும் தேவையில்லை. பாடினால் மட்டும் போதும் என்று கை நிறைய காசு கொடுக்கிறார்கள். நடிப்பை விட்டுவிட்டு முழுநேர பாடகியாகி விடுங்கள் என இசையமைப்பாளர்கள் அழைப்பு விடுத்தவண்ணமே உள்ளனர். தெலுங்கை கலக்கிக் கொண்டிருக்கும் மம்தாவின் குரல் தமிழிலும் பதிவாகியுள்ளது. வித்தியாசமான விடைங்களை தமிழில் அறிமுகப்படுத்துவதில் குட்டிக் கமலான சிம்பு மம்தாவின் குரலை கேட்டிருக்கிறார். உடனே அவரை தனது 'காளை' படத்தில் பாடவும் வைத்துள்ளார். இப்படத்தில் 'காள..:.. காள,....' என்றொரு பாடலை சிம்பு எழுதியுள்ளார். கடந்தவாரம் அந்தப் பாடலை ஜீ.வி.பிரகாஷ் இசையில் மம்தா பாடினார். பாடலை உடனிருந்து ரசித்தார் சிம்பு. மம்தாவின் குரல் தமிழர்களுக்கு பிடித்தால், மேலுமொரு பாடகி தமிழ் சினிமாவுக்கு கிடைப்பார்!



நோபாளி
பரத் - மீரா ஜஸ்மின்


# பரத் விளக்கம்

'பழனி', 'நோபாளி', 'கில்லாடி' போன்ற படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார் பரத். அக்ஷன் படங்களில் மட்டுமே நடிப்பீர்களா? என்ற கேள்விக்கு இவ்வாறு பதிலளித்தார் பரத்:- ''பழனி படப்பிடிப்பு வேகமாக நடந்துவருகிறது. வரும் டிசெம்பர் மாதமளவில் படம் திரைக்கு வரும். அதற்கு முன்பாக 'நோபாளி' திரைக்கு வந்துவிடும். 'கில்லாடி' படம் தற்பொழுதும் பணச்சிக்கலில் இருந்து வருகிறது. தயாரிப்பாளர் எப்போது சொல்கிறாரோ அப்போதுதான் படப்பிடிப்பு ஆரம்பமாகும். எனது தரப்பில் எந்த பிரச்சினையும் இல்லை. இதையடுத்து திருமுருகன் இயக்கும் படத்தில் நடிக்கிறேன். இப்படத்தில் வடிவேலுவும் நடிக்கிறார். படத்தின் பெயர், நாயகி இன்னும் முடிவாகவில்லை. இதில் அக்ஷனுக்கும், கொமடிக்குமே முக்கியத்துவம் அதிகமாக இருக்கும். அதேநேரம் அழகான குடும்பப் பின்னணியும் இணைந்திருக்கிறது. தொடர்ந்து நான் அக்ஷன் படங்களில் நடிப்பதாக கூறுவது உண்மையல்ல. ஆரம்பத்தில் காதல் கதை கொண்ட படங்களில் மட்டுமே நடித்தேன். ரசிகர்கள் ஏற்றுக்கொண்ட பின்பே அக்ஷனிலும் கவனம் செலுத்தினேன். மனதை உருக்கும் காட்சிகள் நிறைந்த படங்களில் நடிக்கவே அதிக ஆர்வம் காட்டுகிறேன். அதில் அக்ஷனும் முக்கிய பங்கு வகிப்பதாக அமைந்துவிடுகிறது'' - என்றார் பரத்.



# கலக்கல்

கவிஞான சம்பந்தர்



கனடாவில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் பிறந்து ஒரு மாதமே ஆன யானைக்குட்டி ஒன்றினை பார்வையாளர்களின் காட்சிக்காக ஊழியர்கள் அழைத்து வரும் காட்சி.

## குட்டிப் பிள்ளையார் இந்த குழந்தை பிள்ளையார்?




டில்லியில் நடந்த ஆடை அறிமுக விழாவில் கோடை கால ஆடைகளை அணிந்து மொடலிங் பெண்ணொருவர் வலம் வருகிறார்.



லண்டனில் நடந்த நாட்டிங் ஹில் கார்னிவெல்ஸ் குழந்தைகள் நாள் விழா ஒன்றில் வித்தியாசமான அலங்காரத்தில் கலந்து கொண்ட ஒருவர்.

## தத்துவம்

உயிர் : அது உன்னிடம் வந்தால் சிவம்
உன்னைவிட்டு போனால் நீ சவம்.

டை : மண்டையைப் போட்டாலும் 'டை'
மண்டையில் போட்டாலும் 'டை'

பிஸ்கட் :கிறீம் பிஸ்கட்டில் கிறீம் இருக்கும்.
நாய் பிஸ்கட்டில் நாய் இருக்காது.

சிம்:நீ டயலொக் சிம் பாவித்தாலும், செல்சிம் பாவித்தாலும்
தும்மும் போது ' ஹச்..' என்றுதான் தும்மவேணும்

மதுபானம்:உள்ளே போகும் அது விஸ்கி,
வெளியே வந்தால் அது வாந்தி.

## "யார் இவர் தெரிகிறதா?" 10



### இந்த வாரம் பிரசுரமாகி இருக்கும் உருவம் யாருடையது?

இவர் பெயரில் ஒரு நாட்டின் மொழியும் ஒரு மகானின் பெயரும் ஒளிந்திருக்கின்றன. இவர் யாரெனக் கண்டு பிடித்து இவர் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் ஐவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
சுடர் ஒளி
''யார் இவர் தெரியுமா?''
85/ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14.


★ ''யார் இவர் தெரிகிறதா?'' இல.7 இற்கான சரியான விடை: இந்திய தமிழ் சினிமாவின் அல்டிமேட் ஸ்ரார் அஜித்குமார். சரியான விடைகளை அனுப்பியோர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:
1. ஜி.சசிகலா, கொழும்பு-08. 2. சு.திலீபன், வவுனியா. 3. சௌந்தராஜ் ஜீவரூபன், மட்டக்குளிய.
4. இ.மணிவண்ணன், வவுனியா.5. எஸ்.மோகனதாஸ், முறிகண்டி.




## பாம்பு பாதி மனிதன் பாதி கலந்து செய்த கலவை நான்




அண்மையில் ஆபிரிக்காவில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றிலே கொடிய விஷப் பாம்புகளை தன் வாயில் நுழைத்து மூக்கின் வழியே எடுத்து அனைவரையும் கவர்ந்த ஒருவர்.



## குறும்பு



## ஏரோப்பிளேன் பறக்குது பார் கீழே!



இந்தியாவின் பஞ்சாபியில் உள்ள அமிர்தசரஸ் விமான நிலையத்தில் துர்க்மெனிஸ்தான் நாட்டு விமானம் தரையிறங்கியபோது அங்குள்ள ஏரோ பாலத்தின் மீது மோதியதில் வலது இறக்கை சேதமடைந்தது. பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

## முடிவு

ஒரு கணவனும் மனைவியும் எப்போதும் தங்களுக்குள் கடுமையாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். கணவனுடைய நண்பரான ஆசிரியர் ஒருவர் அடுத்த வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார். அந்த ஆசிரியர் ஒரு நாள் நண்பனிடம் சொன்னார்.

''எங்களைப் பாருங்கள். நானும் என் மனைவியும் எதற்கும் சண்டை போட்டுக் கொள்வது இல்லை. ஏனெனில் முதலிலிருந்தே எங்கள் பொறுப்புக்களை பகிர்ந்து கொண்டு விட்டோம். நான் முக்கியமான முடிவுகளை எடுக்கிறேன். ஏனைய விவரங்களை என் மனைவி பார்த்துக் கொள்வாள்.''

''எது முக்கியம்? எது விவரம்? என்பதை எப்படித்தீர்மானிக்கிறீர்கள்?'' என்று அவன் கேட்டான்.

''ரொம்ப சுலபம். குழந்தைகள் எந்தப் பள்ளியில் படிக்க வேண்டும்? யாருக்காவது உடல் நலமில்லை என்றால் எந்த டாக்டரை அழைக்க வேண்டும், கோடை விடுமுறைக்கு எங்கே போக வேண்டும், எந்தவிதமான கார் வாங்க வேண்டும் போன்ற விடயங்களை எனது மனைவியிடமே விட்டு விட்டேன்''

''சரி. நீங்கள் முடிவெடுக்கும் முக்கியமான விஷயம் எது?''

''பஞ்சாப் பிரச்சினை, ஸ்ரீலங்கா பிரச்சினை, ஆப்கானிஸ்தான், மத்தியகிழக்கு பிரச்சினை, விண்வெளிப்போர் திட்டம் போன்றவை குறித்து நான் முடிவெடுக்கிறேன்''



## கரணம் தப்பினால் மரணம்



பெலாரஸ் நாட்டின் மின்ஸ்க் நகரில் ரஷ்ய ஸ்டன்ட் கலைஞரின் சாகசம் நடந்தது. வேகமாக பைக்கை இயக்கி வரிசையாக நிற்க வைக்கப்பட்டுள்ள 11 கார்களை ஒரே மூச்சில் தாண்டுகிறார் இந்த சாகச வீரர்.

05. பின்வரும் வினாக்களுக்கு மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்க.

1) மூன்று + நூறு என்பதைச் சேர்த்து எழுதினால் வருவது
   1. மூன்றுநூறு. 2. முந்நூறு. 3. முன்நூறு.


2) வெண்கட்டி என்பதைப் பிரித்து எழுதினால் வருவது
   1. வெள்ளை + கட்டி. 2. வெண்மை + கட்டி.
   3. வெண் + கட்டி.


3) நாய் குரைப்பது போல சிங்கம்
   1. அலறும். 2. கதறும். 3. கர்ச்சிக்கும்.

4) பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க. 'உப்பிட்டவரை ..................................
   1. முகத்தில் தெரியும். 2. உள்ளளவும் நினை.
   3. சுடுகாடு வரை.


5) கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.
   பாடசாலையை நிர்வகிப்பவர் ............................. ஆவார்.
   1. நிர்வாகி. 2. அதிபர். 3. ஆசிரியர்.


06. கீழே தரப்பட்டுள்ள கருவிகளின் பயன்பாட்டை புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. 

2. 


..................................... .....................................

3. 

4. 


..................................... .....................................

07. பின்வரும் வினாக்களுக்கு மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்க.

1) 
   தரப்பட்டுள்ள உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை எத்தனை?
   1. 9 2. 15 3. 11

2) எனது வயது மூன்று வருடங்கள். எனது தந்தையின் வயது எனது வயதின் ஒன்பது மடங்காகும் எனில், எனது தந்தையின் வயது
   1. 12 2. 27 3. 20

3) பின்வரும் பொருட்களின் நிறை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கு

A 




B





C

   1. A, B, C 2. B, C, A 3. B, A, C

4) திசைகாட்டியின் அம்புக்குறி வழமையாகக் காட்டிக்கொண்டிருக்கும் திசையைக் குறிப்பது
   1. 2. 3.


5) தரப்பட்டுள்ள உருக்களில் கோணம், அற்ற உரு

1. 
2. 
3. 

6) தளவாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தோன்றும் எழுத்துக்களும் எண்ணும்
   1. A , ப , 8 2. B , ம , 2 3. I , ட, 5


7) பின்வரும் எண்தொடரில் அடுத்து வரவேண்டிய இரு எண்களைத் தெரிவுசெய்க
   2, 5, 9, 14, ....., ......, ........
   1. 18 , 20 2. 20 , 27 3. 19 , 24


8) எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.




   1. 13 2. 40 3. 37

08. அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

1) 


2) 


09. பின்வரும் உருக்களின் பெயர்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுக.

1) 

தமிழ் ..........................
ஆங்கிலம் ..........................

2) 

தமிழ் ..........................
ஆங்கிலம் ..........................



தமிழ் ..........................
ஆங்கிலம் ..........................




தமிழ் ..........................
ஆங்கிலம் ..........................

10. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
   1) கரும்பலகை - ........................................
   2) சாரதி - ........................................

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
   1) World - ........................................
   2) Student - ........................................

13. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
   1) ஸ்துதி - ........................................
   2) பொன்ன - ........................................

14. மாணவன் ஒருவன் தன் வீட்டில் இருந்து BCDEFG வழியாக நகரத்தில் உள்ள பாடசாலை H ஐ அடைந்தான். பின்வரும் தரவுகளைப் பயன் படுத்தி வினாக்களுக்கு விடையளிக்க.




   1) மாணவன் வீட்டில் இருந்து புறப்பட்ட வீதியின் திசை ............. ஆகும்.
   2) வீட்டில் இருந்து பாடசாலை வரையான வீதித் தூரம் ............m ஆகும்.
   3) வீட்டிற்கும் நகரத்திற்கும்இடையிலான தூரம் .............. m ஆகும்.
   4) மாணவன் பயணித்த மொத்தத் தூரம் .............. m ஆகும்.
   5) பாடசாலையில் இருந்து புள்ளி (E) வரையான தூரம் .............. m ஆகும்.

15. "நீர் அங்கிகளின் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும்." நீரின் பயன்கள் ஐந்தை வசனப்பிழை இன்றி எழுதுக.
   1) ..............................................................................
   2) ..............................................................................
   3) ..............................................................................
   4) ..............................................................................
   5) ..............................................................................

முற்றும்



தரம்04 மாணவர்களை எதிர்வரும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்

**படிமுறைப் பரீட்சை -03 , 2008**

ஆக்கம்:- து.திலீப்குமார்
(ஆசிரியர், கொழும்பு விவேகானந்தா கல்லூரி)





# ரகசிய சிநேகிதங்கள்

டாக்டரைப் பார்த்துவிட்டு சுமித்ரா வெளியே வந்தாள். இரவுமணி 8.30. மழை ஆக்ரோஷமாய் பெய்துகொண்டிருந்தது. ஆட்டோவுக்காக 10 நிமிடங்களாகக் காத்திருந்தும் பலனில்லை. எல்லாமே 'சவாரி'யுடன் விரைந்துபோய்க் கொண்டிருந்தன. அப்போது அவளருகில் ஒரு கார் கிறீச்சிட்டு நின்றது. கார்க் கண்ணாடியை இறக்கியதும் அதில் இருப்பவன் தன்னுடைய அலுவலகத்தில் பணிபுரியும் ராம்நாத் என்பதை அறிந்தாள் சுமித்ரா.

''வா சுமித்ரா, வீட்டுல உன்னை டிராப் பண்ணிடறேனே...'' என்றான் ராம்நாத்.

சிலநொடிகள் தயங்கிய சுமித்ரா வேறு வழியில்லாமல் காரில் ஏறிக்கொண்டாள்.

இப்படித்தான் அவர்களுக்குள் நட்புத் தொடங்கியது. ஆனால், போகப்போக இந்த நட்பு வேறு பாதையில் போக ஆரம்பித்துவிட்டது. இப்போது இருவருமே கிட்டத்தட்ட கணவன், மனைவியாய் சந்தோஷம் அனுபவிக்கிறார்கள்.

ஒவ்வொரு ஊரிலும் தெருவிலும் இப்படிப்பட்ட ஏதோ ஓர் ஜோடி இருக்கத்தான் செய்கிறது. அதற்குக் காரணம் இன்றைய சூழல்.

தற்போது, அலுவலகங்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பணியாற்றுவது அதிகரித்து வருகிறது. செல்போன் மற்றும் இணையம் மூலமாகவும் தொடர்புகள் அதிகரித்துள்ளன.

இந்தத் தொடர்புகளுக்கு வயது ஒருதடையாக இருப்பதே இல்லை. வயதில் மூத்த பெண்களுடன் இளம் வயது ஆண்கள் தொடர்புகொள்ளும் வழக்கம் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துவருகிறது.

பொதுவாக மனிதர்களுக்கே உள்ள 'சந்தர்ப்பவாதம்' என்ற குணம்தான் இப்படிப்பட்ட உறவுகள் அதிகரிக்கக் காரணம். இத்தகைய சந்தர்ப்பங்களை அதிகம் பயன்படுத்திக்கொள்வதில் ஆண்கள்தான் முன்னணியில் இருப்பதாக உளவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

வயதில் மூத்த பெண்கள், இளம்வயது ஆண்கள் மீது நம்பிக்கை வைத்து சகஜமாகப் பழகுகிறார்கள்.

இளம் வயது ஆண்களுக்கு தங்களை விட வயதில் மூத்த பெண்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வது எளிதாக இருக்கிறது. இதற்காக அவர்கள் அதிகம் சிரமப்படவோ அல்லது அதிக பணம் செலவழிக்கவோ வேண்டியதில்லை.

மாறாகப் பல சந்தர்ப்பங்களில் பெண்களே, தங்களை விட வயதில் குறைந்த ஆண்களிடம் மனதைப் பறிகொடுத்து, அவர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வதற்காக பணத்தைச் செலவழிக்கின்றனர்.

இத்தகைய பெண்கள் ஓரளவு பொருளாதாரத் தன்னிறைவுடன் திகழ்வதால், அதுவே அவர்களுக்கு அசாத்தியத் துணிச்சலைத் தருகிறது. ஆண்களிடம் பேசுவது, ஆலோசனை கொடுப்பது... அவ்வளவு ஏன்? தேவைப்பட்டால் அதட்டி வழிக்குக் கொண்டுவருவது எனப் பெண்கள் எதற்குமே தயங்குவதில்லை.

அதிகரித்துவரும் 'முறையற்ற உறவு'களுக்கு இதுவும் ஒரு காரணம்.

பிரபல மனோதத்துவ நிபுணர் ஒருவர் கூறுகையில், 'பொதுவாக இளைஞர்கள் தங்கள் அம்மாவை அதிகம் நேசிப்பார்கள். நடுவயது பெண்களிடமும் அதுபோன்ற சகஜமான அனுபவத்தை அவர்கள் உணர்கிறார்கள். ஆனால், பெண்களோ ஆரம்பத்தில் உணர்வுபூர்வமாக, நெருக்கமாக இருப்பதுபோல் காட்டிக்கொண்டு, பின்னர் தங்களின் நிறைவேறாத உடல் இச்சைகளுக்கு இளம் வயதினரைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இதுபோன்ற தொடர்புகள் பெரும்பாலும் சமூகத்தின் பார்வைக்கு வராமல், ரகசிய சினேகிதங்களாகவே இருக்கின்றன. ஒருவிதத்தில் அதுதான் இவர்களுக்கு பாதுகாப்பாகவும், இந்த முறையற்ற உறவைத் தொடர்வதற்கு தூண்டுதலாகவும் உள்ளது.

ராஜேஷ், பரீட்சையில் பெயிலாகிவிட்டான். அவனுடைய அப்பாவோ தன்னுடைய தச்சுத்தொழிலை கற்றுக்கொள்ளும்படி சொன்னார். ஆனால், ராஜேஷுக்கு அதில் விருப்பமில்லை. வேறுவேலை தேட ஆரம்பித்தான். ஆனால், அவன் எதிர்பார்த்ததுபோல் எதுவும் அமையவில்லை. மனம் வெறுத்து தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத் தான்.

அந்தச் சமயத்தில்தான் ஒரு பிரபல துணிக்கடை உரிமையாளரின் மனைவியை அவன் சந்திக்க நேரிட்டது. நடுத்தர வயதுப்பெண்மணியான அவருக்கு, வேலை தேடிக்கொண்டிருந்த ராஜேஷ் மீது எப்படியோ ஓர் ஈர்ப்பு வந்துவிட்டது. பணம் தந்து, கார் டிரைவிங் கற்றுக்கொள்ள ஏற்பாடுசெய்தார். அதன் பிறகு அவனையே

பெண்

பகுதிநேரக் கார் டிரைவராக நியமித்துக் கொண்டார். கொஞ்சநாளிலேயே இருவருக் கும் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டுவிட் டது. அப்பெண்ணின் வழிகாட்டுதல் மற்றும் பொருளாதார உதவி காரணமாக சொந்தமாக வியாபாரம் செய்யுமளவுக்கு

(27ஆம் பக்கம் பார்க்க)





# கர்ப்பகாலத்தில் பயணத்தைத் தவிர்க்கலாமே!

பெண்கள் கருவுற்ற உடனே மருத்துவர்களும் சரி, வீட்டுப் பெரியவர்களும் சரி கூறும் முதல் அறிவுரை 'வெளியில் எங்கும் பயணம் போகாதேம்மா...' என்பதுதான்.

கர்ப்பிணிகளுக்கு முதல் எதிரி வெளியூர் பயணங்கள். பேருந்தைவிட, ரயில் அல்லது வானில் பயணம் செய்வது பரவாயில்லை என்று நினைத்து சிலர் ரயிலில் செல்வதுண்டு. அதுவும்கூட தவறுதான்.

காரணம், பயணம் என்று வந்தாலே பல்வேறு விஷயங்களுக்கும் உங்கள் மனம் கவலைப்பட ஆரம்பித்து விடும். மன அழுத்தம் கூடும். அதுவே கர்ப்ப சிசுவுக்கு பாதகமாக முடியும்.


சுதாவுக்கு அது தான் முதல் கர்ப்பம். குடும் பமே மகிழ்ச்சியில் குதூகலித்தது. இந்த நேரம் பார்த்துத் தான் கணவன் ரமேஷுக்கு சிங்கப்பூர் செல்லும் வாய்ப்பு வந்தது. அதுவும் விமானத்தில் குடும்பத்தோடு சென்று வரும் வாய்ப்பு. மனைவியை விட்டுவிட்டு, தான் மட்டும் சென்றுவர ரமேஷுக்கு விருப்பம் இல்லை. 'விமானத்தில்தானே பயணம் செல்கிறோம். வயிற்றிலுள்ள குழந்தைக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. அலுங்காமல் குலுங்காமல் பூ மாதிரி உன்னைக் கூட்டிப் போய் வந்துவிடுகிறேன்' என் மனைவியிடம் உறுதியாகச் சொன்னான் ரமேஷ். குடும்பத்தினரும் கூட அவன் சொன்னதை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களின் நினைப்பெல்லாம் விமானம் ஆகாயத்தில்தானே பறக்கப்போகிறது. உடல் குலுங்குவதற்கு வாய்ப்பில்லை என்ற தைரியம்தான். ஆனால், நடந்தது வேறு. சுதாவுக்கு அதுதான் முதல் விமானப்பயணம். உள்ளுக்குள் விமானப் பயணத்தின் இனிய அனுபவத்தை ருசிக்கும் ஆவல் அவளுக் கும் இருந்தது. ஆனால், விமானத்தை நெருங்க நெருங்க வயிற்றுக்குள் ஒரு ஜில் லென்ற அனுபவம் பரவிப் படர்ந்து தொண்டைவரை வந்தது. விமானத்துக்குள் நுழையும்போது வாந்தி வருவதைப்போன்ற உணர்வு அவளுக்கு.

ஓடுதளத்தை விட்டு விமானம் விண்ணைண் நோக்கி சீறியபோது உண்மையிலேயே சுதா அவள் வசம் இல்லை. திகிலும் பயமும் ஒருங்கே அவளைத் தாக்க மூர்ச்சையாகி விட்டாள். பணிப்பெண் வந்து தண்ணீர் கொடுத்து, அவளைத் தெளிய வைத்தாள். சிங்கப்பூரில் இறங்கி ஹோட்டலில் தங்கிய ஆறாவது மணிநேரத்தில் சுதா அந்த ஆபத் தைச் சந்தித்தாள். ஆம் ! அவளுக்கு முதல் கர்ப்பம் தங்கவில்லை.

(27ஆம் பக்கம் பார்க்க)

## சமைப்போம் சுவைப்போம்

# வெஜ் பனீர் பொரியல்



**தேவையான பொருட்கள்**

பனீர் சதுர துண்டுகள் - 100 கிராம்
துண்டுகளாக்கிய உருளைக்கிழங்கு - 2,
காய்கறி கலவை (கரட், பீன்ஸ், காலிபிளவர்) - 100கிராம்
உப்பு - சுவைக்கேற்ப
சீரகம் - சிறிதளவு
காய்ந்த மிளகாய் - 2
கருவேப்பிலை - சிறிதளவு
வெந்தயம் - சிறிதளவு
கருஞ்சீரகம் - அரை தே.க
தக்காளியின் சதைப்பகுதி - 2 கரண்டி
க்ரிம் - 4கரண்டி
கொத்தமல்லி, முந்திரி, திராட்சை - சிறித்தளவு
பூண்டு பேஸ்ட் - அரை தே.க

**செய்முறை:**

எண்ணெயைச் சூடாக்கி, அதில் சீரகம், காய்ந்த மிளகாய், வெந்தயம், கருஞ்சீரகம், கறிவேப்பிலை போட்டு கிளறவும். அதோடு தக்காளி, உப்பு, உருளைக்கிழங்கு, காய்கறிக்கலவைகள் மற்றும் பனீர் துண்டுகள் பேர்ட்டுக் கிளறவும். 2 நிமிடத்தில் காய்கறி தயாராகி விடும். பிறகு க்ரீம் மற்றும் கொத்தமல்லி போட்டுக் கலக்கவும். விரும்பினால் முந்திரி, திராட்சைத் துண்டுகளைப் போடவும். சப்பாத்தி மற்றும் பூரிக்கு தொட்டுக்கொள்ள தோதாக இருக்கும்.




யூ.எல்.எம்.மபாஸ்,
பொத்துவில்.

**கேள்வி:** பித்தா! எனக்கு என் காதலியின் முகத்தைத் தவிர வேறு எந்த முகங்களும் ஞாபகத்தில் நிற்க மாட்டேன் என்கிறது. என்ன செய்யலாம்?



**பதில்:** ஓ! அப்படியா? உடனடியாக அவளைக் கல்யாணம் செய்துகொள்ளும். அதற்குப் பிறகு உமது அவளின் முகத்தைத் தவிர மற்றைய எல்லா முகங்களும் நன்றாகத் தெரியும்.

க.தனஞ்சயன்,
மட்டக்குளி.

**கேள்வி:** பெண்களுக்கு அழகு தருபவை எவை பித்தா?

**பதில்:** மென்மை, உண்மை, பெண்மை. சிலருக்கு மட்டும் 'கண்' மை.

கார்த்திகேசு தயாளினி,
வவுனியா.

**கேள்வி:** இன்றைய பொருளாதார சிக்கல்கள், சவால்களின் மத்தியில் திருமண வாழ்க்கையின் சந்தோஷத்துக்கு பணமா, பாசமா காரணமாகும்?

**பதில்:** பாசம் என்பது வேஷம் போட்டு செய்யும் மோசமம்மா மோசம். 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்' என்பதை தாங்கள் அறியவில்லையோ!

எஸ்.சந்திரன்,
புதுக்குடியிருப்பு.

**கேள்வி:** பித்து அவர்களே! சிங்கள அரசு எம் நாட்டை ஆக்கிரமிப்பது மட்டுமல்லாமல் எங்களையும் அடிமைப் படுத்த முனைகிறதே. எங்களின் உணர்வுகள் அவர்களுக்குப் புரியப்போவதில்லையா?

**பதில்:** பொதுமக்கள் கருத்தை அறிவதற்காக ஒரு செக்கோஸ்லாவாக்கிய அதிகாரி கிராமத்துக்கு அனுப்பப்பட்டார். அவர் ஒரு விவசாயியைச் சந்தித்துக் கேட்டார்.

''நாட்டைப்பற்றி உன்னுடைய மூன்று ஆசைகள் என்னவென்று கேட்டால் அவை என்னவாக இருக்கும்?''

''முதல் ஆசை சீனமக்கள் குடியரசின் மக்கள் விடுதலைப்படை, செக்கோஸ்லாவாக்கியாவை ஆக்கிரமித்துக்கொள்ள வேண்டும்''

''இரண்டாவது ஆசை''

''இரண்டாவது ஆசை சீனமக்கள் குடியரசின் மக்கள் விடுதலைப்படை, மீண்டும் செக்கோஸ்லாவாக்கியாவை ஆக்கிரமித்துக் கொள்ளவேண்டும்''.

''சரி மூன்றாவது''

''சீனமக்கள் விடுதலைப்படை மூன்றாவது முறையும் செக்கோஸ்லாவாக்கியாவை ஆக்கிரமித்துக்கொள்ளவேண்டும்''

''இது என்ன கிறுக்குத்தனமாக இருக்கிறதே. உன்னுடைய நாட்டின் மீது மூன்று தடவை படை எடுத்து ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும் என்று ஏன் விரும்புகிறாய்?''

''சோவியத் யூனியன் வழியாகப் படையெடுத்து வந்து அதை கைப்பற்றிய பிறகுதானே நமது நாட்டைக் கைப்பற்ற முடியும்? அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருப்பது எவ்வளவு கொடுமை என்பதை அப்போது தான் சோவியத் யூனியன் அனுபவிக்கமுடியும்''

என்.சிரஞ்சீவி,
கொழும்பு-14.

**கேள்வி:** காதலில் வீழ்ந்துள்ள எனது நண்பனுக்கு எவ்வளவுதான் புத்திமதி சொன்னாலும் கேட்கவே மாட்டேன்கிறான். பட்டுத்திருந்துவது என்பது இதைத்தானா பித்தா?



**பதில்:** முதலையின் மேலுள்ள தோல் எவ்விதமான ஆயுதத்தாலும்வெட்டுப்படாதபடி எவ்வளவு கடினமாக இருக்கிறது. அதுபோல், சம்சாரத்தில் ஆழ்ந்துள்ள மனிதனுக்கு எவ்வளவு தத்துவ உபதேசம் செய்தாலும் அது அவன் மனதில் புகாது என்று ஸ்ரீராமகிருஷ்ணரே சொல்லியிருக்கிறார்.

ஹாஜா,
அம்பாந்தோட்டை.

**கேள்வி:** பித்தா என்னை அடிக்கடி ஒருவர் முறைத்து முறைத்துப் பார்க்கிறார். என்ன செய்வது?

**பதில்:** அவர்தான் உங்கள் 'முறை' மாப்பிள்ளையாக்கும் முறைக்கட்டும்.



சாந்தினி யோகநாதன்,
கைதடி.

**கேள்வி:** பித்தா! மழை வருகின்ற சமயங்களிலெல்லாம் என் கணவர் அருகிலுள்ள பள்ளிக்கூடப் பக்கம் சென்று ஒதுங்கிக்கொள்கிறாரே காரணம் என்ன என்று கேட்டால் சொல்ல மறுக்கிறார். நீங்களாவது சொல்லுங்களேன் ?

**பதில்:** மழைக்குக் கூட பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கினது கிடையாதா என்று நீங்கள் திட்டக்கூடாது பாருங்கோ அதற்காகத்தான்.

எம்.ஜீவா,
கொழும்புத்துறை.

**கேள்வி:** டியர் பித்து மாமா, ஐம்பது வருடங்களின் பின் இலங்கையின் நிலவரம் எப்படி இருக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**பதில்:** இன்னும் ஐம்பது வருடங்களுள் அமெரிக்கர்களும், பிரிட்டிஷ்காரர்களும், ஏனைய நாட்டவர்களும் இலங்கையை இனங்கண்டுகொள்ள மீண்டும் கடல் பயணங்களை மேற்கொள்ளக்கூடும். அவர்களில் மீண்டும் உங்கள் மூதாதையர்களும் இருக்கக்கூடும். அவர்களின் குறிப்புகளில் இலங்கையில் தமிழினம் என்றோர் இனம் வாழ்ந்ததாக 'சிலவேளை'களில் குறிப்பிடப்படவும் கூடும்.

எஸ்.எம்.சஜீர்,
கொழும்பு.

**கேள்வி:** காதல் எப்போது வரும் பித்தா?

**பதில்:** இருளிலும் பூக்கள் மலர்கின்றன; மேகத்தால் சூழப்பட்ட பின்னும் சந்திரன் வானில் ஒளிர்கின்றான்; ஆளரவமற்ற காட்டிலும் குயில் கூவுகிறது. கடலின் அடியில் முத்துகள் ஒளிதருகின்றன. குருடியின் உள்ளத்திலும் கூடக் காதல் தோன்றுகிறது. அதனால், காதல் எங்கிருந்து, எப்போது தோன்றும் என்று கூறமுடியாது.



**பித்தன் மீது பித்தாய் உள்ள பித்தர்களே! பித்தனிடம் எத்தனை பித்தான கேள்விகளையும் நீங்கள் தொடுக்கலாம். அவை தரம் அறிந்து பித்தன் பதிலளிப்பான். அனுப்ப வேண்டிய முகவரி:**

**'பித்தன் பதில்கள்'**
**சுடர் ஒளி (வாரஇதழ்)**
**இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு- 14.**




**நிமிடக்கதை**

ஓடிவந்து அம்மாவின் கால்களை கட்டிக்கொண்டாள் நீரஜா.

''அம்மா...அடுத்த வீட்டுத் தாத்தா செத்துப்போய் விட்டாராம். அந்த வீட்டில் எல்லாரும் அழுறாங்க. ஏன் அம்மா, செத்துப் போறது என்றால் என்னம்மா?'' சின்னப்பெண் திக்கித் திணறிக்கேட்டாள்.

மரணம் என்றால் என்ன என்பதை அறியாத வயது. எப்படி இவளுக்கு புரியவைப்பது? அம்மா கொஞ்சம் குழம்பிப்போனாள். சட்டென ஒரு யோசனை வந்தது.

''நீரஜா, உனது பொம்மைக்கு சாவி கொடுத்தால் ஓடுது. ஆனால், கொஞ்சநேரம் ஓடினபிறகு நின்றுவிடும். அதே மாதிரித்தாம்மா செத்துப்போறதும்''.

ஏதோ ஓரளவுக்கு புரிந்த மாதிரி தலையை ஆட்டியது குழந்தை. அம்மா நிம்மதியானாள்.

மறுநாள் நீரஜா மீண்டும் அம்மாவிடம் கேட்டாள்.

''அம்மா நேற்று அந்தத் தாத்தா வீட்டில் எல்லோரும் அழுதாங்களே...! அதெல்லாம் சும்மா போல இருக்கு. அவங்க வீட்டு ரீ.வி. யில் இப்ப வடிவேலு காமெடி பார்த்துக்கிட்டு இருக்காங்க...'' குழந்தை கேலியாய் சிரித்தது.

'இருவேறு சூழ்நிலைகளைக் கண்டு குழந்தை குழம்பி இருக்கிறது. என்ன சொல்லி விளக்கினால் புரிந்துகொள்ளும்?' அம்மா யோசித்ததில் பளீரென மனதில் மின்னலடித்தது.

''நீரஜா நீ பள்ளிக்கூடத்துக்கு நடந்துபோய்க்கொண்டு இருக்கிறாய். திடீர் என்று உன் காலில் ஒரு முள்ளு குத்துது. அதனால, அதுக்காக நீ போகவேண்டிய பயணத்தை நிறுத்துடுவியா என்ன? அந்த மாதிரித்தான் வாழ்க்கையும். ஒரு மரணத்துக்காக நாம் எல்லாத்தையும் நிறுத்திவிட்டு, அதையே நினைச்சுக்கிட்டு இருக்கமுடியாது. புரிஞ்சுதா?''

சிறுமி விழிகளை விரித்து, இரட்டைப் பின்னல்கள் அசையத் தலையாட்டினாள்.

# ரகசிய சினேகிதங்கள்...

(26ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேறிவிட்டான் ராஜேஷ்.

இப்போது இருவரும் இணைபிரியாத ஜோடிகள். ஆனால், வெளியுலகுக்கு நண்பர்கள்.

ஏன் இப்படி?

தங்களை விட வயது குறைந்த இளைஞனுடன் செக்ஸ் தொடர்புவைத்திருக்கும் பெண்கள், அந்த இளைஞனை முழுமையாக ஆக்கிரமித்து விடுகிறார்கள். ''ஆஹா, என்னை எந்த அளவுக்கு நேசிக்கிறாள். இத்தனை பொறுமையாக என் பிரச்சினைகளைக் கேட்டு அதிலிருந்து நான் மீண்டுவர எத்தனை ஒத்துழைப்புத் தருகிறாள்!'' என்று பூரித்துப்போகும் அளவுக்கு அவர்களை ஈர்த்துவிடுகிறார்கள்.

மேலும் நடுவயதுப் பெண்கள் இளைஞர்களின் மனோபாவங்களை எளிதில் புரிந்துகொள்கிறார்கள். அவர்களுடைய பலவீனங்கள், பிரச்சினைகள் மற்றும் மன இறுக்கத்தை தனதாகக் கருதி, அதிலிருந்து மீண்டுவர முழு ஒத்துழைப்பு தருகிறார்கள்.

# கர்ப்பகாலத்தில்...

(26ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியெனில் எந்த மார்க்கத்தில் பயணம் செய்தாலும் கரு கலைந்துவிடும் என்கிறீர்களா? என நீங்கள் கேட்பது புரிகிறது. இந்தக் கேள்விக்கு பிரபல மகப்பேற்று மருத்தவ நிபுணர் கூறும் பதிலைப் படியுங்கள்.

''வீட்டுக்குள் இருக்கும்வரை எப்போதும் ஒரு கட்டுக்கோப்பான சூழலுக்குள் வாழ நீங்கள் பழகிக்கொள்கிறீர்கள். இந்தச் சூழலை விட்டு வெளியில் செல்லும் போது இயற்கையாகவே பலவித மீறல்களை நீங்கள் செய்கிறீர்கள், உங்களையும் அறியாமல். உதாரணத்துக்கு பிளாட்பாரத்தில் நீங்கள் நிற்கிறீர்கள், பயணம் செய்யவேண்டிய ரயில் வந்து நின்ற சில நிமிடங்களிலேயே கிளம்பிவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது உங்களையும் அறியாமல், ஏதாவதொரு லக்கேஜை தூக்கிக்கொண்டு ஓடுவீர்கள். அந்த அவசரம் தருகிற டென்சனும் உடலின் அசாதாரண இயக்கமும் கருவைப் பாதிக்கின்றன.

ஒருவேளை தவிர்க்கமுடியாத பயணம் என்றால், அதற்கேற்ப உங்களைச் சரியாக தயார்ப்படுத்திக்கொள்வது நல்லது.

* பயணத்தின்போது கர்ப்பிணிப் பெண்கள் தப்பித் தவறிக்கூட கோபப்படவோ, துக்கப்படவோ கூடாது. அப்படிப்பட்ட விஷயம் எதுவும் அவர்கள் காதில் விழாத வண்ணம் பார்த்துக்கொள்வது உடன்செல்பவர்களின் பொறுப்பு.
* பை, சூட்கேஸ் அல்லது பரிசுப்பொருள் பை என எதுவுமே அவர்கள் கையிலே இருக்கக்கூடாது. அதுமட்டுமல்ல உடன் செல்பவர்களும் கூட எக்கச்சக்கமாகச் சாமான்களை அள்ளிப்போட்டுக்கொண்டு போகக்கூடாது. 'ஐயோ நம்மால் உதவமுடியவில்லையே!' என்ற நினைப்பே கர்ப்பிணிகளுக்கு டென்ஷனை உண்டாக்கும்.
* மனதை மகிழ்ச்சியாக வைத்திருக்கிற வகையில் நல்ல பத்திரிகைகள், ரேடியோ அல்லது வாக்மேன் ஆகியவற்றை உடன் எடுத்துச் செல்வது நல்லது. இசை கேட்டால் டென்சன் குறையும்.
* நீண்டநேரம் கால்களை தொங்கப்போட்டபடி பயணம் செய்யக்கூடாது. அதேபோல ஒரே நிலையில் உட்காருவதோ, படுப்பதோ கூடத் தவறுதான். அடிக்கடி எழுந்து நில்லுங்கள். நாலைந்து அடிகள் நடந்து பாருங்கள். இதனால், கால்களில் ஏற்படும் வீக்கம் கூடக் குறையும்.
* கர்ப்பிணிப் பெண்களுக்கு இயல்பாகவே அதிக பசி எடுக்கும். எனவே, பயணத்தின்போது கர்ப்பிணிகள் விரும்பும் தின்பண்டங்களை உடன் எடுத்துச் செல்லவேண்டும். பழங்கள், பழச்சாறு வகைகள் போன்றவற்றை அதிகம் வைத்துக்கொள்ளவும்.
* சுத்தமான குடிதண்ணீரை போதுமான அளவு எப்போதும் கையில் வைத்திருக்கவும்.
* வெளியில் இருக்கிற எந்த உணவுப் பண்டத்தையும் கர்ப்பிணிகளுக்கு வாங்கிக்கொடுக்கவேண்டாம்.
* பயணத்தின்போது அடிக்கடி கர்ப்பணிகள் கழிப்பறைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆனாலும் சூழ்நிலை அவர்களை அனுமதிக்காது. இதனால், மன உளைச்சல் ஏற்படும். ரயிலிலோ விமானத்திலோ செல்லும்போது கூச்சம்பார்க்காமல், சக பயணியின் அல்லது உறவினரின் துணையோடு கழிப்பறைக்குப் போய் வரவும்.
* முடிந்தவரை தனியாகச் செல்லவேண்டாம். துணைக்கு ஒருவரைக் கட்டாயம் வைத்துக்கொள்ளவும்.
* குதிக்கால் உயரமாக உள்ள செருப்புகளை ஒருபோதும் அணியவேண்டாம்.
* தலைவலி, காய்ச்சல் என வரும்போது நீங்களாகவே மருந்து மாத்திரைகளை எடுத்துக்கொள்வது தவறு. வீட்டுப் பெரியவர்கள் ஏதாவது அனுபவ வைத்தியம் சொன்னால் கூட அதை காதில் வாங்கவேண்டாம். எப்போதும் நீங்கள் 'கிளினிக்' செல்லும் மருத்துவரிடம் ஒருநடைபோய் வந்துவிடவும்.

# கவிதைப் பூங்கா

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா

## அழகு

செந்தமிழில் பேசுவது அழகு!
சினக்கும் பேச்சை தவிர்ப்பதழகு!
சந்தக்கவிதை படைப்பதழகு!
சங்கத்தமிழை வளர்ப்பதழகு!
சொந்தக்கருத்தை சொல்வதழகு!
சுந்தரத் தமிழில் எழுதுவதழகு!
இன பந்துக்களோடு வாழ்வதழகு!
எளிய வாழ்க்கை வாழ்வதழகு!
சந்தி சிரிக்க வாழ்வதைவிட்டு
சந்தோஷமாய் வாழ்வதழகு!
சோம்பலைப்போக்கி உழைப்பதழகு!
சொந்தமண்ணில் வாழ்வதழகு!
சாந்தி சமாதான சமரசம் அழகு!
சமத்துவ சன்மார்க்க போதனையழகு!
நிரந்தர சுதந்திரம்
நிம்மதி வாழ்க்கை
அமைந்த நாளே
அனைத்திலும் அழகு!

■ சேனையூர் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம்.

## முரண்பாட்டுச் சமன்

உன்னால் தூக்கமே வருவதில்லை அன்பே!
என்றும் என் கனவில் வந்து போகும்
என் நிலா நீ மட்டும்தான்.....!

பாதையில் தடுமாறி விழுந்தாலும் நான்
சிரித்துக் கொள்கிறேன்
உன் கன்னக் குழிகளை ரசித்து பழகியதால்...
பாதைக் குழியும் என்னை ரசிகனாக்கியது!
ஏய் பெண்ணே.... நான் சுட்டெரிக்கும்
செந்தணல்!
எல்லோரும் என்னருகில் வர சற்று பயப்பட...
நீமட்டும் எப்படியடி என்னில் சுகமாக குளிர்காய்கிறாய்?
நீ மழையாகியதால் நானும் மலையானேன்
முதலில் நீ என்னில் விழுவாய் என்று!
ஆனால் நீயோ எனை ஏமாற்றி
இறுதியில் நதியுடன் சங்கமித்து விட்டாயே!
இறுதியாக உறுதியாக கூறுகிறேன்! நீ வெற்றுத் தாள் என்றால்
நான் அதில் பேனை என் உதிரமை கொண்டு உன்னில்
எனதுயிரையே உயில் எழுவேன்!!!

■ தீயந்தலாவ எச்.எப்.றின்னா

## சமாதானம்

இன்னமும் நம் நாட்டில் சமாதானம் நிலவுகிறதாம்.
அப்படியா? என்று தான் கேட்கத் தோன்றுகிறது.
சமாதான சூழ்நிலையில் வெள்ளை
புறாதான் பறக்கும்
நம் நாட்டில் வெள்ளை
வான்களல்லவா திரிகின்றன!
கிழக்கில் காணாமற் போனவன்
தெற்கில் முண்டமாக கிடக்கிறான்!
அவன் தலையோ வேறொரு திசையில்...
சமாதானம் நிலவிய காலத்தில்
ஆட்களை குறிபார்த்த
கழுகுக்கண்கள் இப்போது தமது
களையெடுக்கும் வேலையை செய்கின்றன.
கடத்தப்பட்டு உயிரிழந்தவர்.
பட்டியலைவிட காணாமற் போனோர்
பட்டியலே நீண்டு காணப்படுகிறது.
அதில் எத்தனைபேர் இறந்துவிட்டனரோ?
கொன்றவனுக்கு தானே தெரியும்!

■ அநுராதபுரம் சு.சயனி

## ஆலா பற... பற...

பசி வந்தால்,
பத்தும் பறக்குமாம்.
பறக்கலாம்.
பறக்கட்டும்.
தங்கை ரிஸ்...உன் பருவம்
கூடவா,
பறந்து போனது?
பாவம் நீ.
சிறகில்லாத
சிட்டுக்குருவி உன்னை,
மடிக்கிடத்தி,
ஆலா..பற...பற,
ஆலாமுட்டை பற....பற
ஆலாக் குஞ்சு பற...பற,
என்று
அன்னைபாடியிருப்பாள்.
அர்த்தம் புரியாதவள் நீ
அதுவாக ஆனாய்.

■ மூதூர் மதுரன்

## சுயமுகவரி

தந்தை தந்த முகவரி
சமூகத்தின் அங்கீகாரம்.
சமூகம் தந்த முகவரி- அதில்
முகம் மட்டும் சதுரங்கம்.
மொழி தந்த முகவரி
பயங்கரவாதி எனும் பட்டம்
ஊர் தந்த முகவரி
அகதி எனும் அடையாளம்
நாடு தந்த முகவரி
அயல்நாட்டில் தஞ்சம்
கல்வி தந்த முகவரி
உலகமெங்கும் அங்கீகாரம்
இதற்கு கூட இங்கில்லை
ஓர் கௌரவம்
சுய முகவரியை
தேட நினைத்தால்
மாயமாவீர்கள் என்கிறான்
குண்டு மழை பொழியவும்
முகமூடி கொண்டு தேடவும்
பள்ளிக்கூடப் பக்கம் வந்தவன்.

■ ந.மதன்.
கிழக்கு பல்கலைக் கழகம்

## மதியும் மங்கையும்

சோலை வனத்துப் பூக்களெல்லாம்
சோகம்கண்டு பார்த்துக்கொள்ளும்
சேலை வண்ணத்து அழகு கண்டு
சேர்த்துக்கொண்டது ஆசை வண்டு.

மாலைப் பொழுதில் தினம்
மயங்கி நின்றேன் அருகில் மனம்
கானம் இசைக்கும் தேனமுது
பானம் கொடுக்கும் ஆசைமது.

காத்துக் கிடந்து தவிக்கிது.
காதல் கீதம் இசைக்கிது.
பூத்துக் கிடந்த முல்லை மொட்டு
பார்த்துச் சொன்னது ஆசைமெட்டு
அஞ்சுமுன் எழிலைக் கண்டு மதியும்
கொஞ்சும் தென்றல் உடலில் பதியும்!

■ 'கலையூர்த் தேசிகன்' தெ. அரியநாயகம்

## நோன்பின் மாண்பு

©123Greetings.com

சிந்திடும் எழிலே! செம்பிறைத் தளிரே!
சிலிர்த்தது,உன்னால் ரமழானே! - நீ
தந்தநன் மாதம் துளிர்த்திடும் நீதம்
தூயதாம் நல்லற 'அமலாலே'!

விழித்திடும் இரவு, விமலனின் உறவில்
விரவிடும் நித்திய நோன்பாலே! - மனம்
களித்திடும் மாந்தர் கடமையில் நீந்திக்
கரைவராம், பத்தியின் மாண்பாலே!

உடற்பசி தாகம் உறுத்திடும் மோகம்
ஒறுத்திட உள்ளக் கறைநீங்கும்! - நாம்
தொடுத்திடும் நோன்பில் தடுத்திடும் தீம்பால்
தூ யவ னருளாம் நிறைவோங்கும்!

இனமத குரோதம் இழிதரும் விரோதம்
இருப்பது உலகில் கேடாகும்! - நாம்
மனவளம் பெருக மற்றவர் உறவை
மதிப்பதே நற்செயற் பாடாகும்!

நடுநிசி எழுவோம்! நாயனைத் தொழுவோம்!
நல்லறம் பூக்கட்டும் வாழ்வினிலே! - நமை
அடுத்திடும் ஏழை கொடும்பசி வீழ,
அருகட்டும் கஞ்சமுந் தாழ்வினிலே!

சீர்த்திகள் செழிக்க செல்வமே கொளிக்க
செறுபகை நீங்கணும் நாட்டினிலே! - நம்
நேர்த்தியாம் நோன்பு நிறைதரும் மாண்பால்
நிம்மதி ஓங்கணும் வீட்டினிலே!

■ ஏறாவூர் அனலக்தா

## மறந்து விட்டேன்

மொழிகளையே
மறந்து விட்டேன்
அவன்
பேசுவதைப் பார்த்து

■ சுசி. வஷனிமா

## கருணை மனு

சிறைக் கைதிக்காவது
மீண்டும் வர கருணை மனு
அளிக்கிறான் - நீயோ
காதலெனும் சிறைக்குள்
எனை மட்டும் ஆயுள்
கைதியாக்கிவிட்டாய்!

■ பொகவந்தலாவை
சோ. சுதர்சினி

# உணர்வுகள்

எஸ்.எழில்நிலா 25

## மீன்பாடும் தேனாட்டின் கவிதை வானம்! மிட்டாய் போல் இனிக்குமிவர் எளிய கானம்!

■ கவிஞர் செ.குணரத்தினம்



'தங்கவேலன்' என்பார்கள். அவரிடம் 'தகரவேல்' கூட இருக்காது. 'சாந்தி' என்று அழைப்பார்கள்; ஆனால் அவரோ வாழ்வில் சாந்தியை தொலைத்து விட்டு தேடித் திரிகின்ற சாந்திகளில் ஒருவராக இருப்பார்.

இன்று எத்தனையோ 'காசிநாதர்கள்' வாழ்க்கையில் காசில்லாத காரணத்தால் வாழ்க்கையை வாழவழியின்றி அல்லலுற்று நகர்ப்புறங்களின் தெருவோரங்களிலும் தம் கூடார இராச்சியங்களுள்ளும் குந்திக் கொண்டிருக்கிறார்கள். இரவை உண்டு, பகலைப் போர்த்திக் கொண்டு, பனியில் தவித்து, வெயிலில் வெந்து, கொசுக்களுக்கு உணவாகி உறங்கிக் கொண்டிருப்பதையும், ஓடும் பேரூந்தில் ஏறி தம் நோய்நொடிகளை சொல்லிக் கையேந்துவதையும் 'கையாலாகாதவர்களால்' அவர்கள் கண்டும் காணாமல் விடப்படுவதையும் நீங்களும் கண்டிருப்பீர்கள்.

தம் இயற்பெயருக்கு முரணாகவே சில பெரியார்களின் வாழ்வும் இருந்திருக்கிறது. கற்காத மேதை காமராஜரும் அதற்கு சான்று. ஏனெனில், காமராஜர் ஒருபோதும் காமத்துக்கு ராஜாவாய் இருந்ததில்லைதானே! ஆனால் பல்துறை விற்பன்னர் கவிஞர் செ.குணரத்தினம் பெயரளவில் மட்டுமன்றி குணத்திலும், குழந்தை மனத்திலும், படைப்புலகிலும் நாடு போற்றும் நவரத் தினமாகவே இலங்குகின்றார்.

படைப்பிலக்கியத்துறையில் பரிணாமங்களை கண்டும் பல பரிமாணங்களை கொண்டும் 'பக்கவாதமில்லாத' பரியாக, சரியாக நான்கு தசாப்தங்களைக் கடந்து,பாராட்டுக்கள் எனும் தாலாட்டுக்களைக் கண்டு தடம்புரளாது ஈழத்து இலக்கியத்தில் இலட்சிய நோக்கோடும், இலக்கிய வீச்சோடும் இற்றைவரையும் ஓடிக்கொண்டிருக்கிறார். இவரோடு தம் 'மரதனை' ஆரம்பித்தவர்கள் மரணத்தை சுவாசித்த பின்பும் சிலர் காலவோட்டத்தில் தம் கவிதை ஓட்டத்தை நிறுத்திக் கொண்ட பின்பும் இவர் இன்னும் இளைய தலைமுறையினருக்கு சவாலாக இளவலின் மிடுக்கோடு ஓடிக்கொண்டே இருக்கிறார், அமைதியான ஆனாலும் ஆழமான ஆற்றைப் போல...

இன்று 'பட்டம்' விற்பவர்களின் திட்டங்களை அறிந்திருந்தும் அதை திருட நினைப்பவர்களே அதிகம். காக்கை பிடித்தும் காசுகொடுத்தும் வாங்கிய பட்டங்களையும் இன்னும்; 'உனக்கு நாளை சூட்டுகிறேன். எனக்கு இன்று சூட்டு' என்று வாங்கிய கிரீடங்களையும் 'பிரேம்' செய்து காணும் இடமெங்கும் காட்சிப்படுத்துபவர்கள் அதைவிட அதிகம். இத்தகைய போலிகளால் தகுதியானவர்களின் கிரீடம் தட்டிப் பறிக்கப்படுவதும் இருட்டடிப்பு செய்யப்படுவதும் இயல்பு. இதனால், உண்மையாக பட்டங்கள் பெற்றவர்கள், சட்டங்கள் கற்றவர்கள் 'நிறைகுடம் தளும்பாது' என்பதற்கமைய சில பெட்டைக் கோழிகளைப் போன்று கொக்கரித்துக் கொள்ளாது ஆயிரம் முட்டைகளை இட்டாலும் ஆமை போல் அடங்கி இருப்பார்கள். அவர்களில் ஒருவர்தான் கவிஞர் செ.குணரத்தினம்.

கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, வானொலி நாடகம், மெல்லிசைப்பாடல், பத்திரிகைத்துறை என்று எத்துறையையும் விட்டு வைக்காது தனக்கென்று தனித்துவ முத்திரை பதித்திருக்கின்றார். மல்லிகை, ஞானம் போன்ற சஞ்சிகைகள் இவரது புகைப்படத்தை முகப்பில் பிரசுரித்து கௌரவப்படுத்தியுள்ளன. மட் டக்களப்பு மாவட்டம் அமிர்தகழியில் 1942.06.15இல் பிறந்த கவிஞர் 1960 களில் எழுத்துலகில் கால் பதித்தவர். 'அமிர்தகழியான்' என்ற பெயரிலும் எண்ணற்ற நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதி இருக்கிறார். வாழைச்சேனை காகித ஆலையில் நீண்ட காலம் இலிகிதராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். மட்டக்களப்பு மாவட்டத்தின் புகழ் பூத்த மூத்த கவிஞர்.

கிராம மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையையும், மீனவர்களின் வாழ்வையும் பின்புலமாகக் கொண்டு பல படைப்புக்களைத் தந்துள்ளார். மண்வாசனையை, யதார்த்தத்தை இவர் கதைகளில் தரிசிக்கலாம். கவிதைகளில் எளிமையையும் இனிமையையும் ஒன்று சேரக் கலந்து தருவதில் வல்லவர். பேச்சுத் தமிழில் அநேகமான கவிதைகளை படைத்துள்ளார். கிராமத்துக் காட்சி, அண்டை அயல்களில் நடைபெறும் சம்பவங்கள் இவர் கவிதைகளுக்கு உயிர்ப்பைக் கொடுத்துள்ளன.

தமிழ் அலை, ஈழ நாதம், தினக்கதிர், காகித மலர்(மாசிகை) போன்ற பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக கடமையாற்றியுள்ள இவர் பழைய தலைமுறைக்கும் புதிய தலைமுறைக்கும் பாலமாக இருந்து வருகின்றார். இதுவரையில் ஆயிரம் கவிதைகளையும், ஐந்நூறு மெல்லிசைப்பாடல்களையும் எழுதியுள்ளார். இவரது இருநூறு சிறுகதைகளோடு நூற்றைம்பது நகைச்சுவைக் கட்டுரைகளும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. பத்து நாவல்கள் எழுதியுள்ளார். வானொலியில் ஐம்பது நாடங்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. இவர் பத்துக்கு மேற்பட்ட நூல்களைத் தந்த பன்னூலாசிரியர். பல கவியரங்குகளில் தலைமை வகித்தும் பாடியுள்ள இவர் 'திண்டுக்கல் லியோனி' போன்று தனது நகைச்சுவை ததும்பும் பேச்சாலும், கவிதைகளாலும் பலரையும் ஆகர்சிப்பவர்.

இவரது 'துன்ப அலைகள்' நாவல் தேசிய கலை இலக்கிய பேரவையின் நாவல் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளது. 'துருவங்கள் இணைகின்றன' நாவல் வீரகேசரியின் எழுத்தாளர் ஆண்டுப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற் றுள்ளது. 'ஒரு மீனவனின் உள்ளம்' சிறுகதை கொழும்பு பல்கலைக்கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசைப் பெற்றுள்ளது. 'தெய்வ தரிசனம்' நாவல் பிரதேச சபை அபிவிருத்தி அமைச்சு நடத்திய போட்டியில் இரண்டாமிடம் பெற்றுள்ளது. நோர்வே தமிழ் சங்கம்,அவுஸ்திரேலிய தமிழ்ச்சங்கம் நடத்திய உலகக் கவிதைப் போட்டிகளில் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளார். இது தவிர தேசிய, சர்வதேச மட்டங்களில் பல தடவை கௌரவிக்கப்பட்டுள்ளார். இவரது பல்துறை ஆளுமைக்காக இந்து கலாசார திணைக்களம் 'தமிழ் மணி' என்ற பட்டத்தையும், மட்டு.கலாசார பேரவை 'இலக்கிய மணி' என்ற பட்டத்தையும், வடகிழக்கு மாகாணசபை ஆளுநர் விருதையும் வழங்கி கௌரவித்துள்ளன. 'கலாபூசணம், இலக்கிய வேந்தர்' போன்ற இன்னோரன்ன பட்டங்களையும், பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். இது தவிர பலநூறு உள்ளூர் அமைப்புக்களும் பொற்கிழி, பொன்னாடை, பாராட்டுப் பத்திரங்களை வழங்கி இவரைக் கௌரவித்துள்ளன.

இருந்தும் ஒரு 'கடிதத் தலைப்பின் மூலமாகவோ', 'இறப்பர் முத்திரைக்கூடாகவோ' தன் மேதாவித்தனங்களை ஊரெங்கும் 'டமார'மடிக்காத இவரது தன்னடக்கத்தை என்னவென்பது?



# மஞ்சள் ரத்தம்

விஞ்ஞானச் சிறுகதை

ஞாயிற்றுக்கிழமை காலை மூர்த்தி அவளை அழைத்து வந்தான். சம்பிரதாய அறிமுகமில்லாமல், "ராமு, இவள் பெயர் சத்யா. மாதம் முழுதும் இவ உன்கூட இருக்கப் போறா." அவன் அழைத்து வந்த பெண்ணுக்கு பத்தொன்பது வயசு இருக்கும். கலைந்த தலை, தீவிரமான தோற்றம், சகல சொத்துகளும் முதுகுச் சுமையில் அடங்கி இருந்தன. என்னைப் பார்த்துச் சிரிக்கவும் இல்லை. முறைக்கவும் இல்லை. நின்றுகொண்டிருக்கும்போதே புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

"சத்யா, இதுதான் ராமு. நான் சொன்னேனே, இங்கதான் நீ இருக்கப்போறே" என்றான்.

"எனக்கு இதில ஏதாவது உரிமை இருக்கா என்ன? என் ரூமைக் காட்டினா அங்க போறேன்" என்றாள் அந்த பெண்.

மூர்த்தி என்னைச் சற்று தர்மசங்கடமாகப் பார்த்தான். "அவ ஒரு மாதிரி" என்றான். மூர்த்தியை தனியாக அழைத்து "மூர்த்தி, நீ செய்யற காரியம் உனக்கே நல்லா இருக்கா?"

"நீதானே சொன்னே. உன் மனைவி பிரசவத்துக்குப் போயிருக்கா. சில மாதங்களுக்கு யாரும் இருக்கமாட்டாங்கள் கம்பெனிக்காக யாரையாவது அனுப்பென்று?"

"அதுக்காக இந்த மாதிரி சிடுமூஞ்சிப் பெண்ணையா சொன்னேன்."

"ஏன் இவளுக்கு என்ன?"

"என்ன மூர்த்தி அவளைப் பார்த்தா ஒரு மாதிரி இல்லை?"

மூர்த்தி என்னை நிதானமாகப் பார்த்து "ராமு, நீ..... நீ எப்படி முடிவெடுக்க முடியும்? அவளோடு ஒரு வார்த்தை பேசி இருக்கியா இருவரைக்கும்? பேசிப்பாரு."

"தோற்றத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா?"

"என்ன தெரியுது ?"

"ஒரு மாதிரி என்று"

"ஒரு மாதிரி என்றால் என்ன? புரியலை. நான் வேணுமென்றால் சொல்லுறன், சுத்தமாக குளிக்கும்படி. ராமு, நான் ஒரு இக்கட்டில் இருக்கேன். எக்ஸ்சேஞ் புரோகிராம் படி இவள என் வீட்டுக்கு அனுப்பியிருக்காங்க. எனக்கு இப்ப இக்கட்டான நிலை. என் மாமனார் பரிவாரத்தோட கண் ஆப்பரேஷனுக்கு வந்திருக்கார். அதனால் வீட்டில இடம் இல்லை. அரசாங்கத்துக்கு இவளைச் சேர்த்துக்கறதா ஒப்புத்துக்கிட்டேன். அதனால நீ இவள ஒரு மாதம் சகிச்சிக்கிட்டா போதும். எப்ப பார்த்தாலும் புஸ்தகம் படிப்பாளாம். இவளால தொந்தரவு ஏதும் இருக்காது".

அவளை இங்கிருந்து பார்த்தேன். நின்றுகொண்டு புத்தகம் படித்துக்கொண்டிருந்தாள்.

"இவ யாரு?"

"ஏதோ அரசாங்க ஆராய்ச்சிக்கு முக்கியமாக தேவைப்படறா. முக்கியமான ஒப்ஸர்வேஷனுக்கு முந்தி ஓரியண்டேஷனுக்கு அனுப்பப் போறாங்களாம். கொஞ்சம் பேச்சு கொடுத்துப் பாரு. நல்ல புத்திசாலிதான். என்ன, கொஞ்சம் பேச்சு கம்மி, அவ்வளவுதான். சாப்பாடு எல்லாம் வெளியே போய்ச் சாப்பிடுவா. மாடி சாவி கொடு போதும். அப்புறம் இவளால எந்தத் தொந்தரவும் இருக்காது."

"சோப்புக்கே செலவாகும் போல இருக்கே. நாமெல்லாம் எத்தனை சுத்தமான பிரஜைங்க."

"எல்லாம் சரியாப் போய்விடும் ராமு. தயவு செய்து என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாத்தின உனக்கு பிரதியுதவி....."

"தேவையில்லை, நண்பர்களுக்குள்ள என்ன" என்றேன்.

மூர்த்தி போனதும் அவளை அழைத்து மாடி ரூமைக் காட்டினேன். அவள் உள்ளே நுழைந்து படுக்கையில் படுத்துக்கொண்டு படிப்பதை தொடர்ந்தாள். கையில் குடை வைத்திருந்தாள். இந்த ஊரில் மழையே கிடையாது. குடை எதுக்கு?

"சாப்பிட ஏதாவது இருக்குமா?" என்றாள்.

"எங்க சாப்பாடு உனக்குப் பிடிக்குமா?" என்றேன் சாமர்த்தியமாக.

"வேற வழி?" என்றாள் சுத்தமாக. நான் அறையை விட்டு விலகக் காத்திருந்தாள்.

மூர்த்தி சொன்னதுபோல் அவளால் எந்தத் தொந்தரவும் இல்லை. மாடியில் இருக்கிறாளா என்று தெரியாத அளவு சின்னச் சப்தம் கூட வரவில்லை. ஒரு முறை மாடிக்குப்போய்ப் பார்த்தபோது மிகமிக நிசப்பதமாக இருந்தது. இவள் என்ன இப்படியா தூங்குவாள் என்று கதவைத் தட்டிப் பார்த்தேன். பதிலே இல்லை.

நீண்ட நேரம் தட்டின பிற்பாடு எட்டிப் பார்த்ததில் எனக்கு அவள் தூங்கிய விதம் விநோதமாக இருந்தது. ஒரு சலனமும் இல்லாமல் இப்படியா பிணம் போல... இல்லை, ஏதாவது மருந்தின் விளைவா?

யார் இந்த அன்னியள்?

காலை அவள் இறங்கி வந்த போது புன்னகைக்கவில்லை. செய்தித்தாளை அவளிடத்தில் கொடுத்தேன். அவள் அதைப் படிக்கவில்லை. அதனால் தன் காலணிகளைச் சுத்தம் செய்து கொண்டாள்.

"உங்கள் செய்திகளில் இஷ்டமில்லை." என்றாள்.

"பின் என்ன செய்தித்தாள் வேண்டும்?" என்று கேட்டேன்.

'எதும் வேண்டாம் எனக்கு?" என்றாள்.

"என்ன சாப்பிடுகிறாய்?" என்றேன்.

"நான் இனி இங்கே சாப்பிடபோவதில்லை. கான்டீனில் எனக்கு ஏற்ற உணவு தருவதாக சொல்லியிருக்கிறார்கள். கிடைக்கும்" என்றாள்.

"என்ன மாதிரி உணவு? சொல், நான் ஏற்பாடு செய்கிறேன்."

"வேண்டாம்."

ஏன் தன் உணவுப் பழக்கத்தை என்னிடம் சொல்ல மாட்டேன் என்கிறாள்?

காலையில் மேசைமேல் கால்போட்டுக்கொண்டு புத்தகம் படித்தாள். "கெடல் எஷர் பாக்- சென்ற நூற்றாண்டு புத்தகமா" என்றேன்.

கவனிக்காமல் நிதானமாகப் படித்தாள்.


"உன் சொந்த ஊர் எது, சத்யா?" என்றேன்..

"இந்த ஊர் இல்லை."

"வேற்றுக் கிரகமா?" என்றேன். அவள் என்னை நிமிர்ந்து பார்த்து "அந்தரங்கமான கேள்விகளுக்கு நான் பதில் சொல்ல் வேண்டிய கட்டாயமில்லை."

அவள் செய்யும் காரியங்கள் எல்லாம் ஒருவாறு நம்மிடமிருந்து வித்தியாசப்பட்டது போல இருந்தது. பேச்சு, நடை, உடை, பாவனை எல்லாமே நிச்சயம் இவள் நம்மவள் இல்லையென்ற சந்தேகத்தை என்னுள் விதைத்தன. படிக்கும் புத்தகங்கள் நம்மிலிருந்து வேறுபட்டவை. பேச்சு வார்த்தைகளில் 'விடையிறுக்க', 'பயன்பாடு', 'துல்லியம்' போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினாள். யார் இவள்? எப்படி அதைத் தீர்மானமாகக் கண்டுபிடிப்பது? பிடி கொடுத்தே பேச மாட்டேன் என்கிறாளே! என் ஆர்வம் அதிகரித்தது. கைகால்களை முழுவதும் மறைத்து ஏன் உடையணிகிறாள்? பேசும் போதெல்லாம் தலையையும் புஜங்களையும் ஏன் இவ்வாறு ஆட்டி ஆட்டிப் பேசுகிறாள்? யார் இவள்? கண்டு பிடித்தே ஆக வேண்டும் என்கிற ஜுரம் கொஞ்சம் கொஞ்சமாக ஆர்வமாக அப்புறம் வெறியாக மாறிற்று. என் ஆராய்சிகளை துவங்கிவிட்டேன். முதலில் அவளை ஆடையில்லாமல் பார்க்க விழைந்தேன். இதில் என்னைச் செலுத்தியது ஒரு விஞ்ஞான ஆர்வமே தவிர, வேறு எந்த விபரீத இச்சையும் இல்லை என்பதை இப்போதே சொல்லிவிடுகிறேன். அவளுடைய உள் அங்கங்கள் நம் அங்கங்கள் போல இருக்கின்றனவா என்று தெரிந்து கொள்ளவே இந்த எத்தனம்.

அவள் இரவு ஏழு மணிக்கு அப்புறம், ஆனால் நான் அலுவலகத்திலிருந்து வருவதற்குள் குளிக்கிறாள் என்பதை அறிந்தேன்.



ஒரு முறை குளியல் அறையை ஒட்டியிருக்கும் அறையில் என் மனைவி பழைய துணிகளையெல்லாம், கண்டா முண்டா சாமான் களையெல்லாம் அடுக்கியிருந்தாள். சாதாரண நாட்களில் நான் அந்த அறைக்குள் போனதே இல்லை. அந்த அறைக்கு குளிக்கும் அறைக்கும் கதவு இருப்பது தெரியும். அன்றைக்கு அரைநாள் விடுமுறை எனக்கு. அதனால் சீக்கிரமே திரும்பி விட்டேன். மாடியில் அவள் பாடிக்கொண்டே குளிக்கும் சப்தம் கேட்டது. தண்ணீரைத் திறந்து விட்ட 'சோ' வென்ற சீரான இரைச்சல் கேட்டது. மெல்ல, மிக மெல்ல, அந்த அடுத்த அறைக்குள் நுழைந்து சன்னமாக இரு அங்குல அந்தக் கதவைத் திறந்து உள்ளே பார்த்தேன். அவளை மெல்லிய நீராவிப் புகை மறைத்திருந்தது. அவ்வப்போது அவள் உடலின் வேறு வேறு பாகங்கள் ஆவித் திரையினூடே கோடி காட்டின. இங்கே ஒரு புஜம், அங்கே ஒரு முழங்கால் அழுந்திய வயிறு, மார்பு. எனக்கு அனைத்தும் ஆச்சரியம் அளித்தது. அவள் பாகங்கள் எதுவும் நம்மைப்போல இல்லை. எனக்கு வியர்த்துவிட்டது. இவள் நம்மவள் இல்லை. வேற்றுக் கிரகத்துப் பிரஜை என்பது திட்டவட்டமாக தெரிந்துவிட்டது. சற்று நேரத்தில் குளித்து முடித்து தன் உடைகளை மேலே போர்த்திக்கொண்டிருந்தவள் சட்டென்று சற்றும் எதிர் பாராமல் அந்தக் கதவருகே வந்து சரேல் என்ற திறந்து "எனக்கு தெரியும் இந்த மாதிரி எதாவது நடக்கும் என்று. என் உள்ளுக்குள் தெரிந்துவிட்டது. உணர்வு சொல்லிவிட்டது. உனக்கு வெட்கமாக இல்லையா? ஒரு பெண் குளிப்பதை மறைந்திருந்து பார்ப்பது எத்தனை கேவலம்? இந்த முறை உன்னை மன்னித்தேன். இனிமேல் இந்த வேலை வைத்துக்கொள்ள வேண்டாம். அடுத்த முறை இம்மாதிரி நடந்தால் உன் மேற்பார்வை அதிகாரிக்குச் சொல்ல வேண்டிவரும்" என்றாள்.

எனக்கு அவமானமாக இருந்தது. "இனி இவ்வாறு நடக்காது" என்று சொல்லிவிட்டு வந்தேன்.

ஆனால் என் ஆர்வம் தணியவில்லை. கேவலம் இந்தப்பெண்! வேற்றுக்கிரகத்துப் பெண் என்பது எனக்கு முழுவதும் தெரிந்ததா? இவளிடம் நாம் ஏமாறுவதா என்று என் நண்பன் தணிகையிடம் சொன்னேன். "எப்படிச் சொல்கிறாய் அவள் வேற்றுக் கிரகத்துப் பெண் என்று?" தணிகை எதிலும் சந்தேகன்.

"குளிக்கும்போது பார்த்துவிட்டேன் தணி! அங்கங்கள் எல்லாம் நம் மாதரியே இல்லை."

"அதனால் வேற்றுக் கிரகம் என்று சொல்ல முடியாது. நம்மில் எத்தனையோ வகை."

"பின் எப்படி சொல்ல முடியும் என்கிறாய்?"

"ஒரே ஒரு வழி, ரத்தப் பரிசோதனை. அவளைக் கத்தியால் கீறிப் பார்ப்பதுதான். ரத்தம் வருகிறதா இல்லையா என்று கண்டுபிடிக்க வேண்டும்."

தணிகை தன் அலமாரிக்குச் சென்று பளபளப்பான சிறிய கத்தி ஒன்றை எடுத்து "இதை அவள் முதுகில் அல்லது முழங்காலில்- கழுத்தில் கீறாதே- மற்ற எந்த இடத்திலாவது கீறிப் பார். வலி அதிகம் இருக்காது. அதன் கூர்மை அப்படிப்பட்டது. மிக மெலிதாகத்தான் சருமங்களை கீறும். நம் சேர்ஜன்கள் பயன்படுத்தும் லேசர் விளிம்புக் கத்தி இது."

அவன் அந்த அருமையான கத்தியை ஒரு சின்ன உறைக்குள் போட்டுக் கொடுத்தான். அதை வாங்கிக்கொள்ள தயங்கினேன்.

"பயமாக இருக்கிறது"

"ஒன்று செய்து பார். அவள் நெஞ்சில் கை வைத்துப்பார். ஏதாவது அடித்துக்கொள்கிறதா? க்ளாக் ஏதாவது இருக்கிறதா பார்த்துவிடு. அதை விட கீறிப் பார்த்துவிடுவதுதான் உத்தமம். ரத்தம் உத்தரவாதமாகக் காட்டிக் கொடுத்துவிடும்."

"அவள் பயத்தில் சப்தம் போட்டு அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தால்?"

"கொடுப்பாளா?"

"ஆம் சண்டைக்காரி குளிக்கும்போது பார்த்ததற்கே ரொம்ப ரகளை செய்தாள்.

(30ஆம் பக்கம் பார்க்க)

## பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

## பேனா நண்பர்கள்



பெயர் : வே.அகிலேஸ்வரன்
வயது : 17
முகவரி: மருதங்கேணி வடக்கு, தாளையடி.
பொழுதுபோக்கு: சித்திரம் வரைதல், வானொலி, நடனம்.



பெயர் : எஸ்.ரதன்
முகவரி: 376/7, தர்மபுரம், கிளிநொச்சி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர் : பாத்திமா சாதிக்கா
வயது: 18
முகவரி:பட்டியடிப்பிட்டி, அக்கரைப்பற்று.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி கதை எழுதுதல்,



பெயர் : சு.ஜீவமதன்
முகவரி:ஆலங்கேணி, பூநகரி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, வாசிப்பு.



பெயர் : எஸ்.எச்.மக்கீன்
முகவரி:96, ரிதிதென்ன, புனானை, வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி



பெயர் : ஏ.எல்.எம். சமீம்
வயது: 17
முகவரி:230, லெப்பை வீதி, ஏறாவூர்- 06.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

## சொற்சிலம்பம் போட்டி இல. 281

சொற்சிலம்பம் 281 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் செப்ரெம்பர் 30ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 14 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.279 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 281

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 | 6 | |
| 7 | | | | | | | ■ |
| 8 | | ■ | | ■ | 9 | | 10 |
| 11 | | 12 | ■ | 13 | | ■ | |
| ■ | 14 | | 15 | | ■ | 16 | |
| 17 | | | | ■ | 18 | | ■ |
| 19 | | | ■ | 20 | | | 21 |
| 22 | | ■ | 23 | | ■ | 24 | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 279

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | க் | 2 கு | 3 வ | ம் | ■ | 4 ச | 5 கா |
| ஞ் | ■ | ம | டி | ■ | 7 மா | த | வி |
| 8 சா | 9 ம | ர் | த் | 10 தி | ய | ம் | ■ |
| 11 மி | தி | ■ | 12 த | ரு | ம் | ■ | 13 கு |
| ர் | ■ | 14 ந | ல் | கு | ■ | 15 த | டு |
| 16 த | வி | ர | ■ | 17 தா | 18 ர | க | ம் |
| ம் | ■ | 19 க | 20 வ | ள | ம் | ■ | ப |
| ■ | 21 இ | ல் | ல | ம் | ■ | 22 ஆ | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.281

**இடமிருந்து வலம்**

1. அதிகமாக/ மிதமாக.
5. இயமன்/ கூற்றுவன்.
7. சுவாமி அறையில் ஒளி வீசுவது.
8. போதை தருவது.
9. கொடியது/ கடுமையானது.
11. திசை.
13. குரங்குகளுக்கு இதுவும் ஒரு கரம் தான்.
14. இவன் மகாகவி.
16. குளிர்மையாக இருந்தால் தண்ணீர்.
17. முக்கியத்துவமான/ பலருக்கும் தெரிந்த.
18. எருமை.
19. ஒரு மாற்றுப் பயிர். சரை கட்டுவதற்கு உதவும் நூல் இதில் தான் தயாராகிறது.
20. நவம்.
22. குத்து விழுவது இப்படி.
23. நோவு.
24. வரி.

**மேலிருந்து கீழ்**

1. சன்மானம்/ பரிசு/ அன்பளிப்பு.
2. குரங்குகள் மாத்திரமல்ல நமது அரசியல்வாதிகளும் கூட அடிக்கடி இதை அடிக்கின்றனர்.
3. விவாதம்.
4. கவிஞனிடம் பிறப்பது.
5. கிண்டல்/ கேலி.
6. பாம்பாட்டியின் வாத்தியம்.
10. துன்பம்/கவலை.
12. கூட்டம்.
13. வானம்.
15. பன்மையைக் குறிக்கும் சொல்.
16. தீர்ப்புக் கூறுபவன்.
17. பிழைத்துப் போனமை.
18. மேலான தன்மை.
20. சத்தம்.
21. நீர் நிலையை ஒட்டி இறங்கும் இடம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 279

1. அ.மஸ்ஹூகா பேகம்,
287, சலீமா மன்ஷில்,
ஸம் ஸம் வீதி, பொத்துவில்-02.
2. திருமதி ரஞ்சினி ஜெயரத்தினம்,
21, 3/3, 1ஆவது சப்பல் லேன்,
வெள்ளவத்தை.
3. எஸ். ரவிச்சந்திரன்,
'விஜயா வாசா',
பெரிய கல்லாறு-2,
கல்லாறு.

**பாராட்டுப் பெறுவோர்**

1. நா.விஷ்ணுவர்த்தன், கல்முனை.
2. ஏ.உதுமாலெவ்வை, புத்தளம்.
3. திருமதி நா.பரமேஸ்வரநாதன், கல்கிசை.
4. செல்வி எம்.எஸ்.பாத்திமா சிபானா, ஏறாவூர்-03.
5. திருமதி எஸ்.என்.மணி, நுவரெலியா.
6. எஸ்.வி.நாராயணன், கொழும்பு-07.
7. பி.அஞ்சலிக்கா, வவுனியா.
8. டி.ஏ.இன்பராஜ், கம்பளை.
9. பாலசிங்கம் அகல்யா, ஒட்டுசுட்டான்.
10. திருமதி சி.பரமேஸ்வரி, வெள்ளவத்தை.
11. க.கமால்தீன், ஏறாவூர்-03.
12. பி.கதீஸ்கர், முந்தல்.
13. எஸ்.சுபாஜினி, தெகிவளை.
14. எஸ்.மோகனதாஸ், முறிகண்டி.
15. எம்.ஐ.தர்ஸீன், தலவில.

# மஞ்சள் ரத்தம்...

(29ஆம் பக்கத் தொடர்ச்சி)

" ஆர்வம் இருப்பவர்களுக்கு தைரியம் வேண்டும். எப்படியாவது ஏதாவது விபத்து போலக்கூட ஏற்பாடு செய்து கீறிப் பார்த்துவிடலாம். இல்லை தூங்கும்போது கீறிப் பார்க்கலாம். இல்லை என்னை அழைத்தால் நான் உத்தமமாக காரியத்தை முடிக்கிறேன். நீ பிடித்துக்கொள். நான் கீறுகிறேன். பெண்தானே!"

"இல்லை தணிகை முதலில் நீ அவளுடன் பேசிப்பார். அதன் பின் இந்தக் கீறல் சமாச்சார மெல்லாம் வைத்துக்கொள்ளலாம்" என்றேன்.

தணிகை சிரித்தான். "சரி" என்றான்.

பத்தாம் திகதி தணிகை வீட்டுக்கு வந்தான்.. தொலைக்காட்சியில் நியூஸ் போட்டுப் பார்த்தான். மற்றொரு கப்பல் நிறைய முந்நூறு பேர் அகதிகளாக வந்த காட்சிகளையும் அவர்கள் ராக்கெட் தளத்தில் வந்து இறங்கும் காட்சியையும் மேயர் அவர்களை வரவேற்பதையும் காட்டினார்கள்.

"இந்தக் கதியில் இவர்களின் சனத்தொகை அதிகரித்துவிடும் போல் இருக்கிறதே!" என்றான்.

"கட்டுபாடாகத்தான் செய்கிறார்கள். வீட்டு வேலைக்கு தேவைப்படுகிறார்களே" என்றேன்.

அப்போது அந்தப் பெண் சத்யா உள்ளே வந்தாள். "சத்யா ஒரு நிமிஷம், இது தணிகை. என் நண்பன்."

சத்யா அவனை உணர்ச்சியில்லாமல் பார்த்து "ஹலோ" என்றாள். மாடிக்குப் புறப்பட்டாள்.

" உன்னுடன் பேச வந்திருக்கிறான்."

"மன்னிக்கவும், நான் பேசும் நிலையில் இல்லை. வினோதர்களுடன் பேச எனக்கு இஷ்டமில்லை."

எனக்குக் கோபம் வந்து தணிகையைப் பார்த்தபோது அவன் என்னைச் சைகையால் நிறுத்தினான்.

"சத்யா,உனக்கு ஏதாவது உதவி வேண்டுமா?" என்றான்.

அவள் கண்கள் சற்று விரிந்தன. "என்ன உதவி?"

"இங்கிருந்து தப்பிக்க."

"இங்கிருந்து தப்பிக்க முடியாது. எனக்குத் தெரியும். நீ அரசாங்க ஒற்றன்."

அவள் அலட்சியமாகப் புறப்பட, தணிகை அவள் கையைப் பிடித்தான்.

"விடு என் கையை" என்றாள். அவள் முகம் வெளிறியது.

"உனக்குள்ளே என்ன ரத்தம் இருக்கிறது என்று பார்த்தே ஆக வேண்டும் . நீமனுஷியா, மிஷினா? உனக்குள் ஓடுவது என்ன? ரத்தமா, இல்லை வேறு ஏதாவது ஸிலிக்கோன் திரவமா? பார்த்தே ஆக வேண்டும். ராமு, எடு கத்தியை!"

"விடு வலிக்கிறது."

"இந்த வலி என்பது செயற்கை வலியா, இயற்கை வலியா? தெரிய வேண்டும்."

"ப்ளீஸ் விடு" என்ற அவள் கண்களில் கண்ணீர் தெரிந்தது.

"இந்தக்கண்ணீர் சின்தெட்டிக்கா இல்லை இயற்கையா?"

கத்தி, வெளிச்சத்தில் ஒரு செக்கண்டுக்கு மின்னல் அடித்து அவள் கண்ணில் மென்மையான கன்னத்தில் பிரதிபலித்தது.

"வேண்டாம் என்னைக் கொல்லாதே."

"கொல்லவில்லை. ஒரு சின்ன வெட்டு, ஒரு சொட்டு ரத்தப் பரிசோதனை. உன் ரத்தம் என்ன நிறம்? சிவப்பா அல்லது எங்கள் நோரா கிரகத்து பிரஜைகள் போல மஞ்சளா? அவ்வளவுதான் தெரிய வேண்டும்."

அவள் அலறினாள். "வேண்டாம், வேண்டாம். சொல்கிறேன். நான் பூமியைச் சேர்ந்தவள். மனுஷி என் ரத்த நிறம் சிவப்பு. அடிமைக் கப்பலில் வந்தவள்" என்றாள். அதற்குள் லேசாகக் காயம் பட்டு அவள் கன்னத்தில் ஒரு ரத்த முத்து புறப்பட்டது, சிவப்பாக.

*நன்றி - சுஜாதா*

# சமாதான முயற்சிகள்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலை நடத்திய கடற்படையினருக்கு விருது வழங்கி கௌரவிப்பதாகக்கூறி இந்தத் திருவிழா ஏற்பாடாகியிருந்தது.

"விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் இப்போது வன்னிக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இது நூறு வீதம் முற்றாகத் தோற்கடிக்கப்பட வேண்டும். அவ்வாறு புலிகளை இராணுவ ரீதியில் அழித்தொழிக்காத வரை நாட்டின் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் சமாதானச் சூழல் ஏற்படவே மாட்டாது. தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி முன்வைக்கும் தீர்வு யோசனையும் வெற்றியளிக்கப் போவ தில்லை" இப்படி அவர் அங்கு வைத்துக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அவர் இப்படிக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

நோர்வேயும் சர்வதேசமும் சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் அளிக்கப் போவதாகக் கருத்துகளை வெளியிட்டு வரும் சூழலில் -

களத்தில் யுத்தப் பிரகடனம் வெளியிடும் வகையிலான அறிவிப்பு வெளிவந்துள்ளது.

அரசுத் தரப்பில் வெளிவந்துள்ள இக்கருத்து நாடு மீண்டும் யுத்தத்துக்கு திரும்பப் போகின்றதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இன மோதலில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் அமர்ந்து பரஸ்பர அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதன் மூலம் தான் நாட்டில் அமைதி நிலை உருவாகும் என பலதரப்பினரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

தெற்குத் தலைமைகளிடம் மனமாற்றம் ஏற்பட்டு பேச்சுமூலம் தீர்வு ஒன்றை காணவேண்டும் என்ற சர்வதேசத்தின் நிலைப்பாட்டை மோதல்களில் சம்பந்தப்பட்ட தரப்புகள் மட்டுமல்ல, தெற்கில் உள்ள சகல அரசியல் தலைவர்களும் உணரவேண்டும்.

தமது அரசியல் நோக்கங்களை அடைவதற்காக எதிர்ப்பு அலைகள், சத்தியாக்கிரகம் போன்றவற்றை நடத்திக் கொண்டிருப்பதில் மட்டும் நாட்டம் கொண்டு தெற்குத் தலைமைகள் செயற்பட்டுக் கொண்டிருக்காமல், நீண்டகாலப் பிரச்சினையான தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

யுத்தத்தில் நாட்டம் கொள்வதை விட்டு அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் இனமோதலுக்கு தீர்வுகாண அர்ப்பணிப்புடன் தெற்குத் தலைமைகள் செயற்படவேண்டும்.

அவ்வாறு தெற்குத் தலைமைகள் செயற்படுமா? அல்லது யுத்தம் அரங்கேறுவதற்கு உதவப்போகின்றனவா? அதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ★

# புலிகளுக்கு காலம்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெர்னாண்டோ ஆகியோர் சகிதமே வண.மல்கம் ரஞ்சித் அன்றைய தினம் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தும் முனைப்பில் அரசுப்படைகள் தீவிரமாக இருப்பது குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்படாத போதிலும் பொதுவாக நாட்டின் போரியல் சூழ்நிலை குறித்து இரு தரப்பினரும் மேலோட்டமாக மனம்விட்டுப் பேசினர் எனத் தெரிகின்றது.

அமைதி முயற்சிகளைக் கைவிட்டு இராணுவ ரீதியில் தீர்வு காணவே இலங்கை அரசு விரும்புகின்றது என்பது தங்களுக்குத் தெளிவாகத் தெரியும் என்பதை இச்சந்திப்பில் பிரதிபலித்த தமிழ்ச்செல்வன், அரசின் இந்த போர்முனைப்புக்குப் புலிகள் அசைந்து கொடுக்கப்போவதேயில்லை என்பதையும் தெளிவுபடுத்தினார் என்று தெரிகிறது.

''அரசின் திட்டப்படி நடனமாட நாம் தயாரில்லை. எங்களுக்கென்று ஒரு தெளிவான நிகழ்ச்சி நிரல் உண்டு. அரசு இராணுவ வழியைத்தான் பற்றிப் பிடித்து நிற்குமானால் அதேவழியில் பதிலடிதர நாமும் தயார்'' - என்பதை மல்வம் ரஞ்சித்துக்குக் கோடிகாட்டிய தமிழ்ச்செல்வன் மற்றொரு குண்டையும் அங்கு தூக்கிப்போடத் தவறவில்லை.

''இலங்கையின் பதினைந்துவீத நிலப்பரப்புக்குள் புலிகளை அடக்கி, ஒடுக்கிவிட்டோம் என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் மமதையோடு பீற்றுகின்றார். புலிகளின் தலைவர்களைப் பிடித்து, கூண்டு ஒன்றுக்குள் அடைத்து, கொழும்புக்குக் கொண்டுவருவோம் என்றும் அவர் சூளுரைக்கின்றார். ஆனால், அதெல்லாம் நடக்காது. புலிகளின் அமைதியையும் பொறுமையையும் யாரும் புலிகளின் தோல்வியாகக் கருதிவிடக் கூடாது. நாங்கள் இழந்த இடங்களை ஆறுமாதங்களுக்குள் மீட்டுவிடுவோம்'' - என்று ஒரே போடாகப் போட்டிருக்கின்றார் தமிழ்செல்வன்.

ஆனால், அவரிடம் கேட்டறிந்த எந்த விடயத்தையும் திரும்ப அரசிடமோ, ஜனாதிபதியிடமோ வண.மல்கம் ரஞ்சித்தோ அல்லது அவருடன் சென்ற குழுவினரோ தெரியப்படுத்தாது விட்டாலும், அந்த விடயங்கள் எப்படியோ அரசுத் தரப்புக்கு 'லீக்' ஆகிவிட்டன என்று தெரிகிறது.

இவ்வளவு விஷயங்களுக்குப் பிறகும் புலிகள் அமைதிகாப்பதும், ஆரவாரம் பண்ணாமலும் இருப்பது ஏன்? தங்களிடம் தமக்கெனத் தனியான நிகழ்ச்சி நிரல் உண்டு என்று புலிகள் குறிப்பிடுகின்றார்களே இந்த நிகழ்ச்சி நிரல் என்ன? - இவையே கொழும்பை இன்று குடையும் கேள்விகள்.

கொழும்பு உட்படப் பிற இடங்களில் தங்களின் தாக்குதல் நடவடிக்கைகளை முற்றாகக் குறைத்து, சிவிலியன் இழப்புகளைத் தவிர்த்து, மனித உரிமை மீறல்களைக் கைவிட்டு, அசாதாரண அமைதிபேணும் புலிகள் குறித்து சர்வதேச மட்டத்தில் ஒருபுறத்தில் 'நல்ல பிள்ளைகள்' என்ற நற்பெயர் பரவ, மறுபுறம் இலங்கை அரசின் பெயர் 'ரிப்பேர்' ஆகிக் கொண்டிருக்கின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஆசிய மனித உரிமைகள் அமைப்பு, ஜெனிவா அழைப்பு அமைப்பு, சர்வதேச ஜூரர்கள் மன்றம் போன்ற சர்வதேச அமைப்புகளும் ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை மனித உரிமை மீறல் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கான சர்வதேச பிரமுகர்கள் குழு போன்றவையும் இலங்கை அரசின் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.

ஒருபுறத்தில் சர்வதேச மட்டத்தில் புலிகளின் பெயர் சீரடைந்து வர, இலங்கை அரசின் பெயர் சீர்கெட்டு வருகின்றது.

புலிகள் தமது கைவரிசையைக் காட்டுவதற்கு முன்னர் இத்தகைய சூழல் உருவாவது தமக்கு நல்லது என்றும் -

அத்தகைய சர்வதேச நிலைப்பாடு நிலவும் சமயத்தில் தங்கள் 'திருவிழா'வை கட்டவிழ்த்து விடுவதே பொருத்தமானது என்று புலிகள் கருதுகின்றனர் என்றும் தெரிகின்றது.

இவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது புலிகள் எதிர்பார்க்கும் காலம் கனிந்துவருவதாகவே தோன்றுகின்றது.

புயலுக்கு முந்திய அசாதாரண அமைதிக்கு முடிவுகாலம் கிட்டுவதாகவேபடுகின்றது.

# அன்வர் இஸ்மாயில்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் செய்து கொண்ட தேர்தல் உடன்படிக்கையின் பிரகாரமே அன்வர் இஸ்மாயில் தேசியப் பட்டியில் எம்.பியாக நியமனம் பெற்றிருந்தார்.

ஆகையினால் அந்த வெற்றிடத்திற்கு தேசிய முஸ்லிம் காங்கிரஸ் சிபார்சு செய்யும் ஒருவரையே எம்.பியாக நியமிக்க வேண்டும் எனவும் அதனை ஜனாதிபதி செய்வார் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாகவும் அக்கட்சியின் தலைவர் அமைச்சர் அதாவுல்லா கூறிவந்தார். அதேவேளை மர்ஹூம் அன்வரின் வெற்றிடத்திற்கு அவர் பிரதிநிதித்துவப்படுத்திய சம்மாந்துறைத் தொகுதியைச் சேர்ந்த ஒருவரையே நியமனம் செய்து தருமாறு கோரி சிலரின் பெயர்களை அப்பகுதி மக்கள் அமைச்சர் அதாவுல்லாவிடம் சமர்ப்பித்திருந்தனர்.

## பஸில் ராஜபக்ஷ நியமனம்

ஆனால் எல்லோரும் எதிர்பார்த்தது போலவே இவ்வெற்றிடத்துக்கு தனது சகோதரர்- சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமனம் செய்துள்ளார்.

இவ்வெற்றிடத்தை நிரப்பும் விடயத்தில் அமைச்சர் அதாவுல்லாவின் கருத்துகள் ஆலோசனைகள் எவையும் பெறப்படவில்லை எனவும் தனது சமூகம், கட்சி, மாவட்டம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு தன்னால் சிபார்சு செய்யப்படும் ஒருவரையே எம்.பியாக நியமிக்கவேண்டும் என்ற அவரது கோரிக்கை கணக்கில் எடுக்கப்படாமல் - முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பஸில் ராஜபக்ஷவை எம்.பியாக நியமிக்கும் விடயத்தில் மிகவும் அவசரம் காட்டப்பட்டு - அந்த நியமனம் துரிதமாக வழங்கப்பட்டிருக்கிறது. அதன் பேரில் அவர் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவ்வாறு முஸ்லிம் சமூகத்தினதும், அம்பாறை மாவட்டத்தினதும் பிரதிநிதித்துவம் பிடுங்கப்பட்டு- அதனைத் தம் வசப்படுத்திய ஜனாதிபதியின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையை தேசிய முஸ்லிம் கவுன்ஸில் வன்மையாகக் கண்டித்துள்ளது.

## பிரதிநிதித்துவம் பறிப்பு!

அதேவேளை அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் - குறிப்பாக சம்மாந்துறைத் தொகுதி மக்கள் - அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் மறைவுத் துயரத்தில் இருந்து மீள்வதற்கு முன்னரே பஸில் ராஜபக்ஷவின் நியமனச் செய்தி அவர்களைக் கடும் வேதனையடையச் செய்துள்ளது.

தேசிய காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர் அமைச்சர் அதாவுல்லாவும் தமக்கான பிரதி நிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள முடியாமல் - தவற விட்டமை அவர்களுக்குப் பெருத்த நஷ்டத்தையும், இழப்பையும் ஏற்படுத்தும் என முஸ்லிம் அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

பொதுவாக அன்வர் இஸ்மாயிலின் திடீர்மறைவு அமைச்சர் அதாவுல்லாவின் வாக்கு வங்கியில் சரிவை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது. விசேடமாக சம்மாந்துறைத் தொகுதி வாக்குகளை தேசிய காங்கிரஸ் முற்றாகத் தக்க வைத்துக் கொள்வ தென்பது முடியாத காரியமாகும் எனக் சுட்டிக்காட்டப்படுகிறது.

அதுவும் மர்ஹூம் அன்வர் இஸ்மாயிலின் இடத்திற்கு தேசிய காங்கிரஸ் சார்பில் ஒருவர் பதிலீடு செய்யப்படாமல்- அந்த ஆசனம் பறிகொடுக்கப்பட்டமையானது வாக்கு வங்கி வீழ்ச்சியை உறுதிப்படுத்தியுள்ளது எனலாம்.

மலையக மக்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார, கலை கலாசார, கல்வி மற்றும் இன்னோரன்ன அத்தியாவசிய பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**மலையகக் கண்ணோட்டம்**
**சுடர்ஒளி வார இதழ்**
இல. 85, ஜயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.




**தரம்-04 மாணவர்களுக்காக கடந்தவார சுடர்ஒளி வாரமலரில் வெளிவந்த படிமுறைப்பரீட்சை -02 இற்கான விடைக்குறிப்புக்கள்.**

ஆசிரியர்: சண்.சுதர்சன்(குறிஞ்சி வெளியீடு-கண்டி)

01. 1ஆம் வினாவில் எதிர்க்கருத்துள்ள பதங்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றை ஒத்த கருத்துள்ள சொற்களாகக் கருதவும்.
    01) வரிசை.
    02) காடு/வனம்/அடவி.
    03) பார்/உலகம்/வையகம்/தரணி/அகிலம்.
    04) பாத்திரம்.
    05) பட்சி/புள்.
02. 01) புத்தகம் + பை
    02) ஆடி + பாடி
    03) மூன்று + உலகம்
    04) கட்டி + அணைத்து
    05) கதிர் + ஒளி
03. 01) வளம்.
    02) நிரை.
    03) கலை.
    04) கறை.
    05) மலை.
04. பொருத்தமான வாக்கியங்கள்.
05. 01) கிரேக்கம்.
    02) தோமஸ் அல்வா எடிசன்.
    03) பேராதனை தாவரவியற் பூங்கா.
    04) அமெரிக்கா.
    05) லியனாடோ டாவின்சி.
06. 01) வினாத்தாளில் விடை இல்லை. (சரியான விடை 2/8)
    02) 4 03) 1 04) 3
    05) 2 06) 2 07) 1
    08) 2 09) 3 10) 2
07. 01) D 02) E 03) C 04) C
08. 01) தமிழ்-குதிரை, ஆங்கிலம்-Horse
    02) தமிழ்-மயில், ஆங்கிலம்-Peacock
    03) தமிழ்-பேருந்து, ஆங்கிலம்-Bus
    04) தமிழ்-முன்னால் சிறுவர் கடவை, ஆங்கிலம்-Children crossing
09. 01) Chair. 02) Teacher.
10. 01) கணினி. 02) பூ/மலர்.
11. ரூபா114.00, ரூபா84.00, ரூபா425.00, ரூபா21.00, ரூபா51.00
12. 01) 10m 22cm 02) 12km 175m 03) 112 04) 127
13. நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
    நமதுதி ஏல் தாயே
    நமதலை நினதடி மேல் வைத்தோமே
    நமதுயிரே தாயே - நம் ஸ்ரீலங்கா
    நமோ நமோ நமோ நமோ தாயே.

பாட்டி வந்தபோது அண்ணி பத்மா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அதுவரை அன்பாகப் பேசிக் கொண்டிருந்த அண்ணி, பாட்டி வந்ததும் கடுகடுவென




முகத்தை வைத்துக் கொண்டாள்.

''ஏய், ராதா! என்னடி இது சாம்பார்? செங்கல் பொடியை குழைச்சு வைச்ச மாதிரி? ரசமா இது? இல்லை கழுநீரா...? மாட்டுக்குப் போடுற மாதிரி இது என்ன வேகாத காய்கறி? என்ன நினைச்சுகிட்டு இருக்கே உன் மனசுல''

-இப்படி வரிசையாகக் குறை சொன்னாள். அவமானத்தில் திடுக்கிட்டுப் போனேன். அழுகையோடு எழுந்து அறைக்குப் போய்விட்டேன்.

''பாரவால்லே பத்மா, ராதாவை வைக்க வேண்டிய இடத்துல தான் வச்சிருக்கே. இல்லேன்னா உன்னை ஏய்க்க ஆரம்பிச்சுடுவா'' என்றாள் பாட்டி.

''ஆமாம் மாமி, நீங்க சொல்றதுதான் சரி'' என்றாள் அண்ணி. எனக்கு திக்கென்றது.

அப்பா- அம்மா இல்லாத என்னை அண்ணாதான் வளர்த்தான். அண்ணி பத்மா வந்த பிறகு தாயைப் போல் பார்த்துக் கொண்டாள். தனது தம்பிக்கே என்னை கல்யாணம் பண்ணி வைத்தாள்.

'இதுவரை கடிந்து பேசாத அண்ணி, இன்று இவ்வளவு கேவலமாகப் பேசி விட்டாளே' என கலங்கினேன்.

பாட்டி போனதும் அண்ணி உள்ளே வந்தாள். ''ராதா, என்னை மன்னிச்சுடு. பாட்டி பொல்லாதவ. சனிப்பார்வை அவளுக்கு. யாரும் ஒற்றுமையா இருப்பது அவளுக்குப் பிடிக்காது. குடும்பத்தைக் கெடுப்பாள். அதனால்தான் அவளுக்கு முன்னால உன்னை திட்டுறமாதிரி நடிச்சேன்.'' என்றாள் அண்ணி.

''அண்ணி'' என அவளை அணைத்துக் கொண்டேன்.

# கைலாசபதி+சில்லையூர் செல்வராசன்

## ஒரு விமர்சன நோக்கு



அ.முகம்மது சமீம் பேராதனை பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறையில் விசேட பட்டம் பெற்றவர். கொழும்பு சாஹிராக் கல்லூரியில் உதவி அதிபராகப் பணியாற்றி பின்னர் கல்வி இலாகாவில் வித்தியாதாரியாகச் சேர்ந்து முதலாம்தர கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றார். 1980 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்று சவூதி அரேபியாவில் தனியார் பாடசாலையொன்றின் பணிப்பாளராகக் கடமையாற்றினார். தற்சமயம் சர்வதேசப் பாடசாலை ஒன்றை நடத்திவருகிறார்.

அவர் எழுதிய நான்கு பாகங்களைக் கொண்ட 'ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினை' என்ற நூல் சாகித்திய அகாடமி விருதினைப் பெற்றது.




வரலாற்றாசிரியர் அ.முகம்மது சமீம் எழுதிய 'கைலாசபதி+சில்லையூர் செல்வராசன் விமர்சன நோக்கு' நூலின் வெளியீட்டு விழாவும், கருத்தரங்கும் 16-09-2007 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு - 6 தர்மராமா வீதியில் அமைந்துள்ள பெண்களுக்கான கல்வி ஆய்வு நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளின் முன்னாள் பிரதம ஆசிரியரும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதிப்பணிப்பாளருமான ஆ.சிவநேசச்செல்வன், பேராசிரியர் தில்லைநாதன் ஆகியோர் உரையாற்றினர். சபையோர் கருத்தின்போது கொழுந்து சஞ்சிகை ஆசிரியர் அந்தனி ஜீவா, இந்துகலாசார திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சண்முகலிங்கம் ஆகியோர் கருத்துகளை முன்வைத்தனர்.

'கைலாசபதி முன்னுரைகள்'- ஒரு விளக்கம் கைலாசபதியின் மார்க்சியப் பார்வை, 'தேசிய இலக்கியம்' இனப்புரிந்துணர்வுக்கு முற்போக்காளர் முன்வைத்த யோசனை, கைலாசபதி: மார்க்சியமும் இலக்கியமும், கைலாசபதியும் முற்போக்கு இயக்கமும், கைலாசபதியின் பார்வையில் கலை-இலக்கியம், கைலாசபதியும் முற்போக்கு இலக்கியமும், கைலாசபதியின் 'வீரயுகம்' பற்றிய ஓர் ஆய்வு ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் உள்ளடக்கமாகியுள்ளன.

கைலாசபதியும் சில்லையூர் செல்வராசனும் தனக்கு நெருக்கமான நண்பர்கள் என குறிப்பிடும் நூலாசிரியர், கைலாசபதியும் தாமும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பக்கத்து பக்கத்து ஆசனங்களில் அமர்ந்து கல்வி கற்றவர்கள் என தமது கடந்த கால வரலாற்றை நினைவுகூர்ந்து தாம் தமிழ் எழுத்தாளனாக வளர்ந்ததற்கு முக்கிய காரணம் பேராசிரியர் கைலாசபதியே என்று உவகையுடன் குறிப்பிடுகின்றார்.

தாம் நெருங்கிப் பழகிய நண்பர்களில் இன்னொருவர் சில்லையூர் செல்வராசன் என்கிறார். காளமேகர் போல் அவருக்கு கவிதை இயல்பாக வரும் என்பது நூலாசிரியரின் கூற்று. அதற்குப் பல உதாரணங்களைச் சொல்கிறார். ஒருபோது ஷெல்லியின் கவிதை ஒன்றுக்குத் தமிழில் கவிதை வரையமுடியுமா என்று கேட்டபோது உடனே சில்லையூர்

**'எண்ணப் பெருவெளியில்**
**எட்டாத தொலைவினிலே**
**வண்ணக் கனவுகளை**
**வனைந்தலையும் என் ஆத்மா**
**சஞ்சரிக்க, அங்கோர் சமயம்**
**எதிர்பட்டேன்.**
**நெஞ்சலைத்ததோர் பிறவி**
**நிலவைத் துகிலுடுத்த**
**பெண்ணுருவின் சாயலுக்குப்**
**பின்னமைந்த**
**மென்மையெல்லாம்**
**ஒன்னுவதோ மானிடர்க்கு?**
**உற்ற அவள் தெய்வமகள்!**

என்று பாடினார் என விவரிக்கின்றன சமீமின் நினைவலைகள்.

''இந்நூலின் இரு கதாநாயகர்களும் என் உடன்பிறவாச் சகோதரர்கள். அவர்களுடைய படைப்புகளை நான் இரசித்து படித்ததுண்டு. அவை குறித்து எழுதுவதில் எனக்கு மகிழ்ச்சி'' என்கிறார் சமீம்.


பேராசிரியர் கைலாசபதியையும், கவிஞர் சில்லையூர் செல்வராசனையும் சமீம் எவ்வாறு வெளிக்கொணர்கின்றார் என ஆ.சிவநேசச்செல்வன் விவரிக்கையில் தெளிவாகத் தொட்டுக் காண்பிக்கின்றார்.

கைலாசபதி என்ற ஆய்வாளனின் எழுச்சியையும் வளர்ச்சியையும் அவரின் சிந்தனைத் தடங்கள் வளர்ந்த விதத்தை நாட்டு வரலாற்றுப் போக்கோடும் மட்டுமல்ல உலகளாவிய சிந்தனைப் போக்கோடும் இணைத்து காணமுற்படுகின்றார். இலங்கையிலே முற்போக்கு எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல இலக்கிய மரபிற்கே எவ்வாறு கைலாசபதி ஒரு கலங்கரை விளக்காக வெளிப்பட்டார் என்பதைச் சமீம் விரிவாகத் தொட்டுக்காட்டியுள்ளார்.

சில்லையூர் செல்வராசனின் பன்முகச் சிந்தனைகளை வெளிக்கொணரும் வகையிலே இத்தொகுதியிலே உள்ள ஒவ்வொரு கட்டுரையும் கவிஞரின் பல்வேறு பரிமாணங் களையும் வெளிப்படுத்துவனவாக முகம்மது சமீம் எழுதியுள்ளார் என்றும் சிவநேசச் செல்வன் தனது கூற்றில் வெளிப்படுத்துகின்றார்.

பேராசிரியர் தில்லைநாதன் தமதுரையின் போது இவ்விரு கதாநாயகர்கள் சம்பந்தமாக கடந்தகால நிகழ்வுகள் பலவற்றை நினைவுகூர்ந்தார்.

இந்நாட்டு இலக்கிய




வரலாற்றுடன் எழுத்தாளர்களுடன் பின்னிப் பிணைந்து ஓர் இணையத்தள வலைப்பின்னலாக அமைந்துள்ள கலாசார அமைப்புகளின் ஊசலாட்டத்தனங்கள், பத்திரிகையாளர் கழுத்தறுப்புச் சமாசாரங்கள் போன்ற விவகாரங்கள் இன்றல்ல என்றோ வேர் பாய்ச்சி துளிர்விட்டவை என்பதை வாசிப்பதற்கு பேராசிரியரின் உரை வழிவகுத்தன.

இத்தகைய கடந்தகால இலக்கிய வரலாற்றினை இளைய தலை முறைக்கு வகைப்படுத்திக் கொடுத்தல் அவசியம். கலாசார விழாவின்போது முட்டை அடி சம்பவம் இடம்பெற்ற விவகாரத்தின் பின்னால் கூட இருமுரண்பட்ட சக்திகளின் போராட்டம் அடங்கியிருத்தலை வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்தல் வேண்டும். அத்தகைய வரலாற்றுப் பதிவு இன்றும் பதியப்படாதது பெருங்குறையே. அங்கொன்றும் இங்கொன்றுமாக உதிரியான மேடைப் பிரசங்கங்களால் அவற்றை ஆவணப்படுத்த முடியாது.

கொழுந்து சஞ்சிகை ஆசிரியர் அந்தனி ஜீவா இத்தகைய வரலாற்றுப் பதிவுகள் குறித்துப் பேசியபோது ''வரலாற்றுப் பதிவுகள் ஒழுங்கான, உண்மையான பதிவுகளாக இருக்கவேண்டும் இடைச் செருகல்கள், திரிபுகள் கூடாது'' என்றார்.

இந்துகலாசார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் சண்முகலிங்கம் சமீமின் நூல் குறித்து ''கைலாசபதி போன்ற ஓர் இலக்கிய ஆய்வாளர் குறித்த பூரணமான தகவல்களடங்கிய ஒரு நூலின் அவசியப்பாடுள்ளது. அத்தகைய முன்னெடுப்பில் சமீம் காலடி பதிப்பது பாராட்டுக்குரியது. அதேவேளை இந்திய சாகித்திய அகாடெமி மிகவும் நல்ல முறையில் வரலாற்று தகவல்கள் பலவற்றுடன் கனதியான நூலொன்றினை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சியானது'' என்றும் தெரிவித்தார்.

நூலாசிரியர் சமீம் தமது நன்றியுரையின் போது முற்போக்கு எழுத்தாளர் சங்கம், அதன் பின்னணி என்பவற்றை விவரிக்கும் வகையில் அன்றைய காலத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களை நினைவுபடுத்தினார். குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் இலக்கிய விழாவில் இடம்பெற்ற முட்டையடி சம்பவம் பற்றிக் குறிப்பிட்டார்.

''இச்சம்பவத்துக்கும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கும் தொடர்பு இல்லை. கலாசார அமைச்சில் பண்டிதர் சதாசிவம் போன்றவர் களின் கைஓங்கியிருந்த காலம் அது அவர்களின் ஒருதலைப்பட்சமான சில போக்குகளை விவரிக்கமுற்பட்டவேளையிலே முட்டை அடி சம்பவம் நிகழ்ந்தது''.

நூல் வெளியீட்டு விழாவொன்றில் கடந்தகால இலக்கிய நிகழ்வுகள் சில நினைவை மீட்டுவதாக அமைந்ததும் பாராட்டுக்குரியதே. இலங்கை முற்போக்கு கலை இலக்கிய பேரவை நூலை வெளியிட்டுள்ளது. தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவா சுப்பிரமணியம் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

**-கே.வி-**



# ஸ்ரீமான் சஞ்சாரி

## சிறுகதை ஓர் இலக்கியமா? பண்டிதர் கலாட்டா!

''பத்திகையாளருக்கு விரோதமா மொட்டைக் கடதாசி போடுரது, அவாள் வவுத்துலே அடிக்கிறது, தொழிலுக்கு உலை வைக்கிறது, ஓய்! நீர் என்னைப் பத்தியா எழுதுனீர்? உம்மை தெருவுலே நிக்க வைக்கறேன் என்று சவால் விடுரது மாதுரி சமாச்சாரம் எல்லாம் இப்பதான் தலை தூக்குதுன்னு நெனைக்கிறேலா, அதுவெல்லாம் எப்பவோ அவதாரம் எடுத்துட்டுவே...!!''

''ஈஸ்வரா!''

''சும்மா சொல்லப்படாது. நம்ம நவீன இலக்கியக்காரர் நன்னாவே சண்டை போட்டிருக்கா''

''யாரோட?''

''நம்ம பண்டிதர் கூட்டத்தோட''

''எதுக்காக?''

''அட, என்னவே நீர் நம்ம நவீன இலக்கியத்தை காப்பாத்தத்தான்''

''ஈஸ்வரா! சண்டைன்னவும் நெஞ்சு கலங்கி போட்டுதுண்ணா!''

''இருக்காதா பின்னே-ஆனா பயப்பிடுர அளவுக்கு ஒன்னும் பல் குழல் எறிகணை தாக்குதல் இல்லை. வெறும் முட்டையடி மட்டும்தான்.''

''என்ன சொல்றேள்?''

''கல்விமான் அ.முகம்மது சமீம் ஒரு புத்தகம் வெளியிட்டார். அங்கே பேசுன நம்ம பேராசிரியர் தில்லைநாதன் பழைய இலக்கிய சமாச்சாரமெல்லாம் சொன்னார் அப்ப சொன்னது தான் இது''

''அடடா சொல்லுங்கோவன்''

''இதோ பாருங்கோ மகாபாரதம், ராமாயணம் மாதுரியெல்லாம் இதுகளை சொல்லியிண்டு இருக்கேலாது. ஏன்னா அவாள் எல்லாம் இதுகளை ஒரு வரலாற்றுப் பதிவாக்காமல் மேடைக்கு மேடை சும்மா உதிரியா சொல்லிண்டு இருக்கா.''

''அட, அநியாயமோ''

''அநியாயம் தான், என்ன பண்றது. நம்ம காதாலே கேட்டதை நாமாவது பதிய வைப்போமே''

''சொல்லுங்கோ! சொல்லுங்கோ.''

''நவீன இலக்கிய வடிவங்க்ளை நம்ம பண்டிதர்வாலெல்லாம் ஒதுக்கி வந்த காலம். அவாளோட நம்ம புதிய பரம்பரை இலக்கியச் சமர் பண்ணிண்டிருந்தது. அரச மட்ட கலைப்பிரிவிலே பண்டிதர் சதாசிவனார் ருத்ரதாண்டவமாடிக் கொண்டிருந்தார். இலக்கிய விழாவிலே முட்டையடி சமாசாரமெல்லாம் அப்பதான் நடந்தது. நம்ம கல்விமான் தில்லைநாதன் இருக்காரே அவர் அப்போ வாவிக்கரை பத்திரிகையிலே தொழில் பண்ணிண்டு இருந்தார். நம்ம பண்டிதர் சமாசாரமொன்றை பத்திரிகையிலே அவர் வரச் செய்துபோட்டார். கேட்கவா வேணும். தொழிலுக்கே உலைவைக்கும் விதமாக பெட்டிசன் பறந்துது. ஹலோ! இஞ்சவாரும் என்று வாவிக்கரை பெருமகனார் இவருக்கு அழைப்பாணை விடுத்து.''

'ஹலோ! என்ன இது' என சாடி விழுந்தார். நம்ம கல்விமான் யோசனை பண்ணினார். மெதுவாகக் கேட்டார்.

'சேர் சிறுகதை ஓர் இலக்கியமோ இல்லையோ?'

'ஆர் சொன்னது?'

'இவர்தான் அந்தப் பண்டிதர்' என்று இவர் பதில் சொல்ல, 'வட்' என்று எகிறி விழுந்த அவர் 'யு கோ.. கோ..' என்று கத்தி அனுப்பிப் போட்டார். தொழில் தப்பிப் பிழைத்தது''.

''ஈஸ்வரா ...! ஈஸ்வரா...!''

## சிற்றேடுகள் கவர்ச்சிக் கோலம் பூணலாமோ?

''எளிமையாகவும் தன்னடக்கமாகவும் இருப்பது பெரிய சாதனையாகும். காந்தியடிகளின் கதர் இதற்கு முன்னுதாரணமாகும் என்று எங்களிண்ட மல்லிகை சஞ்சிகை ஆசிரியர் ஜீவா அண்ணே தலையங்கம் தீட்டியிருக்கிறார் படிச்சியலே!''

''ஓமோம்! ஓமோம்! படிச்சனான். எங்களிண்ட புதிய சஞ்சிகைக்காரர் ஒருத்தரிடம் இதை கதைக்கப்போய் வாங்கிக் கட்டிக் கொண்டனான்.''

''அவர் என்னவாம்?''

''உதென்ன பத்தாம் பசளிக்கதை இந்த மாதுரி காலத்துக்கு பொருத்தமில்லாத கதைகளை இன்னும் எத்துனைக் காலத்துக்குத்தான் நீட்டி முழங்கிக் கொண்டு கிடக்கிறது. காலத்தோடு ஒழுக வேண்டாமோ? சிற்றேடுகளும் கவர்ச்சியா வரவேண்டும் என்று சொல்லி எகிறிப் பாஞ்சு போட்டார்.''

''அடடா''

''அவர் சொல்லுரதுலேயும் யதார்த்தம் இருக்கத்தான் செய்யுது''

''என்ன பெரிய யதார்த்தத்தைக் கண்டு போட்டியள்? சிற்றேடுகள் கவர்ச்சியாக வரலாமோ?''

''மோனே! ' கவர்ச்சி அழகாகத்தான் இருக்கும், ஆனால் ஆழமாக இருக்காது. சினிமா நடிகைகளைப் போல பார்த்து ரசிக்கலாமே தவிர, படம் போட்டு வீட்டுச் சுவரில் தொங்க விட இலாயக்கற்றதாகும்.' என்றல்லோ ஜீவா அண்ணே சொல்றார்.''

''ஓமோம்! ஓமோம்! அடிச்சுச் சொல்லுவன். அது சரிதானே.''

''நல்ல பகிடிதான். வீட்டுச் சுவர்களிலெல்லாம் தொங்குறது நடிங்கைகளிண்ட படங்கள் தானே! உன்ட வீட்டிலே என்டாலும் என்ட வீட்டில என்டாலும் உதுதானே எதார்த்தம்.''

''கிழிஞ்சுது போ. அம்மான் எங்கே நிக்குரியல் என்ட வீட்டுலே காந்தியின்ட படம்தான் தொங்குது.''

''அது சரி அப்பு. நீ காந்தி பக்தன். அவரை தொங்க விட்டிருக்கிறாய். இல்லையென்று சொல்லேல்லை. ஆனால் அந்த கலண்டரிலே கண்ணை சுண்டி இழுக்குற பள பளப்பான மினு மினுப்பான தாளுளே, வர்ணக் கலரிலே அல்லோ காந்தி மகான் பொக்கை வாய் திறந்து சிரிச்சுக்கொண்டிருக்கிறார். 10வருடத்துக்கு முந்தியிருந்த காந்தி கலண்டருக்கும், இப்பத்தை காந்தி கலண்டருக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கு கண்டியா மோனே...''

''என்ட தம்புரானே! அப்ப அம்மானும் இந்த கவர்ச்சிக்கு கை தூக்குறியல் என்று சொல்லுங்கோ.''

''அப்பு, அது இல்லேடா. எங்களின்ட கவர்ச்சி. சஞ்சிகைக்காரர் இப்படித் தான் வாதாட்டம் செய்யுராங்கள்''

''என்ன சொல்லுறியல்?''

''கவர்ச்சி வேறாம். அழகு வேறாம்.''

''அடி சக்கை''

''நவீன கண்டு பிடிப்புக்களை சினிமாக்காரர் கவர்ச்சிக்கு பயன் படுத்துகிற நேரத்துல அதற்குப் போட்டியாய் நாம் சமூக விசயத்தை ஆழமாகச் சொல்ல இதுகளை பயன்படுத்த வேண்டும். கவர்ச்சிக்காரர் என்ட அடைமொழிக்குள்ள மட்டும் சினிமாக்காரரை புகுத்திப் போடக் கூடாது. இந்த டிஸ்கவரி செனல்களை பார்க்கிற பழக்கம் இருக்கோ அப்பு? சா! பார்த்தால் அல்லோ தெரியும். இந்த கமராக்கள் எவ்வளவு அற்புதமாக ஜீவராசிகளின்ட வாழ்க்கையைச் சொல்லுது என்று.''

''அது வேற இதுவேற அம்மான்.''

''எல்லாம் ஒன்றுதான் கண்டியோ. காந்தி மகான் கைத்தறியோட காலத்தை ஓட்டி நவீன இயந்திரயுகத்தை பின்னுக்குத் தள்ளப் பார்த்தவர். முடிஞ்சுதோ. நாங்களும் சிற்றேடுகள் விசயத்துலே இப்புடி இருக்கப்படாது.''

''கதிரைமலையானே! எங்கேதான் போய் முட்டுரது?''

''நல்ல பகிடி. பழைய கொள்கைச் சுவற்றோடுதான்''

''என்ட தம்புரானே!''

# அன்பே! உன் உயிரைத் தேடி

நீதியரசர் கிறிஸ்தோபர், முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்பாக உட்கார்ந்திருந்தார். பெரிய அந்த கண்ணாடியில் அவர் உருவம் முழுவதும் தெரிந்தது.

வட்டமான முகம். ஆனால் வழுக்கைத் தலை. பாலைவனத்தில் இரண்டு மூன்று புற்கள் தலைதூக்கி நிற்பது போல் இரண்டொரு கேசங்கள் ரொம்பவும் ஆரோக்கியமாக நீண்டிருந்தன.

'ஏன், அப்படி?'

கிறிஸ்தோபர் தன்னைத்தானே துக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

'தலை முழுவதும் கேசமாக இருந்தால் அடடா நான் எவ்வளவு அழகாக இருப்பேன் என்று அவர் வாய்விட்டே சொல்லிக் கொண்டார். அவ்வளவு துக்கம் அவருக்கு ஏற்பட்டிருந்தது.

'60 வயதாகிறது. இன்னும் பெண்கள் - அதிலும் இளம் பெண்கள் - விரும்பும் அளவுக்கு ஆரோக்கியமாகவும், அழகாகவும் இருக்கிறேன்.' என்று கண்ணாடியைப் பார்த்தும் அதில் தெரியும் தன்னுடைய வழுக்கைத் தலையைப் பார்த்து நக்கலாக



கண் சிமிட்டினார்.

''டார்லிங்! இன்னைக்கு என்ன புரோகிராம்? ரொம்பவும் குஷாலாக இருக்கிறீர்கள்''

திருமதி கிறிஸ்தோபரின் குரல் கீழிருந்து மேல்மாடிக்கு தாவிச் சென்றது.

கிறிஸ்தோபர் சுதாரித்துக் கொண்டார்.

'சனியன்' கண்டுட்டுது போலிருக்கே' என்று முணுமுணுத்துக் கொண்டு ''ஒன்றுமில்லை டார்லிங் ஒன்றுமில்லை '' என்று பதில் குரல் கொடுத்தார்.

''இல்லியே! சீட்டிகை ரொம்பவும் உற்சாகமாவிருக்கு, அதிக நேரம் கண்ணாடி முன் அமர்ந்து தனியாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். என்ன விஷயம்?''

''ஓ டார்லிங், சொல்ல மறந்திட்டேன். இன்னைக்கு ஒரு முக்கியமான மாநாடு. அதற்கு தயார் பண்ணிக் கொண்டிருக்கிறேன். ''

திருமதி கிறிஸ்தோபர் தள்ளாடித் தள்ளாடி மாடியேறி அறைக்குள் நுழைந்து விட்டார்.

''ஐயோ டார்லிங்! நானும் வருகிறேன்.''

''நோ! நோ! இதுவொரு வழக்கு சம்பந்தமான இரகசிய மாநாடு.''

''அப்படி என்ன இரகசியம்?''

''மண்டு! மண்டு அதை சொல்ல முடியும் என்றால் அது எப்படி இரகசிய மாநாடாகும்.''

''ஓ! யெஸ்!.. யெஸ்''

''மை சுவீட், தங்யூ, நீ எதையும் சட்டென்று புரிந்து கொள்வாய்''

கிறிஸ்தோபர் மனைவியைப் பாராட்டினார்.




''இந்த மாநாட்டுலே சம்பந்தப்பட்டவங்களைத் தவிர வேறுயாரும் கலந்து கொள்ள முடியாது.''

''ஆமா! ஆமா! அது நெசம் தானே. ஆமா எங்கே நடக்கிது.?''

''நியூ எம்பீரியல் ஹோட்டல்''

''ஜீசஸ்! பீச் ஹோட்டல். ரொம்பவும் நல்ல இடமாயிற்றே''

''உம்...''

''அது சரி, யாரெல்லாம் கலந்து கொள்கிறார்கள்?''

எதிர்பாராத விதமாக கேட்கப்பட்ட அந்தக் கேள்வியால் கிறிஸ்தோபர் கொஞ்சம் தடுமாறிப் போய்விட்டார். இந்த சனியன் இப்படித் தான் எதையாவது கேட்டுக் கேட்டு மனுஷனை அப்செட் ஆக்கிப் போடுவாள் என்று மனதிற்குள்ளாகவே திட்டித் தீர்த்த கிறிஸ்தோபர், ஜ.ஜி.பி. ஒரு சோர்ஜன். இப்படி வாய்க்கு வந்தவைகளை எல்லாம் சொல்லிக் கொண்டே போனார்.

அருமைக் கணவர் சும்மா புழுகித் தள்ளிக் கொண்டிருக்கிறார் என்பதை பாவம் திருமதி கிறிஸ்தோபர் அறியவில்லை. தனது கணவரை மாபெரும் ஞானியாகவும், மகா ஒழுக்க சீலராகவும் அவள் எண்ணிக் கொண்டிருக்கிறாள்.

ஆனால் இந்த நீதியரசர் மகாபெரும் மன்மதன். வயதென்னவோ 60ஆகிவிட்ட போதும் அவருடைய மன்மத லீலைகள் அரங்கேறிய வண்ணம் இருந்தன.

மாதத்துக்கு இருமுறை எப்படியாவது இரு இளம் பெண்களுடன் ஹோட்டல்களில் சுற்றித் திரிவார். அதுவும் தனது இல்லத்திலிருந்து வெகு தொலைவுக்கு அழைத்துச் சென்று இந்த சரச சல்லாபங்கள் நடைபெறும்.

இன்றைய அதிசயம் என்னவென்றால் ஒருவரின் உதவியும் இன்றி ஒரு பறவை அவரை தேடி வந்தது.

''ஹலோ சேர்''

விடியற் காலையிலே அவருடைய மொபைலில் ஓர் அழைப்போசை. ஓர் இளங்குயிலின் மென்மையான குரல்.

''யெஸ்''

''இன்று நாள் எப்படி?''

''ஒரு அப்பொயின்மென்டும் இல்லை.''

''ஐ ஆம் லக்கி'' (நான் அதிர்ஷடக்காரி)

''கிலாட் டு மீட் யூ'' (உன்னைச் சந்திப்பதில் மகிழ்ச்சி)

''எங்கே?''

''நியூ எம்பீரியல் பீச் ஹோட்டல்''

''ஓ! வெரி எக்ஸ்பென்சிவ்''(அதிக செலவாகுமே)

''அந்த கவலையே உங்களுக்கு வேண்டாம்''

''அதொன்றும் எனக்கு பெரிய விசயம் இல்லை.''

''அப்படிச் சொல்லாதீர்கள். ஏன் என்று கேளுங்கள்!''

''அப்படியா? ஏன்?''

''செலவு என்னுடையது''

நீதியரசர் வாய் பிளந்தார். ''என்னது செலவு உன் பொறுப்பா?'' என்று கத்தியே கேட்டார்.

அந்த கத்தலே திருமதி கிறிஸ் தோபரை விழிக்கச் செய்தது.

உடனே நீதியரசர் சுதாரித்துக் கொண்டார்.

''அவ்வளவு வசதி உனக்கு உண்டா?'' என்று கிசுகிசுப்பது போலக் கேட்டார்.

''இல்லை. அது உங்கள் ஆண்மைக்கு நான் கொடுக்கும் சன்மானம்.''

''அது உனக்கு எப்படித் தெரியும்?''

''கண்டேன்! கண்டேன்!''

''கண்டியா?''

நீதியரசர் திகைப்போடு கேட்டார். அதைத் தொடர்ந்து இளம் பெண்ணிடமிருந்து தொலைபேசியில் ஒலித்த மென்மையான, கவர்ச்சியான மோகம் நிறைந்த பதில் அவரை வெலவெலக்கச் செய்தது. போனமாதம், ரிட்ஸ் ஹோட்டலில், நான்காம் மாடியில் 28அம் இலக்க அறையில்...''

நீதியரசரின் உடலில் புல்லரிப்பு ஏற்பட்டது. சிலிர்ப்பால் அங்கமெல்லாம் நடுங்கியது.

''என்ன சொல்கிறாய்?'' என்று நடுக்கமுடன் கேட்டார். இவள் ஒரு பிளாக்மெயில் காரியாக இருப்பாளா என்ற திகில் அவரை கவ்விப் பிடித்துக் கொண்டது.

''சரி, அந்த அறையில் என்ன கண்டாய்?'' படபடப்புடன் கேட்டார்.

''உங்களின் அற்புதமான ஆலிங்கனத்தை''

''என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை மன்மதா. ஓர் இளம் பெண்ணுடன் இளம் மஞ்சள் வெளிச்சத்தில், நிர்வாணக் கோலத்தில் உன்னுடைய ஆண்மையின் அட்டகாசத்தைக் கண்டேன். மெய் மறந்து போனேன். அதனால் தான் இந்த அழைப்பு.''

நீதியரசருக்கு திகைப்பினால் மூச்சே அடைக்கும் போலிருந்தது. அவள் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆனால் அவள் குறிப்பிடுகின்ற அந்த லீலா விநோதம் தம் கதவுகள் பூட்டிய அறைக்குள் அல்லவா இடம் பெற்றது! இவள் பார்த்ததாகச் சொல்கிறாளே! இதென்னடா பயங்கரம் என்று நீதியரசர் நடுங்கினார்.

''ஆமாம்! நீ எப்படி கண்டாய்?''

அவள் மென்மையாகச் சிரிப்பது கேட்டது.

''என்னைக் கண்டால் உங்களுக்கு நினைவு வரும். அந்த ஹோட்டலில் நான் ரூம் மேட்ஸ்ஸாக வேலை செய்கிறேன். அடிக்கடி உங்கள் அறைக்கு வந்தேன். ஆனால் நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.''

''சரி, அது கிடக்கட்டும். எப்படி என் திரு விளை யாடலைக் கண் டாய்.''

''ரி.வியில்''

''என்னது''

''ஆமாம் ஒவ்வொரு அறையிலும் ரகசியக் கமராக்கள் பொருத் தப்பட்டிருக்கின்றன. அவற்றை இயக்கி உங்கள் சல்லாபங்களை வெகுவாக இரசித்தேன்.

நீதியரசர் உண்மையிலே வெலவெலத்துப் போனார். அவருக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. பெரும் வெட்கமும் ஏற்பட்டது. எத்தனைபேர் கூடி நின்று கொண்டு தன்னுடைய நிர்வாண நாடகத்தைப் பார்த்து கெக்கலிட்டுச் சிரித்துக் கொண்டிருப்பார்களோ என்று கலக்கியடித்தது. மனுஷன் கொஞ்ச நேரம் ஊமையாகிப் போனார்.

இயற்கையாகவே ஆண்மைக் குறைவு இல்லாத ஒரு மிருகப் படைப்புத்தான் இந்த கல்விமான். சில வேளைகளில் வயாக்ராபோன்ற போதைப் பொருள்களையும் ஆசாமி போட்டுக் கொள்வார். அந்த நேரங்களிலெல்லாம் அட பூட்டிய அறை தானே என்ற தைரியமுடன் ரொம்பவும் கீழ்த்தரமாகவும் நடந்து கொள்வார். ரிட்ஸ் ஹோட்டல் சல்லாபமும் அப்படிப்பட்ட ஒன்றுதான் என்பது அவர் நினைவுக்கு வந்தது. அப்போது ஓர் ஆறுதலான வார்த்தையை அவள் சொன்னாள்.

''கவலைப்படாதீர்கள் சேர். நான் தனிமையில் தான் அதைப் பார்த்தேன். வேறு யாரும் என்னுடன் இருக்கவில்லை. வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். நான் கன்னி கழியாதவள். வாழ்வில் உங்களைப் போன்ற ஒரு வீரியமுள்ள மனிதனோடு மோகத்தை அனுபவித்துவிட்டு செத்துப் போக வேண்டும் என்பதுதான் எனக்குள்ள ஒரே ஆசை. அதற்குத்தான் ஹனிமூன் ஏற்பாடு.''

கிறிஸ்தோபரால் இந்த மந்திர வார்த்தைகளை ஜீரணிக்க முடியவில்லை. மயக்கம் வரும் போலிருந்தது. தலை சுற்றியது. என்னதான் என்றாலும் தளர்ந்துவிட்ட தன தசைக்கோலமெல்லாம் இறுகிவிட்டதைப் போலவும் மளமளவென தனது வயதெல்லாம் உருகி வழிந்து கரைந்து ஒழுகிச் சென்று விட, தான் இருபது வயதேயான, ஓர் ஆரோக்கியமான தசையெல்லாம் முறுக்கேறிய



ஒருவாலிபனாக கம்பீரமுடன் நிற்பதாகவும் உணர்ந்தார்.

''டார்லிங்! என்ன யோசனை? என்ன இவ்வளவு பெரிய டிஸ்கஷன்? யார் அடுத்த பக்கம். கொஞ்சம் போனைத் தாருங்கள்?'' என்ற திருமதியின் குரல் காதில் விழவும் அதைக் கேட்காதவர் போல சட்டென போனை வைத்து விட்டார்.

ஆயிரம் கூத்து போட்டாலும் மனுஷன் மனைவிக்கு கொஞ்சம் மரியாதை வைத்திருந்தார். அதனை தன் மீது கணவர் கொண்டுள்ள மாபெரும் காதலாக திருமதி கிறிஸ்தோபர் பெருமையுடன் சொல்லிக் கொள்வார்.

(35 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பக்கம்

## முல்லாவின் அழுகை



முல்லாவிடம் ஒரு கோவேறு கழுதை இருந்தது. எங்கே போக வேண்டு மானாலும் அந்தக் கழுதை மீதுதான் பயணம் போவார் முல்லா.

திடீரென ஒருநாள் அந்தக் கோவேறு கழுதை இறந்து விட்டது. கழுதையின் இறப்பை தாங்கமுடியாத முல்லா 'கோ'வென கதறி அழுதார்.

முல்லாவின் திடீர் அழுகுரல் அக்கம் பக்கத்தவரை அவர் வீட்டுக்கு முன்பாக வரழைத்தது. அவர்கள் மூலம் தகவல் தெரிந்து கொண்ட முல்லாவின் நண்பர்களும் ஓடோடி வந்தார்கள்.

இறந்தது முல்லாவின் கழுதை என்ற நினைப்பே யாருக்கும் தோன்றாதபடி முல்லாவின் அழுகை இருந்தது. அவர் மனைவி இறந்த போது எப்படி அழு தாரோ, அதே அழுகை. நண்பர்கள் முல்லாவின் அழுகையை நிறுத்தப் பார்த்தார்கள், முடியவில்லை.

சிலர் கோவேறு கழுதைமீது முல்லா வைத்திருந்த பாசத்தைப் பார்த்து நெகிழ்ந்தனர்.

'மனிதன் என்றால் இப்படியல்லாவா இருக்க வேண்டும்' என்று கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டனர்.

கழுதையை தூக்கிப் போக ஆள் வந்தாயிற்று. இப்போது முல்லாவின் அழுகை இன்னும் கூடிற்று.

நண்பர்கள் முல்லாவை தேற்றினார்கள். "முல்லாவே கழுதை போனால் போகிறது. கவலையை விடுங்கள். அதற்காக மிகவும் வருந்தி உடம்பை கெடுத்துக் கொள்ளாதீர்கள். " என்றனர்.

"கழுதை இறந்த அதிர்ச்சியில் நான் கொஞ்ச நேரம் அழுதது உண்மை தான். ஆனால் இப்போது கழுதைக்காக அழவில்லை. உங்களுக்காக அழுகின்றேன்." என்றார் முல்லா.

"எங்களுக்காக அழுகிறீர்களா... எதற்கு... ஏன்?" என்ற கேட்டார்கள் படபடப் பாய், நண்பர்கள்.

"என் மனைவி இறந்தபோது நீங்கள் எல்லோரும் என்னை எப்படி ஆறுதல் படுத்தினீர்கள்?"

"நினைவில்லையே...?"

"நன்றாக ஞாபகப் படுத்திப் பாருங்கள்."

"என்ன சொல்லி இருப்போம்... ம்... இப்ப நினைவுக்கு வந்துவிட்டது. கவலைப்படாதீர்கள் முல்லா... மனைவி இறந்த பாதிப்பு உங்களுக்குள் இருக் கத்தான் செய்யும். அந்த இழப்பை ஈடுகட்ட முடியாது. என்றாலும் உங்கள் ஆறுதலுக்காக ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து நாங்களே திருமணம் செய்து வைக்கிறோம்.' என்று சொல்லியிருப்போம். அதானே..."

"அதே... அதேதான். இப்போதும் உங்களிடம் இருந்து அப்படி ஒரு வார்த்தைக்காகத்தான் அழுது கொண்டிருக்கிறேன்."

"இப்போது நாங்கள் என்ன சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் முல்லா?"

"வேறென்ன... வேறு ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்து வைத்து நாங்கள் உம் மனதை ஆற்றவில்லையா.. அதுமாதிரி இந்த கழுதை போனாலென்ன... நண்பர்களாக நாங்கள் சேர்ந்து பணம் போட்டு வேறு ஒரு கழுதை வாங்கித் தருகிறோம் என்ற பேச்சு உங்கள் யார்வாயில் இருந்தும் வரவே இல்லையே...!"

முல்லா இப்படிச் சொல்ல நண்பர்கள் நிஜமாகவே அதிர்ந்து போனார்கள்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 26



★பெயர் - வாமதேவன் அனுஷன் ★தரம் - 7 ஏ
★பாடசாலை - வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்....

1. வி.விட்னி பிரான்சிஸ்கா, தரம் 6 ஏ, புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு.
2. இ.மணிவண்ணன், தரம் 6ஏ, சாம்பல் தோட்டம், நெளுக்குளம், வவுனியா.
3. திலுக்சியா சரவணபவன், தரம் 2பீ, இந்து மத்திய கல்லூரி, புத்தளம்.
4. டி.ஆர்.ஆன்.டிலுக்ஷி, தரம் 7 பீ, நல்லாயன் அரசினர் மகளிர் த.வி., கொழும்பு-13.
5. ஸ்ரீபாலகுமார் டயாழினி, தரம் 5பீ, இறம்பைக்குளம் மகா வித்தியாலயம், வவுனியா.

## அழகாக நிறம் தீட்டுங்கள் 18




**தம்பி, தங்கைகளே!** மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப் படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விபரங் களுடன் பிரசுர மாகும். எங்கே உங்கள் கைவண் ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிந்தனைத் துளிகள்



1. நல்ல நண்பர்களைத் தேடும் முன் நல்ல புத்தகங்களைத் தேடிக் கொள்வது நல்லது.
2. மனிதன் சோம்பேறி ஆகும்போது அவனது புத்தி என்ற தீபம் அணைகிறது.
3. செல்வம் சேர்க்க உழைக்காவிடினும், ஆரோக்கியத்துக்காகவாவது உழையுங்கள்.
4. சோம்பேறிக்கு எந்த வேலையும் கஷ்டம், ஊக்கமுள்ளவனுக்கு அந்த வேலையே எளிது.
5. கல்வி கற்பதைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது.
6. நல்ல செயல்களை செய்து முடி. கனவு காண்பதோடு நிற்காதே.
7. தெளிவற்ற பார்வையில் பயம் நிலைத்து நிற்கும்.
8. மனிதன்பால் அன்பு செலுத்துவதே உண்மையான அன்பு.
9. அன்பில்லாத மாளிகை இருண்ட குகை ஆகிவிடும்.
10. ஆசைகள், விருப்பு வெறுப்பில்லாத நிலையை அடையும் நாளே ஓய்வுநாள்.

தொகுப்பு: என்.பி. விஜயன்
கிளனல்பின், பதுளை.

## சிறுவர் கைவண்ணம்



ராகவன்,
தரம்-5
கிங்ஸ்டன் கல்லூரி, கொழும்பு-15.



திவ்யா,
தரம்-3,
கிங்ஸ்டன் கல்லூரி, கொழும்பு-15.



ஆர். புஸ்பகுமார்,
தரம்-5 ஏ,
கொ/புனித அந்தோனியார் த.ம.வித்தியாலயம்.




செல்வி பா.நிலாவினி, தரம்-3 வி.
வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை,
மட்டுநகர்.

# அன்பே! உன்...

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலை நெருங்கி வந்தது.

வானில் கருமேகம் சூழ்ந்துவிட இருள் திரை உலகின் மீது வியாபிக்க ஆரம்பித்திருந்தது.

கிறிஸ்தோபர் தன் வீட்டிலிருந்து புறப்பட்டார். அந்த இளம் பெண்ணின் அடுத்த அழைப்பிற்காக காரில் சுற்றிக் கொண்டிருந்தார்.

முதல் அழைப்பு வந்து பின்னர் தொடர்பு அறுந்ததல்லவா. அரை மணித்தியாலத்தின் பின்னர் அவளுடைய போன் இலக்கத்தை தனது பேரனில் தேடினார்.

அது-

பொது டெலிபோன் பூத்திலிருந்து எடுக்கப்பட்டிருந்தது.

கிறிஸ்தோபருக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. 'என்ன இது? பெரிய லெவலில் இருந்தாள். ஒரு மொபைல் கூடவா கையில் இல்லை.' என்று நினைத்தார்.

ஒரு மணித்தியாலத்தின் பின்னர் மறுபடியும் அந்த குரல் ஒலித்தது.

"சொரி டார்லிங்! என் மொபைலை எங்கே வைத்தேன் என்று தெரியவில்லை. அதுதான் பூத்திலிருந்து எடுக்கிறேன். புறப்படுங்கள். நான் ரயில் ஸ்டேஷனுக்கு திரும்பும் அந்த வளைவில் நிற்கிறேன். உங்கள் காரிலே போலாம்."

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்ட கிறிஸ்தோபர் ஓர் இளைஞனைப்போல புறப்பட்டுவிட்டார்.

அரை மணித்தியாலமாக அங்குமிங்குமாக சுற்றினார். அந்த இடத்தில் ஒருவரையும் காணவில்லை.

'திக்' என்றது. ஏதேனும் சதி நடக்குதோ என்று கூட நினைத்தார். திரும்பிப் போய் விடலாமோ என்ற எண்ணமும் ஏற்பட்டது.

இருள் விழுந்துவிட்டது.

வீதி விளக்குகள் எரிந்தன. மாலைப் பொழுதென்றாலும் அவற்றின் மஞ்சள் வெளிச்சம் ஒரு நிர்மானுஷ்யத்தையும், திகிலையும் ஏற்படுத்துவதாக இருந்தது. லேசாக மழைத்தூறல் விழுகின்றது.

அந்த இடம்-

சன நடமாட்டமே இல்லாது வெறிச்சோடிப் போன ஒரு பகுதி.

அப்போது தொலைவில்

நீண்ட மழைக்கோட் அணிந்த ஓர் உருவம் வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தது.

கிறிஸ்தோபர் இதைக் கண்டார். 'ஓ! காரை நோக்கி ஓடி வருவதாக தெரிகிறதே! ஒருவேளை அவள் தானோ.ஏதோ -ஆபத்தில் மாட்டிக் கொண்டவள் போல் அல்லவா ஓடி வருகிறாள். இதென்னடா தர்மசங்கடம்...!'

கிறிஸ்தோபர் தலையை சொறிந்து கொண்டார்.

காரை ஸ்ராட் செய்தார். அது மெதுவாக நகர்ந்தது. ஓ.. அந்த உருவம் காரை நோக்கித்தான் ஓடி வருகிறது. அதோ கையை வேறு ஆட்டுகிறதே. அவள்தான். அவள்தான்! மனம் படபடக்க காரை உருவத்தின் அருகில் கொண்டு போய்...

"ரிட்ஸ் ஹோட்டல்?"

"யெஸ்! யெஸ் ஓபன் த டோர்"

அந்த டெலிபோன் குரல்.

கதவை திறக்க அவள் ஒரு பாம்பென 'சரே'லென உள்ளே நுழைகிறாள்.

"ஏதேனும் பிரச்சினையா?"

"ஆமாம் நாலு தடியர்கள் விரட்டுகிறார்கள்."

ஆக்ஷிலேட்டர் அழுத்தப்பட்டது. வாகன வீதியில் கார் மின்னலோட்டம் போடுகிறது.

"தாங்ஸ் மிஸ்டர் கிறிஸ்தோபர்.. சரி காரை கொஞ்சம் மெதுவாக்கி, அதோ அந்த தேவாலயம் அருகில் மயான பூமி இருக்கிறதே அதன் பக்கத்தில் கொஞ்சம் நிறத்துங்கள்"

"ஏன்?"

"நீங்கள் என்னை பார்க்க வேண்டாமா?"

"அதுதான் முழுசாக பார்க்கப்போகிறேனே."

காரை கொஞ்சம் மெதுவாக்கினார், அப்போது-

'சரே'லென ஊசியொன்று அவர் மர்ம ஸ்தானத்தை ஊடுருவி கடூர வலியை தந்தது.

"ஆ...!"

நீதியரசர் அலறினார்.

"படுபாவி! அப்பாவியான என் தந்தையை கொலை குற்றத்திலிருந்து காப்பாற்றுவதற்காக என்னையும் என் அம்மாவையும் உன் காமப் பசிக்கு தீனியாகக் கேட்டாயே. நீயெல்லாம் மனிதப் பிறவியா...?"

'சரே'லென இன்னொரு சைனட் ஊசி.

சதைப்பிடிப்பான நீதியரசரின் தொண்டைக்குழியை ஊடுருவியது.

'ஆ!' வென்ற அலறல், வாகனம் நிலை தடுமாறியது. ஓடிக்கொண்டிருந்த அதிலிருந்து கீழே குதிப்பதற்கு முன்னர் பலம்கொண்ட மட்டும் ஸ்ரியரிங்கை திருப்பி விட்டார். வாகனம் வீதிக்கே திரும்பி பறந்தது. நீதியரசரின் கைகள் ஸ்ரியரிங்கிலிருந்து விடுபடவில்லை.ஏனெனில் அவர் உயிர் சில வினாடிகளில் பறந்துவிட்டது. வெறும் சடலமே வண்டியை ஓட்டுகிறது.

மின்னலென பறந்த வாகனம் விளக்குக் கம்பத்தில் மோதி குபீரென தீப்பிழம்பென விஷ்வரூபமெடுத்து சடசடவென எரிந்தது.

***

ஜோன் றைட் தம்பதிகளின் ஒரே மகள் கிறிஸ்டினா. அவர்கள் வீட்டு வேலைக்காரி தற்கொலை செய்து கொண்டாள். காதல் தோல்வியால் மனமுடைந்து போன அவள் கடிதம் எழுதி வைத்துவிட்டே தற்கொலை செய்து கொண்டாள். எனினும் பொலிஸ் கிறிஸ்டினாவின் தந்தையை சந்தேகப்பட்டது. அவர் நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டார். வழக்கு நடந்து கொண்டிருந்தபொழுதே கிறிஸ்தோபர் கிறிஸ்டினாவின் இளம் அம்மாவை தன்னை வந்து சந்திக்கும் படியாக சொல்லியிருந்தார். அப்போது அவர் வெளிப்படுத்திய ஆசை தான் அது. அது நிறைவேற்றப் படாததால் ஜோன்ரைட் மின்சார நாற்காலிக்குப் பலியானார்.

கிறிஸ்தோபரின் கொலை கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் கிறிஸ்டினா தனது முதிய வயதில் அதை கதையாக எழுதினாள். இயற்கையான மரணத்தை தழுவிக் கொள்வற்கு முன்னர் தான்தான் கொலையாளி என்பதையும் தந்தைக்காக பழிவாங்கியதையும் அவள் ஒப்புக் கொண்டாள்.

# 'றோ' தலைவரின் விளக்கங்களும்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுகுறித்து பரிசீலனை செய்யவும் கொள்கை வகுப்புக் கனவான்கள் தயாராக இல்லையென்றே தெரிகிறது.

ஏனெனில், எந்தவிதமான சக்திகள் ஸ்ரீலங்காவினுள் நுழையக்கூடாதென ஒப்பந்தம் செய்யப்பட்டதோ, அதனையும் மீறி அச்சக்திகள் தமிழினத்திற்கெதிரான போரில் பங்குகொள்ளும் போது, ஒதுங்கி நின்றால் பிராந்திய நலனிற்கு பங்கமேற்படலாமென அச்சமடைகிறது இந்தியா.

ஆதலால், தமிழ்மக்களால் நிராகரிக்கப்படக்கூடிய கோரிக்கையை, கருத்தரங்கங்கள் ஊடாக கொள்கை வகுப்பாளர்கள் முன்வைக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் ஏகதலைமைத்துவத்தை தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டாலும் இந்தியாவால் அதை ஜீரணிக்கக்கூடமுடியவில்லை.

இந்த முரண்பாட்டை எவ்வாறு தீர்ப்பதென்று ஏ.கே.வர்மா ஆய்வுசெய்தால், முழுப்பிராந்தியத்திற்கும் அச்சுறுத்தல் இல்லாத இணக்கப்பாடான தீர்வொன்றைக் காணலாம்.

அதுவரை இனஅழிப்பின் உச்சத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும் தமிழினம் இந்திய மனமாற்றம் ஏற்படும்வரை பொறுமை காக்கப்போவதில்லை.

வடக்கு-கிழக்கு இணைந்திருக்க வேண்டுமா இல்லையாவென்பதை அங்குள்ள பூர்வீக தேசிய இனமே தீர்மானிக்கும் உரித்துடையது.

இராணுவ பலம்கொண்டு சிங்களம் போடும் சட்டங்களும் தீர்மானங்களும் தமிழர் தலைமையின் இலட்சியத்தில் மாற்றமெதனையும் ஏற்படுத்தமுடியாது.

பிராந்திய வல்லரசுகளால் அதைத் தடுத்து நிறுத்தஇயலாது.

ஏனெனில், தாயகமென்பது பூர்வீக தேசிய இனத்தின் தனித்துவமான பிறப்புரிமை.

# ராசி பலன்

**24-09-2007 முதல் 30-09-2007**

பொ.சந்திரலிங்கம்

## மேடம்

**அச்சுவினி, பரணி,கார்த்திகை 1**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## இடபம்

**கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம்1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மிதுனம்

**மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1, 2, 3**

காரியத்தடையுண்டு. வார பிற்பகுதியில் பிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கடகம்

**புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. ஆமுலய வழிபாடு அமையும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## சிம்மம்

**மகம், பூரம், உத்தராடம் 1**

காரியத்தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல் லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. ஆலய வழிபாடு அமை யும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப் புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## கன்னி

**உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக் காலம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## துலாம்

**சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3**

காரியத்தடை இருக்கும்.வாரப் பிற்பகுதியில் பிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். பகை விலகும். உடல் நலமுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறைய லாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## விருச்சிகம்

**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1**

காரியத்தடை விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். பகை விலகும். உடல் நலமுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## மகரம்

**உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2**

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர்உதவுவர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். பகை விலகும். உடல் நலமுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## கும்பம்

**அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும் உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக் கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறைலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறைய லாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## மீனம்

**பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி**

காரியசித்திஉண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நில்வும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# ‘அனார்கலி’

# நடன நங்கைகளின் நாட்டிய மாலை






தமது சிஷ்யைகளுடன் திருமதி சிவானந்தி ஹரிதர்ஷன்.

திருமதி சிவானந்தி ஹரிதர்ஷனின் நெறியாள்கையில் இயங்கும் ‘நிர்த்தனா’ நாட்டியக் கலாமன்ற மாணவிகளின் ‘அனார்கலி’ பரதநாட்டிய நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு, கொழும்பு, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் அரங்கேறுகின்றது.
அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் இந்நிகழ்வுக்குத் தலைமை வகிக்கின்றார்.
பரதநாட்டியத் துறையில் நீண்ட அனுபவமும், பழுத்த ஞானமும் மிக்க விற்பன்னரான சிவானந்தி ஹரிதர்ஷன் கடந்த 32 ஆண்டுகளாக பரதநாட்டியத்தை முறையாகப் போதித்து இத்துறையில் பல தாரகைகளை உருவாக்கி வருபவர்.
பரதநாட்டியத்தை முறையாகக் கற்று இந்தியாவில் சென்னை, திருவான்மியூர் கலாஷேத்திராவில் பயின்று பட்டம் பெற்ற சிவானந்தி, சுமார் மூன்று ஆண்டுகள் ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேலின் கீழ் விசேட பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.
கலாஷேத்ராவின் ‘இராமாயணம்’ உட்பட பல்வேறு பரதநாட்டிய நிகழ்வுகளில் தமது நுணுக்கமான நடனத் திறமையைக் காட்டி நாடு திரும்பிய சிவானந்தி, இங்கு 1975 இல் நடனக் கல்லூரியை நிறுவி, புதிய பரதநாட்டிய பரம்பரை ஒன்றையே வித்தூன்றி வளர்த்து வருகின்றார்.
பாவம், தாளம், ராகத்தோடு நடன ஒளிவீசும் நிகழ்வுகளை அரங்கேற்றிவரும் சிவானந்தியின் சிஷ்யைகளது மற்றொரு அற்புத நடனவிருந்தை கொழும்பு கலாரசிகர்கள் 29 ஆம் திகதி கண்டுகளிக்க முடியும்.
இவரது சிஷ்யைகள் பலர் ஜீ.சீ.ஈ. சாதாரண தரத்திலும் ஏனைய பரீட்சைகளிலும் பரதநாட்டியத்தில் தொடர்ந்து சிறப்பு சித்திகளைப் பெற்று வருகின்றனர் என்பதுடன், பரதநாட்டியம் தொடர்பான தேசிய பரீட்சைகள் பலவற்றுக்கான பரீட்சகர்களில் இவரும் விதந்துரைக்கப்படும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
சிவானந்தியின் சிஷ்யைகள் பலரினதும் அரங்கேற்றங்களை வரிசையாகக் கண்டு மகிழ்ந்த பரதநாட்டிய ஆர்வலர்களுக்கு அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வழங்கும் இந்த நிகழ்வு ரசனைக்கு நல்ல விருந்தாகும் என்பது நிச்சயம்.



# ராமரும் சீதையும்

ராமர் பாலம் பெரும் பிரச்சினையை கிளப்பியது என்றால், சீதை விவகாரம், காஷ்மீரில் பிரச்சினையை கிளப்புமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.
எதற்கெடுத்தாலும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்று சொல்வது வழக்கம். அப்படி, கன்னியாகுமரி அருகே சமீபத்தில் ‘ராமர் பாலம்’ பிரச்சினை பெரிதாக வெடித்தது. உயர்நீதிமன்றத்தில், ‘ராமரே இல்லை’ என்று தொல்பொருள் ஆய்வுத்துறை வாக்குமூலம் தாக்கல் செய்ததை அடுத்து, பெரும் சர்ச்சை கிளம்பியது. பா.ஜ.க. மற்றும பல இந்து அமைப்புகள் போர்க்கொடி உயர்த்தின.
ராமர் பற்றி சர்ச்சை கிளப்பி, ‘அரசே இந்துமத உணர்வுகளைப் புண்படுத்துவதா?’ என்று அவர்கள் கூட்டாக கொந்தளிக்க, பிரதமர் மன்மோகன் சிங்கும், சோனியாவும் தலையிட்டு நீதிமன்றில் தந்த வாக்குமூலத்தை வாபஸ்வாங்க உத்தரவிட்டனர்.
ராமர்பால விவகாரம் இப்போது, காஷ்மீரிலும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், ராமர் பாலத்தால் அந்த மாநில அரசுக்கு தலைவலி வரப்போவதில்லை. ராமரைத் தொடர்ந்து சீதை விவகாரம் கிளம்பிவிடுமோ என்ற கவலைதான்.
பட்காம் மாவட்டத்தில், ‘சுட்டிஹரன்’ என்ற கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்தை சுற்றுலா இடமாக மாற்ற, காஷ்மீர் அரசு பல நடவடிக்கைகளை அதிரடியாக எடுத்துவருகிறது.
உசுட்டிஹரன்’ என்பது உண்மையில், ‘சீதாஹரன்’ என்றுதான் பழங்காலத் தொட்டு அழைக்கப்பட்டு வந்துள்ளது.
சீதையை இராவணன் இங்கிருந்துதான் இலங்கைக்குக் கடத்திச்சென்றான் என்பதற்கான புராண ஆதாரங்கள் உள்ளன. அந்த சீதாஹரன்தான் இப்போது சுட்டிஹரன் என்று அழைக்கப்படுகிறது. அந்த இடத்தை சுற்றுலா இடமாக அறிவித்தால், இப்போதுள்ள சூழ்நிலையில் இந்துமத அமைப்புகள் அந்த இடத்தை இந்து புனித தலமாக்கி விடுவார்களோ என்று காஷ்மீர் அரசு அஞ்சுகிறது.


HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்

No.35, Frankfourt Place, Bambalapitiya,Colombo - 04.
T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518485
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteen.com
Webxite:www.hotelwesteen.com